நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 194 | ஏப்ரல் 06 - ஏப்ரல் 26, 2000 | விலை ரூபா 10. 00



## மக்கள் மயப்படும் இனவாதம்!



## நோர்வேயில் உளவு வேலை எங்கள் பணியல்ல?



## கை மாறுகிறதா குடாநாடு?

அடுத்த இதழ் ஏப்ரல் 27இல்



# போரா சமாதானமா?



நன்றி - நூலகத்திட்டம்



## தொண்டர் ஆசிரியர் போராட்டம்: சாகும்வரை உண்ணாவிரதத்தை நோக்கி?

திருக்கோணமலை மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம் சுழற்சி முறையிலான தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டமொன்றைத் திருகோணமலையில் ஆரம்பித்திருக்கிறது. மார்ச் 23ல் மாகாணக் கல்வியமைச்சுக்கு முன்னால் தெருவோரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டம் இந்தச் செய்தி எழுதும் வரை முடிவு காணாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இது திருகோணமலை மாவட்டத்துக்கு மட்டும் உரித்தான பிரச்சினையல்ல. யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களுக்குமான பிரச்சினை. பிரச்சினைகளின் குவிமையம் கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவாகத்தான் இருக்கிறார். தொண்டர் ஆசிரியர்களின் கோபம் இவர் மீது தான் திரும்பியுள்ளது

சுந்தரம் டிவகலாலா பேச்சுவார்த்தைக்கு அழைத்தும், போக மறுக்கும் அளவுக்கு உண்ணாவிரம் இருப்போர் அவர் மேல் நம்பிக்கையற்றுப் போயிருக்கிறார்கள். உண்ணாவிரதம் ஆரம்பித்த அடுத்த நாள் டிவகலாலா, தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைப் பேச வருமாறு அழைத்திருந்தார். ஆனால், பிரதிநிதிகளோ உடனடியாகவே நிராகரித்து விட்டனர். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் "இந்த மனுஷன் இப்படி ஆறு தடவைகள் எங்களை ஏமாற்றிப் போட்டார்" என்பது தான்.

திருகோணமலை மாவட்டச் சங்கத்தில் 962 பேர் இருக்கிறார்கள். உண்மையான தொண்டர் ஆசிரியர்களுடன், அதிபர்களின் கடிதங்கள் மூலம் தொண்டர் ஆசிரியர் என்ற நாமம் தாங்கியவர்களும் கலந்து போயிருக்கிறார்கள். கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரது பிள்ளைகள் நாசூக்காகத் தொண்டர் ஆசிரியர்களாக மாற்றம் பெற்றிருக்கிறார்கள். இதுவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

அநேகமான தொண்டர் ஆசிரியர்கள், மூன்று வருடங்களுக்கும் மேலாகப் படிப்பித்தவர்கள். சிலர் பத்தாண்டுகள் கூடத் தொண்டர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இவர்களது கோரிக்கையெல்லாம் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் போது தங்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதே.

தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் ந. கலைச்செல்வன் கூறுகிறார், "நாங்கள் கண்ணை மூடிக் கொண்டு நியமனம் கேட்கவில்லை. தகுதியில்லாதவர்களையும் ஆசிரியர்களாக்குங்கள் என்று கோரவில்லை. ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் போது, எங்களில் தகுதியானவர்களை முதலில் உள்ளீர்த்துக் கொள்ளுங்கள் என்று தான் கூறுகிறோம். கொடுப்பனவுகள் இல்லாமலோ, சிறிய கொடுப்பனவுகளுடனோ தொண்டர் ஆசிரியர்களாகிய நாங்கள் எங்கள் சிறார்களின் கல்வியில் அக்கறை செலுத்தி உதவியிருக்கிறோம். எங்களது ஆற்றலைக் கல்வித் திணைக்களம் சந்தோஷமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறது. இந்த நிலையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை, எங்கள் மூலம் நிரப்பிக் கொண்டால் என்ன என்று தான் கேட்கிறோம்."

சங்கத்தின் மூலம் 1999ஆம் ஆண்டில் கல்விச் செயலர் சுந்தரம் டிவகலாலாவுடன் பேசியிருக்கிறார்கள். அப்போது கல்விச் செயலர் 1,500 வெற்றிடங்கள் இருப்பதாகவும், அவற்றை நிரப்பும்படி தனக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும், ஆனாலும் தான் அவற்றை நிரப்பப் போவதில்லையெனவும், தொண்டர் ஆசிரியர்களுக்கு முதலில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கத் தான் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் பிரதிநிதிகளிடம் ஆக்ரோஷமாகத் தெரிவித்திருக்கிறார்

பின்னர், வழமை போல் சுந்தரம் டிவகலாலா அமைதி கொண்டு விடத் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அவரை மீண்டும் சந்தித்துத் தங்கள் கஷ்ர நிலையை விளக்கியிருக்கிறார்கள். செயலர் கரிசனை கொள்வதாக இல்லை. ஜனவரி 03ஆம் திகதி உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தார்கள். செயலர் துடித்துப் பதைத்து "இப்போது வேண்டாம். சற்றுப் பொறுங்கள்" என்றிருக்கிறார், பெப்ரவரி 03ல் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க முடிவு செய்த போது அதையும் வினயமாகப் பேசி நிறுத்தி விட்டார்.

இப்போது, வேறு வழியின்றித் தங்கள் கடைசி முயற்சியாக, உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். ஆசிரியர் நியமனத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற இருக்கிறது. தங்களுக்கு நியமனங்கள் வழங்க முதல் வேறெவருக்கும் எந்த நேர்முகப் பரீட்சையையும் நடத்த அனுமதிக்கப் போவதில்லையென்று குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வடக்குக் கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. காரணத்தைத் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கல்விச் செயலரிடம் கேட்டபோது, அந்த நியமனங்கள் அரசியல் அழுத்தம் காரணமாகச் செய்யப்பட்டவை. முடிந்தால் நீங்களும் அரசியல் அழுத்தம் கொடுத்துப் பாருங்களேன் என்ற தோரணையில் பதிலளித்திருக்கிறார். தான் எந்த அரசியல்வாதிகளுக்கோ, அவர்கள் கொடுக்கும் அழுத்தங்களுக்கோ அஞ்சுபவனல்ல என்று மேடைகள் தோறும் டிவகலாலா மார் தட்டுவது வேறு விடயம்.

இந்தப் போராட்டம் நியாயமானது. "படிப்பித்தோம்: அதற்காகக் கல்வித் தரங்களைப் பாராது நியமனம் வழங்குங்கள்" என்று அவர்கள் கேட்கவில்லை. "பின் கதவால் எங்களை நுழைத்து விடுங்கள்" என்றும் அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் நியாயபூர்வமாக நடந்து கொள்ளுங்கள் என்பதே. இந்தத் தொண்டர் ஆசிரியர்களிடம் உள்ள தவறு என்னவென்றால் வடக்குக் கிழக்கு மாகாண சபையில், அதுவும் கல்வியமைச்சில் நீதி, நியாயங்கள் கிடைக்கும் என நம்பியது தான்.

அரசியல் கட்சிகளிடமிருந்து மாத்திரமல்ல, பொது மக்கள் மத்தியிலிருந்தும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவுகள் எழுந்துள்ளன. மார்ச் 29இல் மட்டக்களப்பிலும் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. வவுனியாவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மாகாணக் கல்வியமைச்சில் நம்பிக்கை இழந்து போன நிலையில் இளைஞர்கள், இப்போது கொழும்புக் கல்வியமைச்சையும், அமைச்சரையுமே எதிர்பார்த்துப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள். தமிழ்க் கட்சிகளும் இவர்கள் விடயத்தில் கரிசனை எடுத்துள்ளன. த. வி. கூ. செயலதிபர் இரா. சம்பந்தன் பா. உ., இவர்கள் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அவசரச் செய்தி அனுப்பியுள்ளார். ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா. உவும் தலையிட்டுள்ளார். புளொட் தலைவர் சிந்தார்த்தன் பா. உவும் உண்ணாவிரதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

ரெலோ, ஈ. பீ. ஆர். எல். எவ். அமைப்புகளும் தங்கள் பிரதிநிதிகள் மூலம் உண்ணாவிரதம் இருப்போருடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன. இதேவேளை, வடக்குக் கிழக்குப் பொது ஆசிரியர் சங்கமும், ஏப்ரல் 05ல் நடத்தவுள்ள சுகயீன லீவுப் போராட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும், தனது 13 கோரிக்கைகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது.

வடக்குக் கிழக்குப் பொது ஆசிரியர் சங்கத்துடன், வடக்குக் கிழக்குத் தமிழ் ஆசிரியர் ஒன்றியம், திருகோணமலை மாவட்ட அதிபர்கள் சங்கம், பட்டதாரிகள் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஆகியவையும் போராட்டத்தில் இணைந்து கொள்வதாகப் பிரச்சாரச் செயலாளர் சி. நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

சுழற்சி முறைப் போராட்டம், சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றமடைவதற்கு முன்னர், இந்த இளைஞர்களுக்கு நல்ல பதில் கூறவேண்டியது சம்பந்தப்பட்டோரின் தலையாய கடமை.

**— விவேகி**





## ✓கலாநிதி அல்ல கல்லாநிதி

ஜனாதிபதியாக வருபவருக்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும்?

அவர் ஒரு இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். தேர்தலில் 50சத வீதத்திற்கும் அதிகமான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இந்த இரண்டும் இருந்தால் இலங்கையின் ஜனாதிபதியாவதற்கு உரிய தகுதியை வாக்களிக்கும் வயதுக்கு வந்து விட்ட எவரும் பெற்றுவிட முடியும்.

அவரது சாதி, மதம், இனம், பால் என்பனவோ, அவரது கல்வித்தகுதியோ அவரது தகுதிக்கு ஒரு போதும் குறுக்காக நிற்க முடியாது.

அவர் ஏழையா பணக்காரரா என்பது கூட அந்தத் தகுதியை மறுத்துவிட முடியாது. - இவையெல்லாம் இலங்கையின் அரசியலமைப்பு சட்டம் கூறும் விடயங்கள்.

ஆனால், எமது நாட்டில் பதவிக்கு வருகிற ஜனாதிபதிக்கோ இதைவிட வேறு சிறப்புகளும் தமக்கு அவசியம் என்று ஏனோ தோன்றி விடுகிறது.

தாம் பௌத்த மதத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்: அதற்காக தாம் அல்லும் பகலும் செயற்படுபவர்களாக இருக்க வேண்டும்: சிங்கள மக்களின் நலன்களை, சிங்கள இ... ...த்தை கட்டிக்காப்பவர்களாக இருக்க வேண்டு... இவையெல்லாம் தமது கடமையென்பது அவர்களது அப்பிராயம்.

இவையெல்லாவற்றையும் கூட அவர்கள் தேர்தலில் 50க்கும் அதிகமான வாக்குகளை பெறுவதற்கான ஒரு நோக்குடன் செய்வதாகக் கூறி ஒதுக்கிவிடலாம்.

ஆனால், கல்வி?

ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் தன்னை ஒரு பழைய "சென்ற் ஜோசேப்" கல்லூரி மாணவன் என்று கூறிக் கொள்வதை விரும்பினார். அதை நிரூபிப்பதற்காக அவர் பழைய ஆவணங்களில் மாற்றம் செய்ய முயன்றதாக கூறும் குற்றச்சாட்டுக்கள் உண்டு.

ஜனாதிபதி பிரேமதாச ஒன்றும் "அதிகம் படித்த" மனிதர் அல்ல. அவரைப் படிக்காதவர் என்று அவரது சகாக்கள் ஒதுக்கித் தள்ள முயன்றார்கள். அதற்காகவேனும் அவர் தன்னைப் படித்தவராக காட்டிக் கொள்ள வேண்டுமென்ற தேவை அவருக்கு இருந்தது.

ஆனால், சந்திரிகாவுக்கு?

அவரை யாரும் படிக்காதவர் என்று குறைகூறவில்லை. எங்கே படித்தார் என்று கேள்வி கேட்கவில்லை. ஆனாலும், அவர் தான் படித்து அரசியல் விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்று திரும்பத் திரும்பக் கூறிவந்தார்.

வெறும் கலைமாணிப் பட்டத்துடன் நிற்பதும் அவருக்கு திருப்தி தரவில்லை. சட்டத்துறைப் பட்டமும் பெற்றவர் என்று அறிவித்தார். அதுவும் போதவில்லை அவருக்கு.

அபிவிருத்திப் பொருளாதார துறையில் தான் கலாநிதிப் பட்டம் பெற்றதாக வேறு சொல்லத் தொடங்கினார். அதுவும் பிரெஞ்சுப் பல்கலைக்கழகத்தில் அவரது உத்தியோகபூர்வ கல்வி விபரமாக இது வெளியிடவும் பட்டது.

வந்தது வினை.

அவரது கல்வி பற்றிய அந்தத் தகவல்கள் தவறா சரியா என்று ஜனாதிபதியை விளக்கம் கோரியது சண்டே லீடர் பத்திரிகை.

"நாம் மனிதர்களுடன் தான் பேசுவோம். புழுக்களுடன் அல்ல" என்று இதற்கு பதிலளித்தது ஜனாதிபதி செயலகம். முடிவு-?

ஜனாதிபதி கலாநிதிப் பட்டம் அல்ல சாதாரண கலைமாணி பட்டம் கூட பெற்றவர் அல்ல. அதுவும் பிரெஞ்சுப் பல்கலைக்கழகத்தின் அவர் சொன்ன சோர்வேன் (Sorbonne) பல்கலைகழகப் பக்கம் அவர் போனதாகக்கூட தெரியவில்லை என்று துருவியிருக்கிறது அந்தப் பத்திரிகை.

"சந்திரிகா பேசும்போது அவரது மூளை உறங்கி விடுகிறது. மூளைவேலை செய்யும் போது அவர் மௌனமாகி விடுகிறார்" என்பார் நமது நண்பர் ஒருவர்.

துயரம் என்னவென்றால், உண்மை பேசுபவரைவிட, பொய் பேசுபவருக்கு அதிக மூளை அவசியம் என்பது தான்! அதுமட்டுமல்ல, அவர் விழிப்பாகவும் இருக்க வேண்டும்...!

## ✓ வியாபாரிகளின் காலம்!

உலகத்தில் நடக்கின்ற விசித்திரங்களைப் பற்றி யோசித்தால் சிலவேளைகளில் உங்களுக்கு ஒரே குழப்பமாகிப் போய்விடும்.

வாழ்நாள் முழுக்க தீவிரமான வேகத்துடன் ஒரு செயலில் ஈடுபட்டார்கள், அது பயனற்றது என்று இறுதி நேரத்தில் சொன்னால் எப்படி இருக்கும்?

'Any peace in better than a good war' (எப்படிப்பட்ட ஒரு சமாதானமும் கூட ஒரு நல்ல யுத்தத்தைவிட சிறந்தது தான்) என்கிறார் இஸ்ரேலின் முன்னாள் ஜெனரல் யாக்கோவ் இவன்.

வாழ்நாள் முழுக்க யுத்தத்திற்காக இயங்கிய, நோர்வே, இந்தியா, ரஸ்யா, இஸ்ரேல், ஜோர்டான், கிரிஸ், சூடான், தான்சானியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளை சேர்ந்த 31 அனுபவம் வாய்ந்த முன்னாள் இராணுவ ஜெனரல்கள் "நாம் எமது வாழ்வை யுத்தத்துக்காக அர்ப்பணித்தோம். ஆனால், சமாதானம் மட்டுமே நம்பிக்கை தரும் ஒரு வழியாக உள்ளது" என்று அறிவித்திருக்கிறார்கள்.

பயங்கரவாதத்துக்கு எதிராக எவ்வளவு தான் இராணுவ ரீதியான அணுகுமுறையை அரசாங்கம் கடைபிடித்தாலும், அதை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது அரசியல் அடிப்படையிலான முயற்சிகளாலேயே சாத்தியம் என்று வேறு அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அண்மையில் (WCARGA) என்ற ஓய்வு பெற்ற ஜெனரல்கள் மற்றும் அட்மிரல்களின் உலகளாவிய அமைப்பு வெளியிட்ட பிரகடனம் ஒன்றிலேயே இத்தகவல்கள் அடங்கியுள்ளன.

ஆனால், வாழ்நாள் முழுவதும் அன்பையும், அஹிம்சையையும் போதித்த புத்த பகவானின் வழிவந்த பௌத்த மதபீடங்கள் இங்கு அரசியல் கலந்துரையாடலை ஒதுக்கிவிட்டு யுத்தத்தை நடாத்துமாறு அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுக்கின்றன.

எவ்வளவு விசித்திரம் பாருங்கள்.

யுத்தம் பற்றி அன்று பேசிய ரணில் இன்று புலிகளுடன் பேசச் சொல்கிறார். சமாதானம் பேசிய சந்திரிகா யுத்தத்தை நடாத்துகிறார். ஆக, இதில் எது உண்மை-? குழப்பம் தான் மிஞ்சுகிறது.

"இதில் குழப்பமென்ன வேண்டிக் கிடக்கிறது. யுத்தமும் சமாதானமும் அவரவர் இருக்கும் இடத்தை பொறுத்து மாறுபடுகிற இரு வியாபாரப்பண்டங்கள் அவ்வளவு தான்." என்கிறார் நண்பர்.

ஆக, விற்கும் பொருள் தான் மாறுகிறதே ஒழிய வியாபாரம் நடக்கத்தான் செய்கிறது.

என்ன செய்ய,

இது வியாபாரிகளின் காலம்!

நன்றி - நூலகத்திட்டம்



# "எல்லோரையும் திருப்திபடுத்தும் தீர்வு சாத்தியமில்லை!"

**தூதுவர் விபுல் வணிகசேகர**



தற்போதைய பேச்சு வார்த்தை முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பு தொடங்கிய கையோடு நோர்வேயில் இலங்கை தூதுவராலயமும் நிறுவப் பட்டது. இது திறக்கப்பட்டது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இதனை தூதுவரின் மூலமாகவே அறியும் பொருட்டு சரிநிகர் கண்ட நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

விபுல வணிகசேகர இதற்கு முன்னர் மலேசியாவில் கோலாலம்பூரில் இயங்கிய இலங்கைக்கான தூதுவராலயத்தில் கலாசாரப் பிரிவுக்குப் பொறுப்பாக செயற்பட்டு வந்தவர். இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இலங்கையின் உல்லாசப் பிரயாணத் துறையை வளர்க்க நோர்வேயில் உள்ள வாய்ப்புகளையும் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயத்தை அமைப்பதற்கான சூழ்நிலைகளையும் ஆராய்ந்து வரும்படியும் இவரை நோர்வேக்கு அனுப்பி வைத்திருந்தது. கடந்த 1999 செப்டம்பர் ஒக்டோபர் மாதங்களில் நோர்வே வந்து அவற்றை ஆராய்ந்து இலங்கை அரசுக்கு அளித்த அறிக்கையின் பின் இவர் இலங்கையின் தூதுவராக இங்கு நியமிக்கப்பட்டு டிசம்பரில் இருந்து பணிபுரிந்து வருகிறார். கர்நாடக சங்கீதம் பயின்ற இவர், ஒரு முருக பக்தர். கை மணிக்கட்டில் முருகனின் படம்பொறித்த செம்பு கட்டியுள்ளார். வெள்ளவத்தை மற்றும் கோலாலம்பூர் போன்ற இடங்களில் கர்நாடக சங்கீதக் கச்சேரியில் பாடியுள்ளதாகவும் அவர் எம்மிடம் தெரிவித்தார்.

***தூதுவராலயம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னணியை விளக்குவீர்களா?***

அரசாங்கம் நோர்வேயில் இலங்கைக்கான தூதுவராலயத்தின் அவசியத்தை உணர்ந்தது. அதற்கு முன் இலங்கையின் விவகாரங்களை ஸ்டோக்ஹோமில் (சுவீடன்) உள்ள தூதுவராலயமே கவனித்து வந்தது. இங்கு உள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இதுவரை அவ்வளவு தூரம் சென்று தங்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. நேரம், பொருட்செலவு அதிகம். வெறுமனே தமிழ் மக்களுக்காக மட்டுமல்ல முதலீட்டுத்துறை, உல்லாசப் பிரயாணத்துறை, பல்வேறு உதவிகள், என்.ஜீ.ஓ. செயற்பாடுகள் என மிகுந்த தேவையிருந்தது. நான் வந்த இந்தச் சிறிது காலத்துக்குள் வர்த்தக முதலீட்டுத்துறையிலும் சிலவற்றை சாதிக்கக் கூடியதாக இருந்தது. உயர்ந்தபட்சம் எங்கள் சேவையை வழங்குவது தான் எங்கள் இலக்கு.

***இவ்வளவு காலமும் இல்லாமல் இப்போது திடீரென இது ஆரம்பிக்கப்பட்டதன் உள்நோக்கம் என்ன? தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கும் இதற்கும் ஒரு சம்பந்தமுமில்லையா?***

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புக்கும் தூதுவராலய திறப்புக்கும் நேரடித் தொடர்பு இல்லை. மேலும் இது திறக்கப்பட்டதன் பின்னர் தான் சமாதான முயற்சிகளும் தொடங்கப்பட்டன. தூதுவராலயம் திறக்கப்பட்டு ஒன்றரை மாதங்களின் பின்னர் தான் நோர்வே வெளிவிவகார அமைச்சரும் இலங்கை சென்றார். நாங்கள் மிகவும் வெளிப்படையாகவே எமது கடமைகளைச் செய்து வருகிறோம். எவரும் சந்தேகிக்க இது குறித்துச் சந்தேகிக்க வேண்டியதில்லை. எந்த உள்நோக்கங்களுடனும் நாங்கள் இல்லை.

***உள்நாட்டிலேயே இப்படி ஒரு தூதுவராலயம் திறக்கப்பட்டதனால் இனி அரசியல் தஞ்சம் கோருவோரை குறுகிய காலத்தில் திருப்பி அனுப்புவது நோர்வேக்கு இலகுவானது. இது இலங்கைக்கு வாய்ப்பானது எனும் கருத்து உள்ளதே?***

அரசியல் தஞ்சம் கோருவோரை திருப்பி அனுப்புவது குறித்து நோர்வே முடிவு செய்திருந்தால் எப்படியும் திருப்பி அனுப்புவது நிகழத்தான் செய்யும். இதுவிடயத்தில் நாங்கள் இங்குள்ள இலங்கை பிரஜைக்கு வழங்குவது ஒரு போக்குவரத்து ஆவணம் மட்டுமே. மற்றும்படி நீங்கள் கூறுவது பிழையான கருத்து.

***பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வசிக்கும் நோர்வேயில் ஏன் தமிழ் தெரியாத ஒருவரை தூதுவராக இலங்கை நியமித்துள்ளது? இது குறித்து aftenpoften பத்திரிகைக்கு நீங்கள் வழங்கிய பேட்டியிலும் கேட்கப்பட்டிருந்தது.***

எந்தவொரு தூதரகத்திற்கும் தகுதியுடைய இலங்கையரைத் தான் வெளிவிவகார அமைச்சு நியமனம் செய்யும். இனப்பாகுபாட்டின் அடிப்படையிலல்ல. நான் எந்தவொரு விண்ணப்பப்படிவத்திலும் எனது தேசியம் பற்றிய கேள்விக்கு இலங்கையன் என்று தான் குறிப்பிட்டு வந்துள்ளேன். நான் சிங்களவன் அல்ல. ஏன் தமிழில் கருமமாற்றுகிறீர்கள் இல்லையென்கிற கேள்வியை என்னிடம் கேட்க முடியும். அதற்காகத் தான் தமிழ் தெரிந்த டீன் என்பவரை இங்கு சிரேஷ்ட அதிகாரியாக நியமித்திருக்கிறோம்.

மலேசியாவில் நான் கடமையாற்றிய போது அங்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் பலருடன் இருந்திருக்கிறேன். அவர்களில் பலருக்கு என்னை நன்றாகத் தெரியும். இன்றைய இனப்பிரச்சினைக்கும் அடிப்படை அந்தக் கருத்தியல் தான்.

***அவ்வாறான கருத்தியலுக்கு தள்ளிய அரசியல் வரலாற்றுக் காரணிகள் உண்டு. இங்குள்ள தமிழர்களிடம் அவ்வாறு சந்தேகமும் பயமும் இடைவெளி நிரம்பியும் இருக்கும் போது எப்படி முன்வருவார்கள்?***

அதனை நான் எனது செயலில் தான் காண்பிக்க முடியும். அவர்களுடன் நான் பழகும் விதம் அவர்களுக்கு நான் உதவி செய்யும் விதத்திலும் தான் நிரூபிக்க முடியும். வாயால் முடியாது. இங்கு வந்துள்ளவர் ஒரு இலங்கையர் என்பது அப்போது பலருக்குத் தெரிய வரும்.



***சரி; இந்த நான்கு மாதத்தில் அந்த இடைவெளியை நீக்க நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?***

நாங்கள் ஒரு அலுவலகத்தை திறந்ததற்காக மேசை கதிரையோடு எங்கள் கடமை முடிந்து விடும் என்று எண்ணவில்லை. மக்கள் எங்களிடம் வருமுன் மக்களிடம் முதலில் போவது தான் ஒரு அதிகாரியின் கடமை. உதாரணத்திற்கு தூதுவராலயம் திறக்கப்பட்ட போது இங்குள்ள வர்த்தகர்கள், டிரவல் ஏஜென்சிகள், 15 சமூக நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என பலருக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். தனிப்பட்ட ரீதியில் சென்று நான் பலரை அழைத்திருந்தேன். உங்களுக்குக் கூற வேண்டிய ஏதேனும் இருந்தால் கூறுங்கள். அதனை நான் தனிப்பட்ட ரீதியில் எடுக்க மாட்டேன் எனப் பலருக்கும் கூறியிருந்தேன். ஆனால் மிகச் சிலரே வந்திருந்தார்கள். பாடகர் சுபாஷ் எனது நண்பர். அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த போதிருந்து எனக்குப் பரிச்சயமானவர். தற்போது அவர் இங்கு தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் மோசமான நிலையில் இருக்கிறார். வாராவாரம் சென்று அவரைப் பார்த்து வருவேன். அவருக்கு நாங்கள் ஒரு பூசையும் செய்தோம். இங்குள்ள தமிழ் பிரமுகர்களின் வீட்டுக்கு சென்று பேசியுள்ளோம். பேராசிரியர் சண்முகரட்ணம், சச்சி போன்றோரை வீடுகளில் சந்தித்து பேசினோம். பல தமிழர்கள் என்னோடு உட்பயத்தோடு பேசுவதை என்னால் உணர முடிகிறது. சிலர் தங்களை சந்தித்தது வெளித் தெரிய வேண்டாம் என்கின்றனர். தமிழ் மக்கள் புழங்கும் இடங்களுக்குச் சென்று வருகிறேன். கலாசார நிகழ்ச்சிகள் பலவற்றுக்கு அழைப்பு இல்லாமல் கூட சென்று வந்திருக்கிறேன். தூதுவராலயத்தின் சேவை குறித்து மக்களிடம் விளக்க எமக்கு பொது நிகழ்ச்சிகளில் வாய்ப்பளிக்கும்படியும் பலரை வேண்டியிருந்தோம். அவர்களின் அபிப்பிராயத்தை அறியவோ எங்கள் அபிப்பிராயங்களைப் பகிரவோ முடியவில்லை. நான் இங்குள்ளவர்களுக்கு கூறுவது, என்னை ஒரு இலங்கையனாக நடத்துங்கள். தொடர்ச்சியாக விலகி நின்றால் வீணான இனக் குரோதங்கள் தான் மிஞ்சும். இவ்வாறான நிலையில் கொஞ்சம் சிரமம் தான்.

***தூதுவராலயம் திறக்கப்படும் முன்னமே அது குறித்து ஒஸ்லோவில் பரவலான சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. முக்கியமாக உளவுச் சேவைகள் இதனூடாக முடுக்கி விடப்பட்டுள்ளது போன்றது. தூதரக நிறுவலின் பின்னணியில் அப்படி ஏதாவது உண்டா?***

இங்குள்ள மக்களுக்கு மூடிமறைக்க ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் தானே அவர்கள் பயப்பட வேண்டும். இங்கு இயங்கும் புலிகள் அமைப்புக்கோ அல்லது அதன் முன்னணி அமைப்புகளுக்கோ மறைக்க ஒன்றும் இல்லையென்றால் இந்தக் காரியாலயம் குறித்து பயப்பட வேண்டியதில்லையே. மேலும் தூதரகங்கள் அனைத்தும் உளவுச் சேவைக்காக நிறுவப்படுவதில்லை. நாம் மிகவும் பகிரங்கமாகப் பணிபுரிகிறோம். இதோ எமது அலுமாரிகள் கூட திறந்து தான் இருக்கின்றன. எவரும் தாராளமாகத் திறந்து பார்க்கலாம். நாங்கள் செய்வதையும் சொல்வதையும் வெளிப்படையாகவே செய்கிறோம். ஒரு உளவுச் சேவையை நடத்துவதாயிருந்தால் அரசாங்கம் ஒரு பொலிஸ் அதிகாரியை அல்லவா அனுப்பியிருக்க வேண்டும். நான் உளவுச் சேவைப் பயிற்சியோ அல்லது இராணுவப் பயிற்சியோ பெற்றவன் அல்ல. அது தவறான பீதி.

***தற்போதைய பேச்சுவார்த்தை முயற்சிகளில் தூதுவர் என்கிற நிலையில் எவ்வகையான பங்கை ஆற்றலாம் எனக் கருதுகிறீர்கள்?***

இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர நோர்வே அரசு முன்வந்துள்ளது. நோர்வேயின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் வொல்லேபேக் அவர்கள் இலங்கை சென்று ஜனாதிபதி, எதிர்கட்சித் தலைவர், வெளியுறவு அமைச்சர் அனைவரையும் சந்தித்து பேசிவந்தார். பேச்சுவார்த்தைக்கு முன்னரான பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. இங்கு சத்திரசிகிச்சையை முடித்துவிட்டுத் திரும்பிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தமது தரப்பு நிலைப்பாடுகளைத் தெரிவித்திருக்கிறார். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. இதில் எமது பாத்திரம் எந்தெந்த இடங்களில் என்பது குறித்து எம்மால் எதுவும் கூற முடியாது. ஒட்டுமொத்த முயற்சியில் எமது பங்களிப்பை ஆற்றி வருகிறோம்.

***தற்போதைய நிலைமை என்ன?***

இந்த நடவடிக்கைகளைத் தொடங்கிய கட்சி பதவியில் இல்லை. புதிதாக பதவியிலமர்ந்துள்ள கட்சியின் வெளிவிவகார அமைச்சர் ஜக்லான் இம்முயற்சியை தொடர்ந்து வருகிறார். ஆரோக்கியமான முறையில் தொடர்கின்றன.

***தற்போதைய பெரும்பான்மை பலமற்ற அரசாங்கமும் எந்தநிலையிலும் பதவி கவிழலாம் என்கிற நிலையிலும்; ஜக்லான்ட் அவர்கள் பலஸ்தீனப் பிரச்சினையைக் கையாண்ட விதம் குறித்த சந்தேகங்கள் உள்ள நிலையிலும் இதன் சாத்தியப்பாடு எவ்வாறிருக்கும்?***

தற்போதைய சமாதான முயற்சியானது நோர்வேயின் வெளியுறவுக் கொள்கையின் பாலானது. இது நேர்மையானது. இது அரசாங்கத்திற்கு அரசாங்கம் மாறுமென்று எண்ணி விட முடியாது. ஜக்லான்ட் அவர்களின் உறுதி மொழி இதற்கு உதாரணம். நபர்களின் தனிப்பட்ட ஈடுபாடு ஒரு காரணமாக இருக்கும் என்று நான் நம்பவில்லை.

***வொல்லபேக் அவர்கள் விட்ட இடத்திலிருந்து ஜக்லான்ட் அவர்கள் தொடர்வார் என்கிறீர்களா?***

ஆம், ஜக்லான்ட் அவர்கள் அதற்காக தற்போது எரிக் சுல்ஹைன் என்பவரை நியமித்துள்ளார்.

***இதுவரையான ஜக்லான்ட் அவர்களின் முயற்சிகள் என்ன?***

அவர் இப்போது தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். மேலும் ஐரோப்பிய சமூகத்தின் உறுப்புரிமை குறித்த சில விடயங்களில் ஈடுபட்டிருக்கிறார் அவர். அதைவிட மேலும் பல உள்நாட்டுப் பிரச்சினைகளில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கை விடயம் குறித்து அவரது பணிகள் குறித்து நாம் கருத்து கூற கால அவகாசம் குறைவு.

***இதனைத் தொடக்கிய வொல்லேபேக் அவர்கள் தற்போது அந்நியமாகவா இருக்கிறார்?***

இல்லை. அவர் ஒரு வெளியுறவு அமைச்சராக இருப்பதற்கு முன்னர் இருந்து அவர் ஒரு வெளியுறவுத்துறை அதிகாரி. இப்போதும் அவர் அத்துறையிலிருந்து அவரது பங்கை ஆற்றி வருகிறார்.

***இந்தப் பேச்சுவார்த்தை எப்படியிருந்த போதும் அரசு வழங்கப் போகும் தீர்வாக குறிப்பிடும் "பொதி"யை அரசுடன் உள்ள தமிழ் கட்சிகள் கூட இது வரை ஏற்காத நிலையில் இந்தத் தீர்வு சாத்தியம் என்கிறீர்களா?***

தமிழ் கட்சிகள் எதுவும் ஏற்கவில்லை என்பது தவறு. புலிகள் தவிர அனைவரும் இதற்கு ஆதரவளித்தனர். இந்தத் தீர்வு யோசனைகளை தயாரித்தவர்களில் முக்கியமான ஒருவர், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நீலன் அவர்கள். மேலும் ஜனாதிபதி அவர்கள் தன்னிச்சையாக இதைச் செய்யவில்லை. பலருடைய ஆலோசனைகளை உள்வாங்கினார். தமிழ் கட்சிகள் சிற்சில ஆலோசனைகளை முன்வைத்தனர்.

***இல்லை; முதலில் 1995 ஒகஸ்டில் முன்வைத்த தீர்வு யோசனையை ஏற்காத பல தமிழ் கட்சிகள் தங்களின் மாற்று தீர்வு யோசனைகளை தனித்தனியாக முன்வைத்தனர். விடுதலைப் புலிகள் கூட "அரசாங்கத்துடன் இருக்கிற தமிழ் கட்சிகள் கூட இதனை ஏற்கவில்லையே" என கேள்வியெழுப்பியிருந்தனர். நீலன் கூட தனிப்பட்ட பாத்திரத்தை ஆற்றியிருந்த போதும்; அவரது கட்சி அந்த யோசனைகளோடு முழுமையாக உடன்பட்டிருக்கவில்லை. மேலும் இன்று; அக்கட்சிகள் அதிருப்தியுறும் வகையிலான அதிகார குறைப்புகள் செய்யப்பட்ட ஒன்று முன்வைக்கப்பட்ட நிலையில் தற்போதைய பேச்சுவார்த்தையில் என்ன பிரயோசனம்?***

தமிழ் கட்சிகள் அனைத்தும் தங்களின் யோசனைகளை முன் வைக்கத் தான் செய்தன. தமிழ் கட்சிகள் வெவ்வேறு விடயங்கள் குறித்து தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்து வந்துள்ளன. மேலும் அதற்காக அக்கட்சிகள் அனைத்தும் தீர்வு யேசனைகள் விடயத்தில் விலகியும் நிற்கவில்லை. அனைத்தும் அக்கறை செலுத்தி வருகின்றன. அக்கட்சிகளை விலக்கி விட்டு எந்த முயற்சியையும் அரசாங்கம் செய்யவில்லை. மேலும் எல்லோரையும் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வு எப்போதும் கிடைக்குமென்றும் நான் தனிப்பட்ட ரீதியில் நம்பவில்லை. எப்படியோ ஒரு தீர்வு கூடியவிரைவில் கிடைக்குமென்று நான் நம்புகிறேன்.

***அதாவது தமிழ் தரப்பு ஏற்கும் ஒரு தீர்வு கிடைக்குமென்றா?***

ஆம், அதில் சந்தேகமில்லை. சகலரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். அது தான் இந்த யோசனையில் உள்ள வரலாற்று முக்கியத்துவம். இதில் புலிகளும் சம்பந்தப்பட்டிருந்தால் எவ்வளவு இலகுவாக இருந்திருக்கும். தன்னைக் கொல்ல முயற்சித்த ஒரு தரப்போடு மீண்டும் மீண்டும்-பேச்சுவார்த்தைக்கு முன்வரும் ஒருவரை எமது ஜனாதிபதியைத் தவிர உலகில் வேறெவரையாவது காண முடியுமா?

**நேர்காணல்**
**என்.சரவணன்**

நன்றி - நூலகத்திட்டம்



# கிண்ணியாவிலும் இனச்சுத்திகரிப்பு?

ஒரு கிராமத்தான் பட்டணத்துக்கு வந்தான். கடையொன்றில் சில பொருட்களைக் கொள்வனவு செய்தான். கடைக்காரரின் பார்வையில் அவன் வெகுளியாகவும், அப்பாவியாகவும் தெரிந்தான். என்றாலும் கடைக்காரர் அவனுடன் நேர்மையா-கவே நடந்து கொண்டார்.

பொருட்களுக்கான பணத்தை கடைக்காரர் கேட்ட போது அவன் சங்கோஜத்துடன் உள்ளாடைக்குள் கையை விட்டு ஆயிரம் ரூபாய் நோட்டை இழுத்து நீட்டினான். "ஐயா நாங்கள் கிராமத்தான்கள். பட்டணத்துக்காரர் போல படிப்போ, அறிவோ ஏமாற்றிப் பிழைக்கும் கெட்டித்தனமோ எங்களுக்குக் கிடையாது. பட்டணத்துக்காரங்கள் பொல்லாதவங்கள். அதுதான் பணத்தை இப்படிப் பத்திரமாக வைத்திருக்கிறேன் என்று வியாக்கினம் வேறு சொல்லிக் கொண்டான். "உண்மை தான் சில மோசமான பட்ட-ணத்துக்காரங்களால எல்லோருக்குந் தான் தலைகுனிவு" என்றபடியே கடைக்காரரும் மீதி-யைக் கொடுத்தார்.



கிராமத்தான் பல கடைகளில் ஏறி இறங்கினான். பல பொருட்களை வாங்கிக் கொண்டான். பொருட்களுடன் ஊருக்குப் புறப்படும் பஸ்ஸில் ஏறி அமர்ந்த பின்னர் தன்னைத் தானே இப்படிப் பாராட்டிக் கொண்டான். எப்படித் தெரியுமா? "அப்படா கொண்டு வந்த கள்ள நோட்டுக்களை கெட்டித் தனமாக மாற்றி விட்டேன்" என்று தான்.

இப்படிக் கெட்டித்தனமாகத் தான் திருகோண-மலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவிலிருந்து 27 தமிழ்க் குடும்பங்கள் துவேஷத்தனமாக அரசியல்வாதியாலும், அதிகாரிகளாலும் மிக நாசூக்காக விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிண்ணியா முஸ்லிம்கள் வாழும் நிலப்பிரபு. ஆயினும், ஆங்காங்கே சில தமிழ்க் குடும்பங்களும் காலங்காலமாக இவர்களுடன் ஐக்கியமாகவே வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு அரை நூற்றாண்டுக்கு மேலாக வாழ்ந்து வந்த ஒரு தமிழ்ப் பரம்பரை கிண்ணியாவிலிருந்து 24 மணி நேரத்துக்குள் விரட்டியக்கப்பட்டிருக்கிறார்கள்.

27 குடும்பங்களைச் சேர்ந்த அனைவரும் உறவினர்கள். ஒரே குடும்பத்திலிருந்து பெருகிய-வர்கள். இவர்கள் நீண்ட காலமாக குடியிருந்து வந்த காணிகளுக்கு அரசாங்கத்தால் அனுமதிப்-பத்திங்களும் 1970ம் ஆண்டில் வழங்கப்-பட்டிருக்கின்றன.

1986 மே மாதம் 4ம் திகதி தமிழர்கள் வகையறியாது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்ந்த காலம். அன்று அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதியமைச்சருமாகவிருந்த காலஞ்சென்ற மஹ்ருப் இராணுவ அதிகாரிகள் சகிதம் அந்தக் குடியிருப்புக்குள் நுழைந்தார்.

இந்த இடம் இராணுவ முகாம் போடுவதற்குத் தேவையாக இருக்கிறது. இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் நீங்கள் எல்லோரும் உடைமைகளை எடுத்துக் கொண்டு வெளியேறிவிடவேண்டும்" என்று உத்தரவிட்டார். மிகச் சாதுவான மனிதர் என்றும் நல்ல மனிதர் என்றும் தாங்கள் நம்பிக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து இப்படியான கண்டிப்புடன் கூடிய கெடுபிடி உத்தரவு வரும் என்று அவர்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், உண்மை அது தான். தங்கள் அனுமதிப்பத்திரங்களைக் காட்டினர். தங்கள் கஷ்டநிலையை எடுத்துக் கூறினர். ஆனாலும் வெளியேற வேண்டியேற்பட்டது. அன்றே தங்களால் தூக்கிச் செல்ல முடிந்த உடைமைகளுடன் வெளியேறி உறவினர் நண்பர் வீடுகளில் தஞ்சமடைந்தனர்.

அவர்களுடைய வேதனையெல்லாம் தங்களைப் பற்றி எதுவுமே அறியாத இராணுவம் தங்களை அகற்ற முனைந்தது ஆச்சரியமானதல்ல. ஆனால், காலங்காலமாக தங்களின் ஒவ்வொரு அசைவையும் நன்குணர்ந்தவரும், தங்களுக்கு வரும் துன்பங்களைத் துடைத்தெறிவார் என்று தாங்கள் நம்பியிருந்தவருமான மஹ்ருப் பாராளுமன்ற உறுப்பினரே தங்களை அகற்றுவதில் முன் நின்றார் என்பதை நினைக்கும் போது தான் இரட்டிப்பானது.

மறுநாளே இவர்கள் குடியிருப்புகள் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டு படைமுகாம் போடப்பட்டது. எத்தனையோ வாய்ப்பான வெற்றுக் காணிகள் இருந்த போதிலும் தமிழர் நிலமே படை முகாமுக்குத் தகுந்தது என்ற தேர்வில் மஹ்ருப் பாராளுமன்ற உறுப்பினரின் இன்னொரு முகம் பின்புலமாக இருந்திருக்கிறது என்றே நம்ப வேண்டியுள்ளது.

தங்களுக்குத் தெரிந்த அதிகாரிகளிடம் எல்லாம் இந்த மக்கள் நியாயம் கேட்டுப்-போனார்கள். பாராளுமன்ற உறுப்பினரின் விருப்பத்திற்கு விரோதமாக நடக்க எந்த அதிகாரியும் முன்வரவில்லை.

1990 ஜூனில் ஏற்பட்ட கலவரத்தில் இந்த முகாம் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அனைத்துத் தமிழர்களும் அகதிகளான போது இவர்களும் கிளப்பன்பேக் முகாமுக்கு வந்தார்கள். 1995 வரை கிளப்பன்பேர்க் வாழ்க்கையில் கழிந்தது. 1995இல் கிளப்பன்பேர்க் அகதி மக்கள் இருபிரிவாக பிரிக்கப்பட்டு உப்புவெளி 3ம் கட்டை முகாமுக்கும் கிண்ணியா 2ம் வட்டாரத்தில் அமைக்கப்பட்ட முகாமுக்கும் மாற்றப்பட்ட போது இக்குடும்பங்களும் இரு கூறாக்கப்பட்டன.

மீளக்குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றார்கள். ஆனால், அங்கே அனுமதி மறுக்கப்-பட்டது. காணிகளைத் திரும்பவும் அரசு எடுத்துக் கொண்டு விட்டதாக அதிகாரிகள் தெரிவித்ததோடு அவர்களைத் திரும்பிப் போகும்படி பணித்தார்கள்.

'அப்பன் எப்ப சாவான். திண்ணை எப்போ காலியாகும்' என்று இருந்த மாதிரி தமிழர்களாகிய இவர்களது காணி உரிமை மிக விரைவாகவும் நாசூக்காகவும் அரசுக்கு மாற்றப்பட்டு அந்தக் காணியில் அபிவிருத்தி என்ற போர்வையில் நிரந்தர நிலப்பறிப்பு நடந்திருக்கிறது.

உடனடியாக மருந்தகம் ஒன்று கட்டப்பட்டது. சமுர்த்தி அலுவலகம் கட்ட அத்திவாரம் போடப்-பட்டது. தற்போது அஞ்சல் அலுவலகம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

இந்த அடாத்து வேலையில் எங்கள் பங்கு எதுவும் இல்லை என்று கிண்ணியா அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ தப்பித்துக் கொள்ள முடியாது. தமிழர்களைத் துரத்துவோம் என்ற கேவலமான பணியில் நேரடிப் பங்களிப்போ, தமிழர்கள் தாமே துரத்தப்படட்டும், கிண்ணியா சுத்தமாகட்டும் என்று சந்தோஷமாகக் கண்ணை மூடிக் கொண்டிருந்த மறைமுகமான பங்களிப்போ இவர்களுக்கு உண்டு.

வட பகுதியிலிருந்து 24 மணிநேரத்துக்குள் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சகோதரர்களின் துன்ப துயரங்களை விட இவர்களது துயரம் எந்த வகையில் குறைந்தது? ஜனநாயகம், சட்டம், அபிவிருத்தி என்ற போர்வைகளுடன் இனச்-சுத்திக்கரிப்பு செய்வது எந்த வகையில் நியாயம்?

மார்க்கக் கடமைகளை நிறைவேற்றி ஹாஜியார் பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கும் கிண்ணியாப் பெரியவர்கள் சற்றுச் சிந்தித்தால் நல்லது!

**விவேகி**

# அவர்களை செம்பியன்பற்றுக்கு அனுப்புங்கள்!

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்-களிலும் அண்மைக் காலமாகத் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தலையெடுக்கத் தொடங்கியுள்ளமை ஓர் பாரதூரமான ஆபத்தாகும். இந்தச் சம்பவங்களும், சம்பவங்களில் ஈடுபடுபவர்களும், உதிரிகளாக இருந்த போதிலும் காடைத்தனமான கலாசாரம் ஒன்றுக்கான அத்திவாரமாகவே இதனைக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இனக் கலவரங்கள் விடயத்தில் இலங்கைக்கு எப்போதுமே உலக அரங்கில் ஒரு தனியிடமுண்டு. ஏனைய நாடுகளில் இன மோதல்கள் ஏற்படுகின்ற வேளையில் அரசுகள் அவற்றைப் [illegible] விடுவதில் அக்கறை கொண்டு செயல்படுகின்ற வேளையில், இலங்கையில் இனக் கலவரங்கள் அரச தலைவர்களாலேயே தூண்டி-விடப்படுகின்றன என்பது கண்கூடு.

"தமிழர்கள் எதைக் கேட்டார்களோ அதைக் கொடுத்திருக்கிறார்கள்" என்று 1958ல் எக்காளித்த பிரதமர் பண்டாரநாயக்கவின் வார்த்தையும், "சிங்கள மக்களின் அபிலாஷை-களைப் பூர்த்தி செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. போர் என்றால் போர்: சமாதானம் என்றால் சமாதானம்" என்று 1983ல் குதித்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் கொடூரமும், இலங்கையின் மதிப்பை உலக அரங்கில் எந்த அளவுக்கு உயர்த்தி வைத்தன என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஜனநாயக வழியில் சிங்களத் தலைவர்-களின் மனப்போக்கை நல்லபடி மாற்றி இந்நாட்டில் தாங்களும் தலைநிமிர்ந்து வாழலாம் என்ற தமிழர்களின் கனவை மாறி மாறி வந்த அரசுகளும், அதன் தலைவர்களும் விஷமத்தனமான கொள்கைகளாலும், விஷ-சமத்தனமான நடைமுறைகளாலும் ஈவிரக்க-மின்றிச் சிதைத்து வந்ததன் பலனைத் தான் இன்று நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

தமிழர்களைக் கிள்ளுக் கீரைகளாகவும், தாங்கள் பலம் பொருந்தியவர்களாகவும் இருப்பதான வீண் கற்பனைகள் கொண்ட தலைவர்களால் தான் நாடு இன்று கெட்டுப் போய்க் கிடக்கிறது. தமிழர் தரப்பிலான போராட்டங்கள், அவர்களது பலத்தைக் கேள்விக் குறியாக்கி வைத்திருக்கிறது. பதினேழு வருடங்களாக நாடு போர்க்களமாகி வாடிக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதி, அமைச்சர்கள் கூடச் சுதந்திர தினத்திலேனும் சுதந்திரமாக இருக்க முடியாத நிலை தோன்றியிருக்கிறது.

இவ்வளவு, இழி நிலைக்கு நாடு வந்ததன் பின்னும், தாக்குதல் மூலம் தமிழர்களை முறியடித்து, வெற்றிக் கொடி நாட்டலாம் என இன்னும் நம்பிக் கொண்டிருப்பது தான் வேடிக்கையான விடயம்.

தற்போது கொழும்பில் தமிழர்கள் மீது நடைபெற்று வரும் உதிரித்தனமான தாக்கு-தல்கள், சிங்கள மக்களின் மனோபாவத்தின் வெளிப்பாடு என்று கொள்ள முடியாது. சிங்களவரோ, தமிழரோ சாதாரண குடிமகன் எவனும் தெருச் சண்டைகளையோ, குதர்க்க, அடாவடித்தனங்களையோ விரும்புவதில்லை. ஆனால், சிங்களக் காடையர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இத்தகைய விஷயங்கள் எப்போதும் தொழில் மூலதனமாகவே இருந்து வருகின்றன.

விடுதலைப் புலிகள் என்ற தமிழர் சார்பிலான இராணுவக் கட்டமைப்பு இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்தமைக்கு அரசின் பங்களிப்பே பிரதானமாக இருந்து வருகிறது. சிறு ஆயுதக் குழுமங்களாகத் தமிழ் இளை-ஞர்கள் நியாயம் வேண்டி அரசுடன் போராட முனைந்த போது, தமிழர் பிரச்சினையை அலசி ஆராய்ந்து, பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டை அமைதி வழிக்குக் கொண்டு வருவதை விடுத்து துவேஷத்தனமான பேச்சுகளுடன், தமிழர்கள் எல்லோருரையும் விரோதத் தனமாகப் பார்த்து, அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டதில் அரசு தான் முன்னோடியாக நின்றது.

வயது, பால், வேறுபாடுகளின்றித் தமிழர்கள் புலிகளாகக் கருதப்பட்டனர். தனிப்பட்ட ரீதியில் தமக்குப் பிடிக்காத-வர்களைக் கூடப் புலி என்று நாமகரணம் சூட்டி உள்ளே தள்ளுவது, சித்திரவதை செய்வது, கொலை செய்வது என்பது சிங்கள அதிகார மனோபாவம் கொண்டவர்களின் இயல்பாகிப் போனதால் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்-கையற்ற தமிழர்கள் மனத்திற் கூடத் தற்காப்பு ஆயுதப் போராட்டத்தின் தேவை உணரப்பட்டது.

அரசும், அரச படைகளும் தமிழர்கள் எல்லோரையும் புலிகளாகப் பார்த்துச் செயல்படத் தொடங்கியமையே தமிழர்-களையும், சிங்களவர்களையும் விலகி நிற்க வைத்து, அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தது. விடுதலைப் புலிகளுட-னான யுத்தத்தை, விடுதலைப் புலிகளுடன் மட்டுமே தொடரும் தன்மையை அரசு இழந்து போனதால் இந்த அனர்த்த நிலை தோன்றியது.

இவற்றைச் சாதகமாகக் கொண்டு தான் பாடசாலை மாணவன் மீதான தாக்குதல், சட்டத்தரணிக்குக் கத்திக் குத்து, சமயக் குழுவுக்கு அவமரியாதை போன்ற தமிழ் விரோதச் செயல்பாடுகள் மீண்டும் தலை-யெடுத்துள்ளன. இவற்றை அடக்க வேண்டிய பொறுப்பு, இத்தகைய போக்குகளை விதைத்த அரசையும், அதன் படைகளையுமே சாரும். "இன்னொரு இனக் கலவரம் வெடிக்கட்டும். அப்போது தமிழர்கள் நல்ல பாடம் படிப்-பார்கள்" என்று அரசு வாளா இருக்குமானால், இலங்கை ஒரே நாடு என்ற கடைசி இழையையும் அறுத்து விட்டதாகவே முடியும்.



நாட்டின் உண்மை நிலையை உணர்ந்து அரச தரப்பு இவ்விடயத்தை நிதானமாகவும், தீவிரமாகவும் அணுக வேண்டும். "தமிழர்-களைக் கொன்று விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். புலிகளை ஒழிக்கும் வரையும் ஓயமாட்டேன்." எனச் சிங்களவர் தரப்பில் எவராவது குமுறினால் - போர்க் கொடி உயர்த்தினால் - அவர்கள் புத்த பிக்குவாக இருந்தாலென்ன, அரசியல்வாதியாக இருந்தா-லென்ன, சிங்களக் காடையர்களாக இருந்தா-லென்ன அவர்களை, வளைத்துப் பிடித்து ஆனையிறவிலோ, செம்பியன்பற்றிலோ, கொண்டு போய் விட்டு விட வேண்டியது தான் இப்போதுள்ள ஒரே பணி.

பாதுகாப்பாக இருந்து கொண்டு, படைகளைப் பலிக் கடாக்களாக்குபவர்கள் அமைதி கொள்வதற்கு உகந்த வழி இது ஒன்று தான்.

**திரிபுரன்**

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை அரசாங்கங்களின் தோல்விகளின் வரலாறு?

தோல்வியை ஒப்புக்கொள்ள தயங்குபவர், அதற்கான பொறுப்பை யார் தலையிலாவது கட்டிவிட்டு தப்பித்துக் கொள்ள முயல்வார்.

"ஆடத் தெரியாதவள் மேடை சரியில்லை என்றாலாம்' என்று இதை தான் சொல்வார்கள்.

சந்திரிகாவின் அரசாங்கம் யுத்தத்தை தொடங்கிய நாள்முதலாக தொடர்ச்சியாக தோல்வியையே சந்தித்துக்கொண்டு வருகிறது.

அது யுத்தத்தை தொடங்கிய ஆரம்பத்தில் பெற்ற தோல்வி அரசியல் ரீதியான தோல்வி.

சமாதானத்தின் பேரால் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் சமாதானத்துக்கு கதவடைப்பு செய்துவிட்டு யுத்தத்திற்கு வழிதிறந்து விட்டது.



அரசியல் ரீதியாக தான் பெற்ற இந்தத் தோல்வியை மறைக்க, தான் இந்த முடிவுக்கு தள்ளப்பட்டதற்கு காரணம் புலிகளே என்று பொறுப்பை அவர்கள் மீது சுமத்தியது.

ஐ.தே.க. அரசாங்கங்களால் சமாதானத்தை அரசியல் தீர்வை காணமுடியாமல் போனதற்கு காரணம் அவர்களிடம் காணப்பட்ட யுத்த மோகமே என்று விமர்சித்த சந்திரிகா யுத்தத்தை நடாத்தும் பிரதான தளபதியாகதான் மாறிக் கொண்டார்.

அரசியல் தீர்வு என்ற பெயரில் அவர் இழுத்தடித்து இழுத்தடித்துக் கொண்டுவந்த அரசிலமைப்பு சீர்திருத்த யோசனைகளை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடியாமல்போன தோல்வியை மறைக்க அதற்கு ஐ.தே.கவினரே காரணம் என்று கூறினார்.

தனது தோல்விகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தனது அரசாங்கத்தின் சாதனைகள் என்று சொன்னவற்றை நியாயப்படுத்த முடியாதபடி தொடர்பு சாதனங்களின் கேள்வி எழுப்பியபோது, தொடர்புசாதனவியலாளர்கள் மீது தனது தோல்விக்கான பழியைப் போட்டார்.

இந்தப் பழி போடுதல்களை மூலமாக தன்னை 'அரசியல் ரீதியாக வெற்றி பெறச் செய்யமுடியும் என்று கருதினார்.

யுத்தத்தை நியாயப்படுத்த தன் வளங்கள் அனைத்தையும் பயன்படுத்திய அரசாங்கம், யுத்தத்தில் தோல்வியைச் சந்திக்கத் தொடங்கியபோதெல்லாம் அதற்கான பழியை தமிழ் மக்கள் மீதும் எதிர்க்கட்சி மீதும் சுமத்தத் தொடங்கியது....

இராணுவ வெற்றியை சந்திரிகா பெற்றுக்கொண்டிருந்த காலம் முதல் - அரசியல் ரீதியாக தான் வெற்றிபெற்று வருவதாக அவர் நம்பிக்கொண்டிருந்தாலும் - அவர் பெரும் அரசியல் தோல்விக்கான அடித்தளத்தையே போட்டுக்கொண்டிருந்தார்.

இராணுவ வெற்றி நீண்ட நாள் நிலைக்கவில்லை.

இராணுவ வெற்றிகளைப் பெற்று தன்மீது சூட்டிக்கொண்ட வெற்றிப் பதக்கங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக இழக்கத் தொடங்கியது அரசாங்கம்.

படையினரின் உளவியல் தாக்கம், காணாமல்போன படையினர், அங்கவீனமுற்ற படையினர், புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட படையினர் என்று யுத்தம் அளித்த பரிசுகள் அரசாங்கத்திற்கு தொடர்ச்சியான அரசியல் தோல்விகளை தந்து கொண்டிருந்தன.

இராணுவ தோல்வியிலும் சரி, அரசியல் தோல்வியிலும் சரி, தோல்விக்கான காரணங்களை அவற்றுக்குள்ளே தேடுவதற்குப் பதிலாக அரசாங்கம் வெளியே தேடத்தொடங்கியது.

இராணுவ தோல்விக்கு அடிப்படையாக அமைந்தது அதன் அரசியல் ரீதியான தோல்வியே என்ற கசப்பான உண்மையை அது அங்கீகரிக்க மறுத்தது.

1994 தேர்தலுக்கு முன்பும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய நாட்களிலும், அது சேர்த்து வைத்துக் கொண்ட அரசியல் ரீதியான வெற்றிகளின் விளைப்பயனாக தான் தனது யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியை தன்னால் பெறமுடிந்தது என்பதை அது நம்ப மறுத்தது.

'தமது வெற்றிக்கு காரணம், அமைச்சர் அனுருத்தவின் வார்த்தைகளில் சொல்வதானால், 'நவீன ஆயுதங்கள் சிறந்த பயிற்சி, தமது அரசியல் தலைமைத்துவம் போன்றவையே தமது வெற்றிக்கான காரணம்' என்று அது நம்பியது.

யாழ்ப்பாணத்தை 'யாபா படுண" வாக்கி அங்கே சிங்கக் கொடியை ஏற்றுவதில் தமக்கு கிடைத்த வெற்றியை வெறுமனே தமது ஆயுத அரசியல் பலத்தால் ஏற்பட்ட ஒன்று என்று அது திடமாக நம்பியது.

யாழ்ப்பாணத்திலிருந்து பொதுமக்களை 'நயத்தாலும், பயத்தாலும்' வெளியேற்றியமை, புலிகளின் அரசியல் பலவீனம் என்பனவும் அதற்கு காரணமாக இருந்தன என்பதை அது ஏற்கவில்லை.

புலிகளை ஒரு சுண்டைக்காயை நசுக்குவதுபோல நசுக்கிவிட முடியும் என்று கனவுகண்டது அரசாங்கம்.

ஆனால், இந்த மமதையும், அதற்கு காரணமாக அமைந்த சிங்கள பௌத்த இனவாதமும் தவிர்க்க முடியாமல் புலிகள் தாம் விட்ட அரசியல் தவறின் விளைவுகளிலிருந்து மீள புதுப்பலத்துடன் எழுந்து நிற்க உதவின என்பதையும் கூட அரசு காணத்தவறவில்லை.

ஆக, அரசாங்கத்தின் யுத்த மூலம் பெற்ற அதிகாரத்தை அதனால் சொற்ப காலத்துக்குக்கூட ஸ்தீரமாக வைத்திருக்க முடியவில்லை.

வன்னியில் தொடங்கி இன்று பளைவரையாக தாம் கைப்பற்றிய ஒவ்வொரு நிலப்பரப்பாக புலிகளிடம் அரசாங்கம் தொடர்ந்து இழந்து கொண்டிருக்கிறது. இன்று நிலவுகிற இராணுவ யுத்த நிலையானது அரசாங்கம் யாழ்ப்பாணத்திற்கான தென்மராட்சியூடான பாதையை - முல்லைத்தீவிலிருந்து கரையோரமாக வரும் சாலைவீதி இழந்ததைப் போல - புலிகளிடம் விரைவில் இழந்துதான் போகப் போகிறது என்றே கூறுகின்றன.

ஆனால், இந்தத் தோல்விக்களுக்கான காரணத்தை அரசாங்கம் தனது அரசியல் நிலைப்பாட்டில் ஆராயத் தயாராக இல்லை. இறக்குமதி செய்த ஆயுதங்களும் பயிற்சிபெற்ற படையினரும் தான் வெற்றியை தீர்மானிப்பவர்கள் என்று அது கருதி வந்ததால், தோல்விக்கான காரணத்தையும் அது அவர்களிடமே தேட முயல்கிறது. ஐ.தே.கவும், இராணுவத்திலிருந்த உயர் மட்ட அதிகாரிகளும் கூட்டாச் சேர்ந்து செய்த சதியின் விளைவே தோல்வி என்று ஒரு முடிவை ஏற்படுத்தி தோல்விக்கான பொறுப்பை அவர்கள் மீது சுமத்தியது.

உயர்மட்ட படை அதிகாரிகள் ஏழு பேருக்கு கட்டாய ஒய்வு கொடுத்துவீட்டுக்கு அனுப்பியது.

வன்னித் தோல்விக்கு காரணமாக இருந்தவர்கள் இவர்களே என்பது இதன் அபிப்பிராயம்.

ஆனால், பரிதாபம்!

வடக்கில் இப்போது நடந்துகொண்டிருக்கும் தோல்வியை இந்த ஏழு பேரையும் கட்டாய ஓய்வில் வீட்டுக்கு அனுப்பியபின் ஏற்பட்டிருக்கிற புதிய தோல்வியின் 'பழியை யார் மீது சுமத்தப் போகிறது அரசாங்கம்!?

அரசாங்கம் இந்தப் புகழ்பெற்ற தோல்விக்கதையை தொடர்ந்து நீளவிருக்கும் அந்த நீட்சி தன் அரசியல் அடிப்படையை அரித்துத்தின்பதையும் அது உணர்ந்தாலேயே புலிகளுடன் பேசுவதுபற்றியும், ஐ.தே.கவுடன் பேசுவது பற்றியுமான தனது வேலைத்திட்டத்தை அறிவித்தது.

ஐ.தே.கவுடனான பேச்சுக்கு நாட்குறித்த அதே வேளையில் ஐ.தே.க பற்றியும் அதன் தலைவர் விக்கிரமசிங்க குறித்தும் பாரிய குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார் சந்திரிகா. அவர் புலிகளுடன் சேர்ந்து சதி செய்ததாக கூறினார் அவர்.

ஐ.தே.க.- அரசாங்கப் பேச்சுவார்த்தைகளில் பெரும்பாலான நேரம் இந்தப் பிரச்சினையாலான விவாதங்களில் போய் முடிந்தது.



அதற்குள் மே இறுதிக்குள் ஐ.தே.க. - அரசு பேச்சுவார்த்தையை முடித்து வைப்பதாக வேறு காலக்கெடு விதித்திருக்கிறார் ஜனாதிபதி.

பேச்சுவார்த்தை விபரங்களை முதலில் கூட்டாக அறிவிப்பதாக தெரிவித்தபோதும், இப்போது அவை பற்றி எதுவுமே பேசாதிருக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

திரும்பவும் அதே அரசியல் தோல்விச் சகதிக்குள் குதிக்கிறார் சந்திரிகா.

பேச்சுவார்த்தை என்ற பேரில் அரசியல் ரீதியான அம்சங்கள் பேசப்படுவதற்குப் பதிலாக சந்திகா - ரணில் சர்ச்சைகளும் பிற சம்பந்தமற்ற வியடங்களும் பேசப்படுதிலேயே காலம் கழிவது தொடர்பான தகவல்கள் வெளியே தெரிய வந்ததே தகவல்களை வெளியிடாதிருக்கும் 'கூட்டு' முடிவுக்கு காரணம் என்று நம்பப்படுகிறது.

பேச்சுவார்த்தையின் போது இதுவரை எந்த உருப்படியான முடிவும் எடுக்கப்படவில்லை. மு.கா கூட, தான் முன்வைத்த விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லையென்று எதிர்ப்புகாட்ட முடிவு செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கவுடன் ஜனாதிபதி பேச வேண்டிய விடயம் உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் அது முரண்படும் விடயங்களில் உடன்பாடு காண்பது மட்டும் தான் என்றால், அதில் இழுத்தடிப்புக்கு எந்த நியாயமும் இல்லை.

பேச்சுவார்த்தை தகவல்கள் வெளியே கசிவதற்கு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டிருப்பதற்காக கூடிப் பேசுவது முழு நாட்டையும் ஏமாற்றுகிற நடவடிக்கையாகும்.

ஆக, இந்த முயற்சியும் தோல்வியில் முடிவுறுவதற்கான சமிக்ஞைகளே அதிகமாக தென்படுகின்றன.

எந்த செயலில் இறங்கினாலும் அது தோல்வியடையவேண்டும் என்பதற்காகவே செயற்படும் சிறப்பு நமது ஜனாதிபதிக்கு உண்டு.

அவரது கடந்த ஆறாண்டு கால அரசியல் வரலாறே தொடர்ச்சியான தோல்வியின் வரலாறுதான். ஒன்றில் அரசியல் ரீதியான தோல்வி. அல்லது இராணுவ ரீதியலான தோல்வி.

அரசியல் ரீதியான தோல்வி இராணுவ ரீதியிலான தோல்விக்கு இட்டுச் செல்லும் அரசாங்கம் திட்டமிட்டு இன்று வளர்த்து விட்டுள்ள இனவாத அரசியல் பூதம் இந்த அரசியல் தோல்வியால் வரும் இராணுவ தோல்வியை காரணமாக காட்டி சந்திரிகா அரசாங்கத்தையே விழுங்கிவிடப்போகிறது.



ரணிலின் அரசியல், தாம் சந்திரிகாவுக்கு, பிரச்சினையைத் தீர்க்க பூரண ஒத்துழைப்பு கொடுத்தோம் என்ற பெயரை வரலாற்றில் பொறித்துக்கொள்ளும் நோக்கிலான நடவடிக்கை.

அது எதிர்கால அரசியலுக்கு அவர் போடும் பலமான அத்திவாரம்.

ஆனால், இருவரிடமும் இனப்பிரச்சினை குறித்த புரிதல், ஒரு மேலோட்டமான சலுகைப்பிரச்சினை என்ற மட்டத்திற்கு மேல் இருப்பதாக தெரியவில்லை. ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட கவர்ணர் பற்றிய விடயம் இதை தெளிவாக்குகிறது.

ஆக இது இழுபறி இப்போதைக்கு வடக்கு கிழக்கு மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிடும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கவில்லை. யுத்தம் மேலும் தீவிரமடைய மேலும், மேலும் அப்பாவி மக்கள் அதன் தீவிரத்தன்மை தாங்காமல் தம் வாழ்வு சிதைந்து கொண்டிருப்பதற்கு கையாலாகாத சாட்சிகளாக இருக்கும் நிலைமையையே அது கோடி காட்டுகிறது.

யுத்தத்தை நிறுத்திவிட்டு புலிகளுடன் உடனடியான ஒரு பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலுக்குபோவது எப்படி என்ற முதற்கட்ட உடன்பாட்டுக்கு அரசும், ஐ.தே.கவும் வராவிட்டால் கடந்த ஆறாண்டு காலம் போலவே இனிவரவுள்ள காலம் முழுவதும் இலங்கை அரசாங்கத்தின் தோல்வி வரலாறாகவே அமைந்துவிடும். இது தான் இப்போதைக்குள்ள யதார்த்தம்!

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர் மீதான இனவெறித் தாக்குதல்கள்
# மெத்தனமாயிருக்கும் பெரியமனிதர்கள்!

கொழும்பில் தமிழ்-மக்களுக்கெதிரான வன்முறையிலும் நிந்தனையிலும் பாதுகாப்புப்படைக்கு போட்டியாக சிங்கள பொது மக்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். கொழும்பிலும், ஏனைய தென்னிலங்கைப் பகுதியிலும் தமிழ் மக்கள் வயது வேறுபாடின்றி தாக்கப்பட்டும் நிந்திக்கப்பட்டும் வருகின்றனர். அண்மையில் அவ்வாறான சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ள போதும் மூன்று சம்பவங்கள் பெருத்த கவனத்திற்கு உள்ளாகியுள்ளன.

முதலாவது சம்பவம் கொழும்பு இந்துக்கல்லூரி உ/த மாணவர் மகாலிங்கம் கோபி கிருஷ்ணா நீர்கொழும்பிலிருந்து காலையில் பாடசாலைக்கு ரயிலில் சென்று-கொண்டிருந்த போது சக பயணிகளால் தாக்கப்பட்டமை, பாடசாலைச் சீருடையில் பயணித்துக்கொண்டிருந்த மாணவர் புத்தக பையினுள் குண்டு வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். 22.03.00 அதிகாலை 5.55 அளவில் நீர்கொழும்பிலிருந்து பயணித்த இம்மாணவர் ரயிலில் காணப்பட்ட சனநெருக்கடியின் காரணமாக புத்தகப்பையினை பயணிகள் பொருட்கள் வைக்கப்படும் தட்டில் வைத்து விட்டு பிறிதோர் இடத்தில் நின்றுள்ளார். அநாதரவாக இருந்த பையின் மீது சந்தேகமடைந்த ரயில் பயணிகளிடையே சலசலப்பை அவதானித்த மாணவர் அப்பையின் உரிமையாளர் தானே எனக் கூறியுள்ளார். அவ்வேளையில் அவரை தமிழ் மாணவர் என அடையாளம் கண்டு-கொண்ட சக சிங்களப் பயணிகள் தாக்கியுள்ளனர். தாக்குதலின் ஒரு கட்டத்தில் அவரது புத்தகங்கள் கிழித்து வீசப்பட்டுள்ளன. அவரது உணவுப் பொதி அவிழ்த்துக் கொட்டப்பட்டுள்ளது. அவர் தான் ரயில்களில் குண்டு வைப்பதாகக் கூறியும் அவருக்கு கல்வி அவசியமில்லையெனக் கூறியும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். பின்னர் பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தப்பட்டு மீண்டும் பயணிக்க ஆரம்பிக்கையில் ஓடும் ரயிலிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டுள்ளார். அவர் தான் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி விபரிக்கையில் நாகரீகமாக அலுவலக முறையில் ஆடை அணிந்தவர்களே தன்னை தாக்கியதாகக் கூறியுள்ளார்.

அடுத்த சம்பவம் 27.03.00 வெள்ளவத்தை றொக்சி திரையரங்கம் முன்னிலையில் பத்திரிகை விற்பனைக் கடைக்கருகில் தமிழ்ப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த முதியவரொருவர் வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத மூன்று நபர்களால் தாக்கப்பட்ட சம்பவம். அம்முதியவரைத் தாக்கியவர்கள் அவர் வாசித்துக் கொண்டிருந்த தமிழ்ப் பத்திரிகையையும் கிழித்து வீசியுள்ளனர்.

மற்றைய சம்பவம் 25.03.00 இல் மொறட்டுவையிலிருந்து புறக்கோட்டை நோக்கிச்சென்று-கொண்டிருந்த தனியார் பஸ் வண்டியொன்றில் வெள்ளவத்தைப் பகுதியில் ஏறமுற்பட்ட தமிழ் இளைஞனை புலியென பட்டஞ்சூட்டி பஸ்ஸிலிருந்து தள்ளி விழுத்தியமை.

ஏறத்தாழ ஒரு கிழமை இடைவேளையில் நிகழ்ந்துள்ள இம்மூன்று சம்பவங்களிலும் தாக்கப்பட்ட மூவரும் தமிழர்கள் என அடையாளங்காணப்பட்ட உடனேயே வேறு காரணங்களின்றித் தாக்கப்பட்டுள்ளனர். குறைந்தபட்சம் வாக்குவாதமாகிலும் ஏற்பட்டிருக்கவில்லை. தமிழ் மக்களுக்கெதிரான வெகு இயல்பான நியாயப்படுத்தப்பட்ட வன்முறை மனோபாவம் சிங்கள மக்களிடையே வளர்த்தெடுக்கப்பட்டு வருகிறது என்பதையே இச்சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன.

"தென்னிலங்கையில் தமிழர்களின் சனத்தொகை 60%க்கு மேலுள்ளது", "தமிழர்கள் தென்னிலங்கை வளங்கள் அனைத்தையும் சூறையாடுகின்றனர்", "தென்னிலங்கையில் விலையேற்றங்களுக்கு தமிழர்களே காரணம்" போன்ற பேரினவாதிகளின் கூச்சல் எதிர்பார்த்த விரும்பிய இலக்கை எட்டி வருவதாகவே தெரிகிறது.

பேரினவாதம் மக்கள் மயப்படுத்தப்படுகிறது என 'சரிநிகர்'



கோபி கிருஷ்ணா

தொடர்ந்து சுட்டிக்காட்டி-வந்துள்ளதை இங்கு கவனிக்க வேண்டும். கோபிகிருஷ்ணா கூறியிருந்தபடி அன்று நாகரீகமான அலுவலக முறையில் உடையணிந்தவர்கள் தாக்குதலில் ஈடுபட்டிருந்தமை பேரினவாதச் சிந்தனை சிங்கள மக்களிடையே எவ்வித வேறுபாடுகளுமின்றிப் பரவி வருவதையே காட்டுகின்றது.

83 இனவன்முறை பற்றி குறிப்பிடப்படும் போது தமிழர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள் என கூறப்படுவதும் அவர்கள் ஏனைய சிங்களப் பொதுமக்களால் காப்பாற்றப்பட்டார்கள் எனக் கூறுவதும் வழக்கமானதொன்று அவ்வாறதொரு சூழல் மீண்டும் ஏற்படும் பட்சத்தில் நிலைமை எவ்வாறு அமையும் என்பது சொல்ல வேண்டியதில்லை. அதற்குரிய ஏற்பாடுகள் திட்டமிட்டு மிக அவதானமாக மேற்கொள்ளப்படுவதாக "சரிநிகர்" தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்துள்ளது. தற்போது அது சற்று வெளிப்படையாக ஆரம்பித்துள்ளது. இப்போதாகிலும் தமிழ், சிங்கள உறவில் அக்கறையுள்ளவர்களாக விழித்துக்கொள்ள வேண்டும்.

வெறுமனே தாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தேடுவதனுடன் நின்று விடாமல் (அது கூட செய்யப்படப்போவதில்லை) இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான சமூக உளவியல் காரணிகளை இனங்கண்டு தகுந்த பரிகாரம் தேட முன்வர வேண்டும்.

இச்சம்பவங்கள் அனைத்தின் பின்னரும் வழக்கமான சடங்குகள் அதற்குரிய பெரியோர்களால் நடாத்தப்பட்டுள்ளன. பொலிஸ் முறைப்பாடு, அரசியல்வாதிகளிடம் முறைப்பாடு, வாக்குறுதிகள் என அனைத்தும் அவற்றுக்குரிய காலங்களில் திருத்தமாக நடந்து முடிந்துள்ளன. எனினும், கோபிகிருஷ்ணா மீதான தாக்குதலின் பின் நடந்த சில சம்பவங்கள் கவனத்திற்குரியன.

மாணவரின் தாக்குதலின் பின் பம்பலப்பட்டி பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்ற வேளை பம்பலப்பிட்டி பொலிஸ் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தது. அங்கு முறைப்பாடு செய்த மாணவருக்கும் ஏனையோருக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது. பின்னர் டக்ளஸ் தேவானந்தா, யோகராஜன் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்தது. ஆனால், பாடசாலை நிர்வாகம் பகிஷ்கரிப்பை ஆதரிக்க முன்வரவில்லை. மாறாக, பகிஷ்கரிப்பை எதிர்த்து பல்வேறு நடவடிக்கையில் இறங்கியது. பொலிஸ் நடவடிக்கை எடுக்கத் தவறும் நிலையில் அவ்வாறான பகிஸ்கரிப்பை மேற்கொள்ளலாமென மாணவர்களைப் பாடசாலை நிர்வாகம் திசை திருப்பியுள்ளது.

பகிஷ்கரிப்பை நடாத்தினால் பாடசாலையை அரசாங்கம் மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் அல்லது உயர்ந்த வகுப்புகளை முற்றாக நிறுத்தி விடும் என்று மாணவர்களுக்குப் பூச்சாண்டிகள் காட்டப்பட்டுள்ளன.

26.03.00 அன்று ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்து 27.03.00 அன்று உயர்தர மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடமுனைந்துள்ளனர். பாடசாலை நிர்வாகம் மாணவர் மீது கடுமையான வழிமுறைகளைப் பிரயோகித்து அப்பகிஷ்கரிப்பை தடுத்து நிறுத்தியுள்ளது.

இதுபற்றி தெரிவித்த கல்லூரி அதிபர் மாணவர்களின் பாடசாலையின் பாதுகாப்பு என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு அவ்வாறான பகிஷ்கரிப்பு தவிர்க்கப்பட்டதாக கூறியுள்ளார்.

ஆனால், சக்தி வாய்ந்த ஊடகப் பின்னணியும் (சக்தி எப்.எம்மின் கொழும்புத் தளங்களில் இந்துக்கல்லூரியும் ஒன்று) பலமான இந்துக் கல்லூரி காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கை எதிலும் ஈடுபடாதது கடும் விசனத்திற்குரியது.

திங்களன்று அரசியல்வாதிகள் கல்லூரி அதிபர், பிரதிப்பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டில் வழமை போல் இவ்வாறான சம்பவங்கள்பற்றி கடும் நடவடிக்கை எடுக்கபடுமென கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் தாக்குதல் சம்பவத்திற்கு எதிரான அடையாள எதிர்ப்பாயினும் காட்டப்படவில்லையென கல்லூரி ஆசிரியர் ஒருவர் விசனம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இவ்வாறான சம்பவங்கள் "தமிழ் மக்கள் தாக்கப்பட வேண்டியவர்கள்" என்ற எழுதப்படாத விதிக்கு வலுச்சேர்ப்பதாகவே அமையும். இது பற்றி கூடிய கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது உடனடித் தேவை.

— ரங்கன்

# 'தமிழர் என்றாலே இப்படித்தான்?'

ஆசிரியருக்கு,

தினமும் எனது தம்பி ரயிலில் தான் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு செல்வான். வீட்டிலிருந்து அதிகாலை 5.30க்குப் புறப்பட்டுக் கட்டுவ புகையிரத நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து 5.55 ரயிலில் போவான். அன்று புதன்கிழமை 22ம் திகதி தம்பிக்குக் கெட்டகாலம் போல இருக்கின்றது. ரயிலில் 03ம் பெட்டியில் ஏறினான். வழக்கமாகப் பிரயாணம் செய்கிறவர்கள் தான். 35, 40 வயது மதிக்கத்தவர்கள் தான் ரயிலினுள் இருந்தார்கள். தம்பி ஏறியவுடன் புத்தகப் பையை இறாக்கையில் வைத்துவிட்டு நின்றான். சன நெரிசலின் காரணமாக விலகி விலகி நின்றான். ஏற்கெனவே அவர்களுக்குத் தெரியும். இவன் தமிழ் என்று. ஏனென்றால், வழக்கமாகச் செல்பவர்கள் தானே. தம்பி விலகி நிற்கும்போது கோபியினுடைய பையைச் சோதனை செய்து கொப்பிகள், ரியூட் எல்லாவற்றையும் கிழித்துப் போட்டு, டயறியை எடுத்துப் பார்த்து அதிலுள்ள விலாசத்தைக் கையிலும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இடியப்பம், சம்பல், எல்லாம் பிய்த்துக் கொட்டிச் சின்னாபின்னமாக்கினர். அவன் கஷ்ரப்பட்டு அழகாய் எழுதிய உயிரியல் பாடக் குறிப்பு, பாடப் புத்தகங்களை எல்லாம் கிழித்துப் போட்டிருக்கிறார்கள். தம்பி, கொள்ளுப்பிட்டி புகையிர நிலையத்தில் புத்தகப் பையை எடுக்கப் போக ஒருதன் எட்டிச் சேட் கொலரில் பிடித்துக் கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்தானாம். அறைந்தவுடன் கண்மூடி முழிப்பதற்குள் தன்னை ஏறத்தாழப் பத்து பேர் சூழ்ந்து கொண்டு, ஒவ்வொருத்தர் ஒவ்வொரு பக்கத்தால் அடித்தார்கள். கோபிக்கு ஏற்கெனவே அப்பன்டிஸ் என்று அறுவைச் சிகிச்சையும் நடந்தது. அந்த இடத்திலும் குத்தியிருக்கிறார்கள். தம்பியே இதயம் பலவீனமானவன். இதய நோயும் இருக்கிறது. இவ்வாறு கண்ட இடங்களிலெல்லாம் அடித்தவர்கள் ஓய்ந்தபாடில்லை.

எளிய தமிழா, கொட்டியா, கொட்டியா, பழுங்குதுறைச் சக்கிலியா நீங்களெல்லாம் குண்டு வைக்கத்தானடா வாறியள் என்றெல்லாம் சொல்லித்தான் குத்தினாங்கள். வெளியே இதைப் பற்றிக் கூற வேண்டாம் என்றும் மிரட்டியிருக்கிறார்கள். ரயில் பம்பலப்பிட்டியை அடைந்ததும் சிதறுண்டு கிடந்த புத்தகங்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு இறங்குவதற்கு முயற்சி செய்ய இறங்கவிடாமல் தடுத்தார்கள். தான் இறங்க வேண்டுமென்று கூறவும் விடாமல் பம்பலப்பிட்டியில் ரயில் நின்று புறப்பட ஒருதன் வாசலில் குறுக்காக நிற்க, ரயில் ஓட ஓடத் தள்ளி விட்டானாம். தம்பி முகம் குப்புற விழுந்தான். தம்பியின் உயிர் ஓர் மயிரிழையில் தான் தப்பியது. அவங்கள் தள்ளிவிட்டதுமல்லாமல் வெளியில் நின்ற மற்றையவர்களுக்குச் சிங்களத்தில் சொன்னார்களாம், கொட்டி வாறான், அடியுங்களென்று. அவர்களும் பஸ் தரிப்பிடம் செல்லு மட்டும் இடித்து இடித்துத் திட்டினார்கள். முகமும் வீங்கித் தலை சுற்றுகிற மாதிரி நெஞ்செல்லாம் அடைத்துக்கொண்டு வர உடன் வந்த ஒரு பஸ்ஸில் ஏறிப் பாடசாலை போய்ச் சேர்ந்தான்.

வகுப்பறைக்குப் போனவுடன் தம்பி கத்தி அழுதானாம். உடன் அவர்கள் யாரடா அடித்தது என்று அதிபரிடம் கூட்டிச் சென்று நடந்ததை விபரிக்க அவர்தான், எல்லோருக்கும் அறிவிக்க எங்களுக்கு அன்று மதியம் 12.30க்கு சூரியன் எவ். எம். செய்தி கேட்டுத்தான் தெரியும், எல்லோருமே பதறிப் போனோம்.

அம்மா, அப்பா, எல்லோரும் தம்பிக்கு நடந்த தாக்குதலால் மிகுந்த துக்கத்திலிருக்கின்றோம். ஓட ஓடத் தள்ளி விடுவதென்றால் எப்படியிருக்கும்? எனக்குக் கோபி கிருஷ்ணா இரண்டாவது தம்பி. மூத்த தம்பி கிருஷ்ண மேனன், மற்றவன் பிரபு கிருஷ்ணா, ஹம்ச கிருஷ்ணா. கோபி சரியாகக் கோபப்படுவான். எப்படிக் கோபப்பட்டும் என்ன பலன்? இனவெறி பிடித்தவர்களுக்குத் தெரியும் பள்ளிக்கூடப் பிள்ளையென்று. அப்படியிருந்தும் இப்படி அரக்கத்தனமாக அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். தமிழ்ப் பேப்பரில் இவ்வாறெல்லாம் எழுதுவார்கள். சிங்களப் பேப்பரில் எழுதவா போகிறார்கள்? சிங்களப் பத்திரிகைகளில் எழுத வேண்டும். சிங்கள வானொலியில் அறிவித்தால் தானே செய்தவர்களுக்குத் தெரியும், தமிழன் என்றாலே ஒரு புறக்கணிப்புத்தானே. என்ன செய்வது? இந்த விடயம் பற்றி உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

அனுஷா மகாலிங்கம்,
நீர்கொழும்பு.

**பாலியல் வல்லுறவு**
**தலை முடி கத்தரிப்பு**
**சித்திரவதை**
**கொலை**

# ஜிகாத் விடுதலைப் படை வழங்கிய தண்டனைகள்!

## ஏறாவூரில் சம்பவம் பொது அமைப்புக்கள் மௌனம்

அண்மையில் நாம் சர்வதேச மகளிர் தினத்தை ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடி, 'பெண் விடுதலை', 'பெண் உரிமைகள்' என்பன பற்றியெல்லாம் உரக்கப் பேசிக்கொண்டிருந்த அதேவேளை, மட்டக்களப்பு ஏறாவூரில் ஒரு தாய் சில வெறியர்களின் கோரப்பசிக்கு இரையான நிகழ்வு, வழமைபோன்று உலகின் பார்வையில் இருந்து விலகி மறைவை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது.

சமுதாயத்தின் இரைச்சலில் தனது முகவரியைத் தொலைத்துவிட்டு, நீதிக்காக அலைந்து திரியும் அந்தப் பெண்ணின் நிலை பற்றி நாம் அறிந்து கொள்ளுவதும், அக்கறை காட்டுவதும், குறிப்பிட்ட அந்தப் பெண்ணிற்கு மட்டுமல்ல பெண் சமுதாயத்திற்கே நீதியும் விடிவும் கிடைக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் தான்.

ஏறாவூர் காட்டுப்பள்ளி வீதியைச் சேர்ந்த அலி முகமது அதபியா என்ற 35 வயதுப் பெண் 'ஜிகாத் விடுதலைப் படை' என்பவர்களால் சித்திரவதைக்கும், பாலியல் பலாத்காரத்திற்கும் உள்ளாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த 6.3.2000 திகதி அனுமதிக்கப்பட்டார்.

ஒரு குழுவினரால் பாலியல் ரீதியில் சீரழிக்கப்பட்டு தலைமுடி கத்தரிக்கப்பட்ட நிலையில் மார்பு, தொடை, உட்பட உடலின் பல பாகங்களிலும் பற்களினால் கடித்து குதறப்பட்ட காயங்களுடன் இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தன் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை பற்றியும், அதனைச் செய்த குழுவினர் பற்றியும் வெளியே தெரிவித்த காரணத்தினால் அதபியாவை கொலை செய்யும் நோக்கத்துடன், அந்த குழுவைச் சேர்ந்தவர்கள் தேடித்திரிய ஆரம்பித்தன்ர்.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் இயங்கிவரும் முஸ்லிம் பெண்கள் அமைப்பான "முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி" மற்றும் செயற்பாட்டு ஒன்றியம் (Muslim Women Research and Action Forum - RAF) தனது பொறுப்பில் அதபியாவை ஏற்றுக்கொண்டு அவருக்கான பாதுகாப்பை வழங்க முன்வந்தது.

இந்த முஸ்லிம் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் ஒரு மறைவிடத்தில் இரகசியமாக தங்கவைக்கப்பட்ட அதபியாவை சரிநிகரின் சார்பில் சந்திக்க முடிந்தது.

தனக்கு நடைபெற்ற கொடூரத்தையும் பட்ட வேதனைகளையும் கண்ணீருடன் அவர் எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

அதபியா - இரண்டு பெண் குழந்தைகளின் தாயான இவர் கணவனை இழந்தவர். மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிந்து தனது பிள்ளைகளின் கல்வியை கவனித்தபடி வாழ்ந்து வந்தார்.

அதபியாவுடன் பணிபுரிந்த அவளது ஒன்றுவிட்ட சகோதரியுடன் ஏற்பட்ட சிறுபிரச்சினையைத் தொடர்ந்து அதபியா மீது பழிதீர்க்கும்படியான வேண்டுகோளுடன் கூடிய ஒலிப்பதிவு நாடா ஒன்றை ஏறாவூரைச் சேர்ந்த அவர்கள் இருவரதும் உறவினரான ரபீக் என்பவருக்கு அந்தப் பெண் அனுப்பிவைத்துள்ளார்.

(இந்த ஒலிப்பதிவு நாடா பின்னர் கைப்பற்றப்பட்டுவிட்டது)

ஏறாவூர் பிரதேசத்தில் இயங்கிவரும் 'ஜிகாத் விடுதலைப் படை' என்ற தலைமறைவு முஸ்லிம் இயக்கத்துடன் தொடர்புடைய ரபீக் விடுமுறைக்காக நாடு திரும்பிய அதபியாவை மிரட்டவும், தொல்லை கொடுக்கவும் ஆரம்பித்தான். 'ஜிகாத்' இயக்கத்தின் வளர்ச்சிக்கான நிதி என்ற பெயரில் ஒரு பெருந்தொகைப் பணத்தை தமக்கு தரவேண்டும் என்று அதபியாவை மிரட்டிவந்தான்.

கணவனை இழந்திருந்த அதபியாவை தன்னுடன் தகாத உறவை வைத்துக்கொள்ள தூண்டியும் வந்துள்ளான்.

எதற்குமே இடம்கொடுக்காத அதபியாவை பழிவாங்கப் போவதாகவும், தண்டிக்கப்போவதாகவும் எச்சரித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 5ம்திகதி இரவு 11 மணியளவில் வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்த நான்கு ஆயுததாரிகள் அதபியாவின் இரண்டு பெண்குழந்தைகளின் முன்பாக அவளை பாலியல் பலாத்காரம் புரிந்தனர். அவளை பலமாக தாக்கி அவளது தலை முடியை வெட்டினர். இதனைத் தடுக்க முயற்சித்த குழந்தைகளும் தாக்கப்பட்டனர்.

அழுகையும், பரிதாபமும், குழந்தைகளின் இரங்கலும் கூட அந்த இளைஞர்களின் கோரபசிக்கு இரையாகின. வீட்டிலிருந்த 23,500ரூபா பெறுமதியான நகைகள், 15,000 ரூபா ரொக்கப்பணம், 45,000 ரூபா பெறுமதியான சேலைகள் என்பன அந்த கும்பலினால் எடுத்துச் செல்லப்பட்டன.

அதபியாவின் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பன தீயிட்டு எரிக்கப்பட்டன. வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, மற்றும் பெறுமதியான உடமைகள் உடைத்து நாசமாக்கப்பட்டன.

அந்த அபலைப் பெண்ணின் அனைத்து உழைப்பும், உணர்வும் ஒரு சில மணி நேரத்தினுள் அவளுக்கு இல்லையென்றாகிவிட்டன.

சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, சத்தம் கேட்டு அங்கு விரைந்த அதபியாவின் சகோரதனும், அதபியாவின் வீட்டிற்கு வெளியே காவலுக்கு நின்ற சுமார் 15 பேரடங்கிய ஆயுத தாரிகளால் தாக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

5ம் திகதி நள்ளிரவு 11 மணிக்கு அதபியாவின் வீட்டிற்கு வந்த அந்த கும்பல் சுமார் 3 மணி நேரம் கோரத்தாண்டவம் ஆடிவிட்டு 6ம்திகதி அதிகாலை 2.30மணியளவில் வெளியேறினர்.

நடைபெற்ற



சம்பவம் பற்றி வெளியே தெரிவித்தால் தாம் கொலை செய்யத்தயங்க மாட்டோம் என்றும் பொலிஸ், மற்றும் அரசியல் பின்பலம் தமது இயக்கத்திற்கு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

காயங்களுடன் அதபியா மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் வழங்கிய முறைப்பாட்டின்பெயரில் இந்த வன்முறையில் சம்பந்தப்பட்டவர்களான நயினா முகமது பரீத், மற்றும் மீராசாயிபு முகமது ரபீக் என்ற இருவரும் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கடந்த 20.03.2000 திகதி அதபியாவின் வழக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க ஏறாவூர் பிரதேசத்தில் இதே வடிவில் அமைந்த வன்முறைகளும், கொலைகளும், அப்பகுதியைச் சேர்ந்த மூன்று பெண்கள் மீது கடந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் இடம்பெற்றுள்ளதும், இங்கு நோக்கப்படவேண்டி உள்ளது.

ஏறாவூர் காளி கோவில் வீதியைச் சேர்ந்த நூர் முகமது சித்தி நஜீரா என்ற பெண்ணும் கடந்த 20.02.99ம் திகதி இவ்வாறு துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று ஏறாவூர் தாமரைக்கேணி தக்வா நகரைச் சேர்ந்த அபுசாலி ஜரியா என்ற 34 வயது பெண்ணும் கடந்த 21.07.99 அன்று கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஏறாவூர்பற்று வளநார் புரத்தைச் சேர்ந்த எட்வர்ட் மேரி பெனடிக்ட் என்ற 29 வயது யுவதியும் 1999 பெப்ரவரியில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற் குறிப்பிட்டுள்ள இந்த மூன்று கொலைகளும், அதபியா மீது பலாத்காரத்தில் ஈடுபட்ட அதே குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டதாக நம்பப்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட கொலைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் எம். எம். முகமட் ஜரூல் (24) மற்றும் எஸ். எச்.முகமட் (33) என்பவர்கள் ஏறாவூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். ஆனால், பின்னர் விசாரணைகள் ஏதோ காரணத்தினால் முடக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அதபியாவின் சம்பவத்திலும், சம்பந்தப்பட்டவர்கள் என்று அதபியாவினால் அடையாளம் காட்டப்பட்ட பலர் தற்போதும் கைது செய்யப்படாமல் சுதந்திரமாக விடப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் குடாப்பள்ளி வீதியைச் சேர்ந்த ஜிப்றி, ஏறாவூர் ஒடாவியார் வீதியைச் சேர்ந்த சமீம், மற்றும் பசீர் போன்றவர்கள் இச்சம்பவத்தின் குற்றவாளிகள் என்று பாதிக்கப்பட்ட பெண்ணினால் அடையாளம் காட்டப்பட்டும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பலதரப்பாலும் தயக்கம் காண்பிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

அதபியாவிற்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி அவள் வசித்து வந்த ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த பலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதும், அவள் மீது அனுதாபம் காண்பிப்பதை விடுத்து, அவர்கள் இச்சம்பவம் வெளி உலகிற்கு தெரியவந்தது பற்றிய கவலையையும், இரசிய ஜிகாத் இயக்கத்தின் செயற்பாடு பற்றி மூடிமறைக்கு ஆர்வத்தையுமே காண்பித்தனர்.

ஒரு பெண்ணின் உரிமையும், உணர்வும் பலமாக மறுக்கப்பட்டு அவளது சமூகத்தால் மிதிக்கப்பட்ட இந்த சம்பவமானது அந்தப் பெண்ணைச் சார்ந்தவர்களாலேயே கருணையுடன் நோக்கப்படவில்லை என்ற வேதனை அந்தப் பெண்ணை மட்டுமல்ல, பெண் இனத்தையே வாட்டுகின்றது.

*நிராஜ் டேவிட்*

## சட்டம் பெண்களுக்கு உதவுகின்றது எனச் சொல்லமுடியாது!

- விஜி

**குடும்பத்திற்கு உள்ளும் வெளியேயுமான பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் குறித்து பெண்கள் தொடர்பாகப் பணியாற்றும் சூரியா பெண்கள் நிறுவனத்தில் கடமை புரியும் விஜி அவர்களுடனான உரையாடலில் இருந்து சில பகுதிகள்:**

**✓ குடும்ப உறவினர்களால் பெண்கள் முக்கியமாகச் சிறுமிகள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பான உங்களது எதிர்வினை என்ன?**

நாம் முற்று முழுதாக எதிர்க்கிறோம். உடனடி நடவடிக்கையாகச் சட்ட நிறுவனங்கள் , நீதிமன்றம், மட்டக்களப்புப் பொது வைத்தியசாலை, காவல் நிலையங்களுடன், மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

**✓ இப்படியான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் சம்பவத்தை வெளிக்கொணர விரும்பாமை பற்றி?**

குற்றம் செய்தவர் மேலும் துஷ்பிரயோகம் செய்யலாம் என்ற பயம். சமூகம் தள்ளி வைத்துவிடும், வித்தியாசமாக நோக்கும் என்ற பயம் காரணமாக வெளிக் கொணர விருப்பப்படுவதில்லை.

**✓ சம்பவத்தை வெளிக் கொணரவும், அதற்கு எதிராகப் போராடவும் தயாரானவர்களுக்குச் சட்டம் எவ்வளவு தூரம் உதவுகின்றது?**

உடனடியாக நடவடிக்கைகள் எடுபடினும் பின்னர் இழுத்தடிக்கப்படல், பாதிக்கப்பட்டவர்களைத் திரும்பவும் குற்றம் செய்தவர்களுடன் சேர்த்து வைத்தல், பாதிக்கப்பட்டவர்களிற்கான பாதுகாப்பான விடுதி ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. சம்பந்தப்பட்ட குற்றவாளியை விரைவில் பிணையில் விடுதலை செய்தல் , இழுத்தடிப்புப் போன்ற காரணத்தினால் சட்டம் இவர்களுக்கு உதவுகின்றது என்று சொல்ல முடியாது.

**✓ பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய சமூக நோக்கு எவ்வாறானதாக உள்ளது?**

உறவுகளுக்கிடையில் இப்படியான சம்பவங்கள் நடக்கின்றனவா என்பது பற்றி சமூகம் அதிர்ச்சி அடைகின்றது. இவ்வாறாக எமது சமூகத்தில் நடக்கின்றது என்பதை வெளிப்படுத்தக் கூடாது, பேசக் கூடாது எனச் சமூகம் நினைக்கின்றது. இது தங்களுடைய பிரச்சினை இல்லையென்று சமூகம் எண்ணுகின்றது.

சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்களோ குடும்ப விடயத்தை எப்படி வெளியில் சொல்லலாம் என நினைக்கின்றனர்.

**✓ வழக்குகள் திட்டமிட்டே இழுத்தடிக்கப்படுவதும், குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்படுவதும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இவ்வாறான வழக்குகளில் அதிக அக்கறை எடுப்பதில்லை என்று தான் கூற வேண்டும். எனவே நீதிவான்கள், சட்டத்தரணிகள்

➡17

நன்றி - நூலகத்திட்டம்



# ஒட்டு மொத்த சரணாகதிக்குச் சதி?

◆ சிங்கள வீரவிதானவின் கூட்டுக்கு வெளியில் இதுவரை இருந்துவந்த சிங்களயே மஹாசம்மத்த பூமி புத்திர பக்ஷய (சிங்கள மண்ணின் மைந்தர்களின் கட்சி) உட்பட பல



பேரினவாத அமைப்புகள் ஏலவே ஒரு குடையின் கீழ் திரண்டிருக்கிற சிங்கள வீரவிதானவின் கீழ் அணி சேர்ந்துள்ளன. நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்து வருகின்றன. அது இது வரை இல்லாத அளவுக்கு எழுச்சியுற்று வருகின்றது.

◆ ஐ.தே.க. மற்றும் (ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான) பொ.ஐ.மு. ஆகிய இரு பிரதான சிங்களக் கட்சிகளும் தமது ஏனைய பிரச்சினைகளை ஓரங்கட்டிவிட்டு பேரின-வாதத்தை சட்ட ரீதியில் அமுலாக்க கைகோர்த்து செயற்படும் கட்டத்துக்கு வந்துள்ளன. சுதந்திரத்திற்குப் பின் இரு கட்சிகளும் ஒன்று சேர்ந்து இயங்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க முதற்சந்தர்ப்பம் இது எனப் பல அவதானிகள் சுட்டிக்காட்டுமளவுக்கு இது இருக்கிறது.

◆ வடக்கில் தமது தோல்வியை தாங்க முடியாமல் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள் மீது தமது கையாலாகத்தனமான தாக்குதல்களை சிங்கள ஆக்கிரமிப்புப் படை மேற்கொண்டு வருகிறது. இந்த அரச பயங்கரவாதத்துக்கு இம்முறை நேரடியாகவே தலைமை தாங்குபவர் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும்,



முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா அவர்கள்.

◆ தென்னிலங்கையில் தமிழ் மக்கள் மீதான பேரினவாத இம்சைகளும், தாக்குதல்களும் அதிகரித்து வருவதாக செய்திகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

### ஜனாதிபதியின் சவடால்

இந்த நிலைமையில் தான் பேச்சுவார்த்தை சமாதானம் என்பன போன்ற மாயை அரசினால் பரப்பப்பட்டு வருகின்றன. சமாதானம் பற்றிய மாயையைப் பரப்பி உலகையும் தமிழ் மக்க-ளையும் நம்பச் செய்தும், யுத்த வெற்றிகளைக் காட்டி (யுத்தச் செலவு அதிகரிப்பு, படை நடவடிக்கைகள், தமிழர் கைது, சித்திரவதை போன்றன) சிங்கள பெரும்பான்மை மக்களை நம்பச் செய்தும் எதிர்வரும் ஓகஸ்டில் நடை-பெறவுள்ள தேர்தலுக்கான வாக்குவேட்டைக்கு தயார்படுத்துவதே அரசின் உள்-நோக்கமாக இருந்து வந்தது. ஆனால் சமீபத்-திய போர்க்கள தோல்விகளினாலும், அதனை வைத்து சிங்கள பாசிச சக்திகள் அரசுக்கு எதிராக சிங்கள மக்களை திரட்ட வருவ-தனாலும் மகதிகலங்கிய ஆளுங்கட்சிக்கு சிங்கள மக்களை ஆறுதல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. எனவே தான் சந்திரிகா அம்மையார் "வடக்கிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறப்போவதுமில்லை, ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு வந்தால் தான் பேச்சு" என்பன போன்ற வாய்ச்சவாடல் விட்டிருந்தார். தற்போதைய பேச்சுவார்த்தை சூழ்நிலையில் எதிர்கட்சியை ஆறுதல்-படுத்தும்வகையில் நடந்து கொள்கின்ற வகையில் கூட முக்கிய தேசியப் பிரச்சினையில் பொறுப்போடு நடந்து கொள்ளவில்லை.

இன்றைய நிலையில் ஆளுங் குழுமங்களுக்கு தேசியப் பிரச்சினையானது வெறுமனே தேர்தல் தயாரிப்புகள் மாத்திரம். தேர்தல் வரை இதனை இழுத்தடித்தால் போதுமானது. அதன் பின்னர் என்ன ஆனாலும் சரி.

### அப்பட்டமான சிங்களபௌத்த அரசு

மேலும் மகா சங்கத்தினர் உள்ளிட்ட பேரினவாத சக்திகளுடன் தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்த ஜனாதிபதி சம்மதித்துள்ளார். கடந்த காலங்களில் இதே சக்திகளுடன் பேச்சுவார்த்தைகளோடு ஒட்டித் தான் தீர்வு யோசனைகளில் குறைப்புகள் செய்யப்பட்டன என்பது தெரிந்ததே. "கடந்த ஐந்து வருடங்களுக்குள் புத்தசாசன அமைச்சுக்கு மாத்திரம் 2,200 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளது, பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட அரச நிர்வாக கட்ட-மைப்பையுடைய ஒரு நாடு இது" என்றும் அவர் பெருமையாகக் கூறியிருந்தார் (அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணைத்தளமான http://www.priu.gov.lk/இல் 31 ஜனவரி அறிக்கையில் இச் செய்தியுள்ளது). கடந்த ஜனவரி மாதம் அம்பன்வல பன்னசேகர தேரர் மல்வத்த பீடாதிபதியாக நியமனம் பெற்றது தொடர்பான சம்பிரதாயபூர்வமான உரையின் போதே இத்தகவலை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அரசாங்கம் பதவியிலமர்ந்ததும் இந்து சமய மற்றும் முஸ்லிம் சமய அமைச்சுகளை அகற்றியது. புத்தசாசன அமைச்சு ஒரு முழு அமைச்சாக இயங்கிக் கொண்டிருக்க இந்து மற்றும் முஸ்லிம் அமைச்சுகள் கூட அதுவரை இராஜாங்க அமைச்சுகளாக மட்டுமே இருந்தது. அவற்றை வெறும் திணைக்களங்களாக மாற்றி அவற்றுக்-கான நிதியொதுக்கீடுகளையும் குறைத்த பொ.ஐ.மு. அரசு புத்தசாசன அமைச்சை முழு அமைச்சாகவே தொடர்ந்த அதே நேரம் ஜனாதிபதி சந்திரிகாவே அதன் அமைச்-சராகவும் இருந்தார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகச் சொல்லிக்கொண்ட ஜனாதிபதி உத்தேச அரசியலமைப்பில் பௌத்த மதமே அரச மதம் என்பதையும் வலியுறுத்தினார். இப்படி சிங்களப் பேரினவாதத்துடன் கைகோர்த்தும், அதனைத் திருப்திப்ப-டுத்துவதற்காக தமிழ் மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்தும், மறுத்தும் வருகிறது. இந்தப் பின்னணிகளோடு தான் இன்றைய சமாதான முயற்சிகள் குறித்த விடயங்களையுதம் சந்தேகிக்க வேண்டியுள்ளது. பேச்சுவார்த்தைக்கு முன் அதிக விட்டுக்கொடுப்புகளையும், தமது நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்தும் தார்மீகப் பொறுப்பு அரசுக்கே அதிகம் உள்ள நிலையில் தமிழ் தரப்பை நோக்கி நிபந்தனைகள் விதிப்பது அரசின் பேரினவாத பக்கச்சார்பை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

### இலங்கைக்கான புதிய நோர்வே ஆலோசகரின் பின்னணி

நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜக்லான்ட் கடந்த மார்ச் 30ஆம் திகதியன்று இலங்கை விவகாரத்தை கவனிப்பதற்கென விசேட ஆலோசகர் ஒருவரை எதிர்வரும் 6 மாதங்களுக்கு நியமித்தது. அவர் எரிக் சுல்ஹைன் (Erik Solheim). சோசலிச இடது (socialist venstre) கட்சியின் தலைவராக இருந்த இவர் சமீபத்தில் பதவி கவிழ்ந்த கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்-தவர். சோசலிச இடது கட்சியின் வெளிவிவகார கமிட்டிக்கு தற்போது பொறுப்பாக இருப்பவர். இக்கட்சி தம்மை 'இடதுசாரிக் கட்சி' என அழைத்துக் கொண்ட போதும் அது இதுவரை காலம் "வலது சாரிக்" கட்சியாகவே செயற்பட்டு வந்திருக்கிறது. தாராளவாதத்திற்கு ஆதரவான இந்தக் கட்சியோடு ஒப்பிடுகையில் AKP மற்றும் NKP போன்ற கட்சிகள் இடதுசாரிக்-கொள்கையில் சற்று தீவிரமான கட்சிகள் எனலாம்.



ஜக்லானும் எரிக் சுல்ஹைனும்

இவரைத் தெரிவு செய்த-தற்கான காரணமாக கூறப்-படுவது யாதெனில் இவரது கட்சியானது "All Party Solidar-ity Group for Sri Lanka" எனும் அமைப்புடன் நீண்டகாலமாக சேர்ந்தியங்கி வந்தது. இவ்-வமைப்பு 1993இல் மானுவேல் பிள்ளை என்பவரின் தலை-மையில் மேலும் 7 நோர்-வேஜியர்களை இணைத்து நோர்வேயில், பேர்கன் எனும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு. (இதில் ஆர்னே சியொடொப்ட் என்பவரும் ஒருவர். இவர் முன்னாள் சோசலிச இடது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். இவர் இலங்கையில் சீனோர் எனும் மீன்பிடி திட்டத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆட்-சியின் போது அமைத்த-வர்களில் ஒருவர். மேலும் World Media View எனும் அமைப்புக்கு தலைவராக இருக்கிறார். இதன் கிளை தற்போது கொழும்பிலும் இயங்குகிறது.) இவ்வமைப்-பைச் சேர்ந்தவர்கள் இலங்கை சமாதான முயற்சிகளில் ஆரம்பத்தில் ஈடுபட்டு வந்தனர். இலங்கையிலுள்ள பாராளுமன்ற உறுப்-பினர்கள், வெளிநாட்டிலுள்ள விடுதலைப்-புலிகளின் பிரதிநிதிகள், மற்றும் என்.ஜீ.ஓ.-க்களைச் சேர்ந்த பிரமுகர்கள் என்போரை அப்போது நோர்வே அழைத்து கருத்தரங்குகள் ஏற்பாடு செய்திருந்ததும் இவர்களே. ஆரம்பத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் மைத்துனர் குமார் ரூபசிங்கவும் இவ்வமைப்-புடன் சேர்ந்து பணிபுரிந்தார். இவ்வமைப்-போடு நெருங்கிப் பணிபுரிந்த சோசலிச இடது கட்சியின் அப்போதைய தலைவரையே இப்போதைய ஆளுங்கட்சியான தொழிற்கட்சி தெரிவு செய்திருக்கிறது. ஆனால் இவர் அதற்கு



எரிக் சுல்ஹைன்

உகந்த நபர் அல்ல எனும் கருத்து பரவலாக உள்ளது.

மேற்படி All Party Solidarity Group for Sri Lanka அமைப்பு புலிகளின் முன்னணி அமைப்பு என்று நோர்வேயில் உள்ள திவய்ன பத்திரிகையின் நிருபர் திவய்னவுக்கு எழுதி வருகிறார். இப்போது நடக்கும் பேச்சுவார்த்தையின் பின்னணியில் இவ்வமைப்பும் கணிசமான பாத்திரத்தை ஆற்றிவருவதாக பேசப்படுகிறது.

இலங்கைக்கான நோர்வே துாதுவர் இலங்கையிலிருந்து பேச்சுவார்த்தைக்கான சாதக பாதகங்களை விளக்குவதற்கென நோர்வே வந்தடைந்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் இந்தப் பேச்சுவார்த்-தையின் வெற்றியை இந்தியாவின் ஆசீர்வாதமின்றி சாத்தியமாகாது என்று நோர்வே கருதி வருகிறது.

பேச்சுவார்த்தைக்கு முன் யாழ்ப்பாணத்-தைக் கைப்பற்றி தமது பேரம் பேசும் ஆற்றலைப் பெருப்பித்ததன் பின்னரே புலிகள் பேச்சு-வார்த்தைக்கு வருவார்கள் என்கிற கருத்து பரவலாக இருக்கின்ற நிலையில் அரசு கலங்கிப் போயுள்ளது.

தமிழ் தரப்பை மெதுவாக சமரசத்திற்குக் கொண்டு வந்து படிப்படியாக கீழ்ப்படிய வைத்து ஒட்டுமொத்தமாக சரணடையச் செய்யும் முயற்சியைச் செய்து வரும் அரசின் தந்திரோபாயத்திற்கு அகப்படாமல் தப்பி தேசத்தின் நலனிலிருந்து மிகுந்த எச்சரிக்கை-யுடன் நோக்க வேண்டிய தருணம் இது.

— என் சரவணன்

நன்றி - நூலகத்திட்டம்



# அரச சாரா நிறுவனங்களும் சமூக அரசியல் இயக்கங்களும்

பகுதி 2

அரசு சாரா நிறுவனங்கள் வலியுறுத்துவது திட்டங்களைத் தானே ஒழிய, இயக்கங்களை அல்ல. பற்றாக்குறையாக உற்பத்தி செய்ய மக்களை இவை "ஒன்றுபடுத்து"மே ஒழிய, உற்பத்திச் சாதனங்களையும், செல்வத்தையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் போராடுவதில்லை. அவை கவனம் செலுத்துவது திட்டங்களுக்கான தொழில்நுட்ப நிதியுதவிகளின் மீது தான். மக்களின் அன்றாட வாழ்வை சீர்படுத்தும் அமைப்பியல் நிலைமைகளின் மீது அல்ல. இடதுசாரிகளின் மொழியை அரசு சாரா நிறுவனங்கள் பகிர்ந்து கொள்கின்றன. 'பரவலான அதிகாரம்', 'அதிகாரம் ஏற்படுத்தல்', 'பால் சமநிலை', தக்க வைக்கக்கூடிய வளர்ச்சி', 'கீழிருந்து மேல் விரவும் தலைமை'. இதில் பிரச்சினை என்னவென்றால் இந்த மொழியானது செயல்படுவதற்கான நடைமுறை சாத்தியமுள்ள செயல்பாடுகளை அமைதியான அரசியலுக்கு கீழ்படியச் செய்யும் புரவலர்களும் அரசு தரகர்களும் கூட்டாக இணைந்த அமைப்புடன் தொடர்புடையதாக இருப்பது தான். அரசு சாரா நிறுவனங்கள் செயல்பாட்டின் குறுகிய தன்மையில் "அதிகாரம் ஏற்படுத்தல்" என்பது பரந்துபட்ட பொருளாதார கண்ணோட்டத்தில் நவதாராள அரசு அனுமதிக்கும் வரையறைக்குள் சிறிய வட்டங்களில் சமூக வாழ்வை மிகக் குறைந்த ஆதாரங்களைக் கொண்டு மாற்றப் பார்ப்பது தான்.

அரசு சாரா நிறுவனங்களும் மார்க்ஸுக்குப் பிந்தைய காலகட்டத்துத் தொழில் நிபுணர்களும், ஏழைகளும், பெண்கள், ஒதுக்கப்பட்ட இனங்கள் ஆகியோரிடையே நன்மதிப்பைப் பெறுவதற்காக சமூக - அரசியல் இயக்கங்களுடன் நேரடியாகப் போட்டி போடுகின்றன. அவற்றின் கொள்கையும் அதை நடைமுறைப்படுத்தும் விதமும் வறுமையின் தோற்றுவாய், நிவாரணம் ஆகியவற்றிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் இருக்கின்றன. (கீழ்நோக்காகவும் மேல் நோக்காகவும், வெளிப்புறமாகவும் பார்க்காது, உட்புறமாகப் பார்ப்பது) வெளிநாட்டு வங்கிகளின் சுரண்டலை ஒழிப்பதை விட்டுவிட்டு சிறு நிறுவனங்களை பிரச்சினையின் தீர்வாக முன்வைப்பது என்பது, கவனிக்கப்பட வேண்டியது தனிமனித முயற்சிதானே ஒழிய, வருவாயை வெளிநாடுகளுக்கு மாற்றுவது அல்ல என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. சமூகங்களுக்கிடையில் சொற்ப வளங்களுக்காக போட்டி உண்டாக்கி கண்ணுக்குப் புலப்படாத வித்தியாசங்களை தோற்றுவித்து சமூகத்துக்கு உள்ளும், சமூகத்துக்கு இடையேயும் பகையை வளர்த்து விட்டு வர்க்க ஒருமைப்பாட்டை குலைக்கத்தான் அரசு சாரா நிறுவனங்கின் பண பலம் சமூகத்தின் ஒரு சாராருக்கு உதவுகிறது. இது தொழில் நிபுணர்களுக்கும் பொருந்தும். அவர்களும் தனித்தனியே அரசு சாரா நிறுவனங்களை ஏற்படுத்தி வெளிநாட்டு நிதியுதவியைக் கோருகிறார்கள். தங்களை ஆதரிப்பவர்களுக்காக வாதிடுவதாக சொல்லிக் கொண்டு, வெளிநாட்டு புரவலர்களுக்கான உவப்பான திட்டங்களை முன்வைப்பதில் இவர்கள் போட்டி போடுகிறார்கள்.

இதன் பயனாக அரசு சாரா நிறுவனங்கள் எண்ணிக்கையில் பெருகி வறிய சமூகங்களை பகுதிகளாகவும் சிறு பகுதிகளாகவும் பிரித்து விடுவதால் இம் மக்கள் தங்களை வருத்தும் அகன்ற சமூக நிலைபற்றித் தெரிந்து கொள்ளாமல், அமைப்புக்கு எதிராகப் போராட ஒருங்கிணைய முடியாமல் போய் விடுகிறது. தற்போதுள்ள அரசியல் மற்றும் சமூக நிலைமைகளுக்கு எதிரான சவால்கள் எழும்போது, அந்த 'கடினமான' நிலையை சமாளிக்கவும், இந்த வெளிநாட்டுப் புரவலர்கள் நிதியுதவி அளிப்பது சமீபத்திய அனுபவங்களின் மூலம் தெரியவருகிறது. அந்நிய நாடுகள் நிதியை அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்கி "கூட்டாக செயல்பட்டு" அவற்றின் திட்டங்களை நவதாராள செயற்திட்டத்துடன் இணைத்துக் கொள்கின்றன. சமூக மாற்றத்துக்கான சமூக ஒருங்கமைப்பு என்பதை விடுத்து "தாராளச் சந்தை"யுடன் ஒத்துப் போகக் கூடிய பொருளாதார மேம்பாடு என்பதற்குத் தான் நிதி ஒதுக்கீட்டில் முதன்மை இடம் தரப்படுகிறது.

அரசு சாரா நிறுவனங்களின் அமைப்பும் இயல்பும், அவற்றின் அரசியலற்ற பாசாங்கு நிலைமையும், சுய - உதவியில் அவற்றுக்கு உள்ள அக்கறையும், ஏழை மக்களை அரசியல் பிரக்ஞையற்றவர்களாக்கி ஒருங்கிணைய முடியாமல் செய்கிறது. நவதாராள கட்சிகளும் ஜனரஞ்சக தொலைத்தொடர்பு சாதனங்களும், ஊக்குவிக்கும் தேர்தல் நடவடிக்கைக்கு இவை வலுவூட்டுகின்றன. ஏகாதிபத்தியத்தின் தன்மை நவதாராளவாதத்தின் வர்க்க அடிப்படை, ஏற்றுமதியாளர்களுக்கும் தற்காலிக தொழிலாளர்களுக்கும் இடையிலான வர்க்க போராட்டம் ஆகியவற்றைப் பற்றிய அரசியல்கல்வி தவிர்க்கப்படுகிறது. மாறாக, "விலக்கப்பட்டவர்கள்", "அதிகாரமற்றவர்கள்", "தாங்கமுடியாத வறுமை", "பால் மற்றும் இன மாறுபாடு" பற்றியெல்லாம் அரசு சாரா நிறுவனங்கள் விவாதிக்கும் போது, இந்நிலைகளை உற்பத்தி செய்யும் சமூக அமைப்பைப் பற்றிப் பேசாமல், மேலோட்டமான கூறுகளை மட்டுமே விவாதிப்பதோடு நின்று விடுகின்றன. "தனியார் தன்னார்வ நடவடிக்கை"யின் மூலம் ஏழைகளை நவதாராள பொருளாதாரத்துடன் இணைக்கும் அரசு சாரா நிறுவனங்கள் தேசிய மற்றும் சர்வதேசிய அதிகாரக்கட்டமைப்பைப் போற்றிப் பாதுகாக்கும் கவசம் போன்றதொரு அரசியல் உலகை சிருஷ்டித்து விடுகின்றன.

அரசு சாரா நிறுவனங்கள் அதிகாரம் செய்யும் நிலையில் இருக்கும் சில பிரதேசங்களில் சுதந்திரமான வர்க்க அரசியல் நடவடிக்கை குறைந்து நவதாராளவாதம் கேள்வி கேட்பாறின்றி போய்விடுவது எதேச்சையான நிகழ்வு அல்ல. உண்மை நிலை என்னவென்றால், அரசு சாரா நிறுவனங்களின் வளர்ச்சிக்கு நவதாராளவாதம் நிதிஒதுக்கீட்டை அதிகரிக்கும் போது, எல்லா இடங்களிலும் வறுமை தீவிரமாகப் பரவி வருகிறது. அங்கங்கே உள்ளூர் வெற்றிகள் கிட்டியதாக கேள்விப்பட்டாலும், நவதாராளவாதத்தின் ஒட்டுமொத்த அதிகாரம் கேள்வி முறையின்றிப் போவதும் அரசு சாரா நிறுவனங்களின் அதிகார வட்டாரங்களில் ஒப்புக் கொள்ள இடம்பிடிக்க மென்மேலும் முயற்சி செய்வதும் கண்கூடு.

மாற்று வழிகளை ஏற்படுத்தும் விஷயமும் வேறுவழிகளில் தடைபட்டு வருகின்றன. முன்னைய கெரில்லாத் தலைவர்களும், சமூக இயக்கங்களும், தொழிற் சங்கங்களும், பெரிய அளவிலான பெண்கள் அமைப்புகளும் அரசு சாரா நிறுவனங்களால் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதிகாரத்திலுள்ளவர்களுடன் இணைந்து சமூகத்திற்கு ஏதாவது நன்மைகள் செய்ய முடியுமென்ற எதிர்பார்ப்பில் அல்லது மயக்கத்தில் அரச சாரா நிறுவனங்களிடம் இவர்கள் ஈர்க்கப்பட்டதும் உண்மை தான். அதிக சம்பளம் (சில சமயம் டாலர்களில்), கௌரவம், வெளிநாட்டுப் புரவலர்களால் மதிக்கப்படுவது, வெளிநாட்டு மாநாடுகள், வலைப்பின்னல்கள், அலுவலக உதவியாட்கள், ஒடுக்கப்படுவதிலிருந்து ஓரளவுக்கு பாதுகாப்பு போன்ற இந்தச் சலுகைகள் எப்படியும் ஆசையைத் தூண்டுபவை தான். சமூக அரசியல் இயக்கங்கள் இதற்கு நேரெதிராக குறைந்த லோகாயத சலுகைகளையும், அதிக மதிப்பும் சுதந்திரமும் தருவதோடு



முக்கியமான அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளை கேள்விக்குள்ளாக்கும் சுதந்திரமும், தருகின்றன. அரசு சாரா நிறுவனங்களும் அவற்றின் வெளிநாட்டு வங்கி ஆதரவாளர்களும் (சர்வ- அமெரிக்க வளர்ச்சி வங்கி, உலக வங்கி) மதிப்பிற்கும் செய்தி அறிக்கைகளின் நிறுவனங்களின் பிற சுய - உதவித் திட்டங்களின் வெற்றிக்கதைகளையும் குறிப்பிடுகிறார்கள். ஆனால், இன்று மெக்ஸிகோ சிடியில் உள்ளது போல் பரவலான நுகர்வின் அளவு குறைவதையோ சந்தை மலிவான இறக்குமதிப் பொருட்களால் நிரம்புவதையோ, வட்டிவிகிதங்கள் ஆகாயத்துக்கு உயர்வதையோ இவை குறிப்பிடுவதில்லை.

இறுதியாக அரசு சாரா நிறுவனங்கள் புதுவித கலாசார, பொருளாதார, காலனியத்தையும், அண்டிப் பிழைக்கும் நிலைமைகளையும் தான் நிலைப்படுத்துகின்றன. ஏகாதிபத்திய மையங்களுக்கும், அவற்றின் அமைப்புகளுக்கும் ஏற்புடைய "வழிகாட்டுதல்"களின் அடிப்படையில் தான் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன, அல்லது ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவை அமுலாக்கப்பட்டு சமூகங்களிடையே "விற்கப்"படுகின்றன. ஏகாதிபத்திய அமைப்புகளால் அவற்றுக்கு ஏற்றபடி மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. நிதி ஒதுக்கீட்டு முறையில் மாற்றங்கள் வரும் போதோ அல்லது தவறான மதிப்பீடுகள் செய்யப்படும் போதோ குழுக்கள், சமூகங்கள், பண்ணைகள், கூட்டுறவு நிறுவனங்கள் யாவும் கைவிடப்படுகின்றன. எல்லாமும் / எல்லோரும் திட்ட மதிப்பீட்டாளர்களின் / புரவலர்களின் தேவைகளை கவனத்திற் கொண்டு செயல்பட கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. புதிய அரசுப்பிரதிநிதி மேற்பார்வை பார்த்து புரவலரின் இலக்கை, மதிப்பீடுகளை, கொள்கைகளை ஒத்துப்போவதை, நிதி ஒதுக்கீட்டை சரியானபடி உபயோகிப்பதை, நிச்சயப்படுத்துகின்றன. எங்கெல்லாம் "வெற்றிகள்" கிடைக்கிறதோ, அங்கெல்லாம் வெளியிலிருந்து கிடைக்கும் உதவியை பெரிதும் நம்பியிருப்பதால், அந்த உதவி கிடைக்காவிட்டால் இவை குலைந்து போய் விடும். படிநிலை அமைப்புகளும், மாற்றப்படும். "உதவி", "பயிற்சி" ஆகியவற்றின் வடிவமும் பத்தொன்பதாம் நூற்றாண்டு தர்மத்தைப் போலவே இருப்பதால் இதனை ஊக்குவிப்பவர்களும் கிறிஸ்தவ மடாலயங்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்லர். அரசு சாரா நிறுவனங்கள் அரசின் "அடக்கியாளும் தன்மைக்கும், சார்ந்திருக்கச் செய்வதற்கும்" எதிராக "சுய - உதவி"யை வலியுறுத்துகின்றன. இப்படியாக நவதாரளவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களைக் கைப்பற்றுவதில் போட்டிபோடும் அரசு சாரா நிறுவனங்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள தங்கள் சகாக்களிடமிருந்து முக்கியமான மானியங்களை பெறுகின்றன. சுய - உதவிக்கோட்பாடு பொது ஊழியர்களின் இடத்தில் தன்னார்வலர்களை முன்னேறக் கூடிய தொழில் நிபுணர்களையும், தற்காலிக அடிப்படையில் அமர்த்தும்படி வலியுறுத்துகிறது. அரசு சாரா நிறுவனங்கள் அறிவுஜீவிகளின் அடிப்படைத் தத்துவமே "ஒற்றுமை"யை ஒத்துழைப்பாக"வும், நவதாரளவாதத்தின் அகண்ட - பொருளாதாரத்துக்குக் கீழ்ப்படிதலாகவும் மாற்றுவது தான். இப்படித் தான் உயர்வர்க்கத்தினரின் கையில் சென்று சேரும் அரசியல் வளங்களிலிருந்து பார்வையை தூரவிலக்கி கவனத்தை ஏழைகளின் சுய சுரண்டலின் மேல் குவிக்கிறது.

பெரும்பான்மையான அரசு சாரா நிறுவனங்கள் நவதாராளவாதத்தின் கருவிகளாகச் செயல்பட்டுவரும் அதே சமயத்தில் ஒரு சில அமைப்புகள் மட்டும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும், வர்க்க அரசியலையும் ஆதரிக்கிற மாற்று நிலைப்பாட்டை வளர்த்தெடுக்க முயற்சி செய்கின்றன. இவை உலக வங்கி, ஐரோப்பிய, அமெரிக்க அரசின் உதவி எதையும் பெறுவதில்லை. தேசிய அதிகாரத்தைப் பெறப்போராடும் உள்ளூர் சக்திகளை ஒருங்கிணைக்க இவை ஆதரவு தருகின்றன. உள்ளூர் திட்டங்களை தேசிய - சமூக - அரசியல் இயக்கங்களுடன் இவை இணைக்கின்றன. இவை பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக பெரிய நிலப்பரப்பு கொண்ட எஸ்டேட்டுக்களை ஆக்கிரமித்துக் கொண்டு பொதுச்சொத்தையும், தேசிய உரிமையையும் காக்கின்றன. நிலத்தை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூக இயக்கங்களுக்கு இவை அரசியல் ஆதரவு தருகின்றன. வர்க்க நோக்குடன் இணைந்த பெண்கள் போராட்டங்களை இவை ஆதரிக்கின்றன, உள்ளூர் மற்றும் உடடினப் போராட்டங்களை வரையறுப்பதில் அரசியலுக்கு உள்ள முக்கியத்துவத்தை இவை அறிந்திருக்கின்றன. உள்ளூர் நிறுவனங்கள் தேசிய அளவில் போராட வேண்டும். என்றும், தேசியத் தலைவர்கள் உள்ளூரில் இயக்கத்தில் செயல்படுவோருக்கு பதில் சொல்லக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றும், இவை சொல்கின்றன.

அரசு சாரா நிறுவனங்களில் செயல்படும் நவதாராளவாதத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் அவற்றுக்கு உள்ள தொடர்பையும் குறிப்பிட்ட சில நாடுகளை உதாரணமாக எடுத்துக் கொண்டு ஆராயலாம்.

## இதற்கு யார் பொறுப்பு?

கடந்த நவம்பரில் விடுதலைப் புலகளின் ஓயாத அலைகள் -3 தாக்குதல்களினால் இரண்டு வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரால் பெரும் மனித மற்றும் ஆயுதவிலை கொடுத்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை பாரிய ஆயுத தளபாடக் கிடங்குகளுடன் கைவிட்டு பின்வாங்கவேண்டிய நிலை இராணுவத்தினருக்கு ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால், 5 மாதங்களின் பின்னர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட "இராணுவ விசாரணை மன்று", அறிக்கையொன்றினை ஜனாதிபதியிடம் அளித்திருந்தது. இதனடிப்படையில் ஏழு இராணுவ உயர் அதிகாரிகள் தமது கடமையைச் செய்யத்தவறி பாரிய பின்னடைவிற்கான காரணகர்த்தாக்களாக்கி அனுப்பட்டார்கள். உண்மையிலேயே இது இலங்கை இராணுவ வரலாற்றில் ஒரு மைல் கல்லே.

இங்கு முக்கிய விடயம் என்னவென்றால், வன்னியில் ஏற்பட்ட தோல்விக்கு இந்த ஏழு பேரும் தான் பொறுப்பா? உதாரணமாக ஒட்டுசுட்டானில் ஏறக்குறைய 600 கடற்படைவீரர் குறிப்பிட்ட கடற்படைக்காமாண்டர் ஒருவரின் தலைமையின் கீழ் முன்னணிக் காவலரண்களில் (Forward Defence Lines) தாக்குதலின்போது நிறுத்தப்பட்டிருந்தார்கள். அக்குறிப்பிட்ட கமாண்டர் உட்பட காயங்கள் ஏதும் இன்றி தந்திரோபாயமாக பின்வாங்கி பூனாவ வரை வந்திருந்தார்கள். இவர்களே முதல்முதலாக அவ்விடத்தை விட்டு ஓடிவந்தவர்கள் ஆவர். அப்படியாயின் அவர்களிற்கும் இப்பாரிய பின்னடைவிற்கும் தொடர்பேதும் இல்லையா? இவர்களில் பொறுப்பு வாய்ந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்களில்லையா? அவர்களிற்குக் கட்டாய ஓய்வு இல்லையா? ஏனிந்த பாரபட்சம் இவைகளே இன்று சில இராணுவ உயர் மையங்களில் கேட்கப்படுகின்ற வினாக்கள் ஆகும்.

o o o

## பளையில் தோல்வி அடைந்தால்....

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் - 3 இன் நான்காவது கட்டம் தற்போது பளைப்பகுதியில் படையினரின் பாதுகாப்பு நிலைகளையும் முகாம்களையும் ஊடறுத்து நிற்கிறது. இது இராணுவத்துறையினரைப் பொறுத்தவரை ஒரு நெத்தியடி. இதனை நன்றாகவேயுணர்ந்து கொண்ட முப்படைகளின் தளபதியும், ஜனாதிபதியுமாகிய சந்திரிகா அம்மையார் அவர்கள் கடந்த புன்கிழமை நடந்த விசேட பாதுகாப்பு மாநாட்டின் பின்னர் முப்படைத் தளபதிகளையும் உடனடியாகவே வடபுலம் சென்று நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும்படி கடுமையாக உத்தரவிட்டார். அங்கே சென்ற முப்படைத் தளபதிகளினால் ஒருவாரம் கழித்தும் நல்ல செய்தியை அம்மாவிற்கு வழங்க முடியவில்லை. ஆகவே பளையில் உள்ள இராணுவ நிலைகளை படையினர் கைவிட நேர்ந்தால் இம்மும்மூர்த்திகளும் கட்டாய ஓய்வில் அனுப்பப்படுவார்களா என்றும் ஒரு பகுதி சீருடைத் தரப்பினரால் கேள்வியெழுப்பப்படுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆனையிறவை நோக்கி புலிகள் பெருஞ் சமர்

மீண்டும் விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் 03 இராணுவ நடவடிக்கையின் நான்காம் கட்டம் ஆனையிறவுப் படைத் தளத்தை இலக்கு வைத்து அதனை அண்டிய பகுதிகளில் ஓங்கி அலை வீசிக் கொண்டிருக்கிறது. வழமை போலவே விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஆரம்பமானது. மார்ச் 26 ஞாயிறு இரவு 09.35



மணியளவில் பிரபாகரனின் நேரடி வழிநடத்தலில் கடற்படைத் தளபதி சூசையின் கட்டுப்பாட்டின் கீழ் புலிகளின் விசேட பயிற்சி பெற்ற தாக்குதல் அணிகள் பூநகரி, நாகதேவன் துறையிலிருந்து கடல்நீரேரிப் பகுதியூடாக வந்து ஒரே சமயத்தில் பளைப் பகுதியிலும், வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கரையோரக் கிராமங்களான மாமுனை, குடாரப்பு, செம்பியன்பற்று மற்றும் தாளையடி பகுதிகளில் அமைந்திருந்த இராணுவ நிலைகள் மீதும் சமகாலத் தாக்குதலை நேரடியெனத் தொடங்கினர். புலிகளின் அதிவேக மோட்டார் பொருத்தப்பட்ட கண்ணாடியிழைப் படகுகளின் நடமாட்டத்தை ராடர்களில் அவதானித்த கடற் படையினரின் காவல் ரோந்து அதிவேகத் தாக்குதற் படகுகள் தாக்குதலுக்குக் கடற்படை மையங்களிற்கு அவசர ரேடியோ செய்திகளையும் பரிமாற்றினர். விபரத்தை உணர்ந்து மின்னலென் விரைந்த கடற்படையினரிற்குப் பெரியதொரு கடல் யுத்தம் காத்தும் கிடந்தது. இதற்கிடையில் மாமுனைப் பகுதியை அண்டிய கடற் புலிகளின் கரைகளை ஆயுதப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் தாக்குதல் படகுகள் மீது மழையெனக் குண்டுமாரி பொழிந்தனர். இந்தப் படகுகளில்



சுமார் 250ற்கு மேற்பட்ட புலிகள் தரையிறங்கும் நோக்குடன் கனரக ஆர்.பி.ஜி. மற்றும் மோட்டார் ஆயுதங்கள் சகிதம் வந்திருந்தனர். உதவிக்கு வந்த மேலதிக தாக்குதற் படகுகளும் யுத்தத்தில் இணைந்து கொண்டு புலிகளின் படகுகள் மீது 30 கலிபர் துப்பாக்கிகளாலும், பீரங்கிகளாலும் தாக்குதலைத் தொடுத்தன. இதனால் விடுதலைப் புலிகளின் இரண்டு கண்ணாடியிழைப் படகுகள் கடலிலேயே சங்கமித்தன. இன்னொரு படகு பாரிய சேதத்திற்குள்ளாகியது.

ஆனாலும், புலிகளின் உக்கிர தாக்குதலால் நிலை குலைந்த கடற்படையின் படகுகள் செய்வதறியாது பின்வாங்கிய இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த புலிகள் 90 நிமிடச் சண்டையின் பின் மாமுனையை அண்டிய பகுதிகளில் தரையிறங்கினர். இதனைச் சற்றுமே எதிர்பார்த்திராத மாமுனை இராணுவ முகாம் வீரர்கள் தமது கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளும், பதிலுக்குப் படையினரின் பங்கர்கள் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தினர். திங்கள் பொழுது புலரு முன்னரே புலிகள் மாமுனை இராணுவ முகாம் பகுதியைத் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் குறைந்த இழப்புகளுடன் கொண்டு வந்தனர். கடற்படையினரின் எதிர்த் தாக்குதல் 100% கடுமையாக இருந்திருக்குமேயானால் கடலிலேயே புலிகளுக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கும்.

மாமுனையில் நிலை கொண்டிருந்த படையினர் யாழ். பிராந்திய இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரில் பின்வாங்கிச் செம்பியன்பற்று வடக்குப் பகுதிகளில் தமது நிலைகளைப் பலப்படுத்தினர். ஆனால், புலிகளின் தொடர்ந்த தாக்குதல் அங்கிருந்த படை நிலைகளின் உறுதியினைச் சீர்குலைத்தது.

ஆனையிறவுப் படைத் தளத்தை நோக்கிய நகர்வின் வடமராட்சி கிழக்கில் தாக்குதலில் ஈடுபட்டிருந்த புலிகள், கடந்த புதன்கிழமையளவில் மேலும் மூன்று தொடர் அணிகளை மோட்டார், மற்றும் ஆர்.பி.ஜி. தாக்குதலால் மேலதிக உயிரிழப்பைச் சந்திக்க விரும்பாத படைத்தரப்பு மருதங்கேணி - தாழையடி - செம்பியன்பற்று நிலைகளில் இருந்து 'தந்திரோபாயமாகப்' பலத்த இழப்புகளுடன் பின்வாங்கின. புதன்கிழமை இரவு வன்னியில் இருந்து இயங்கும் புலிகளின் இரகசிய வானொலியான "புலிகளின் குரல்" தனது செய்தியறிக்கையில் வடமராட்சி கிழக்கில் புலிகள் மாமுனையில் இருந்து, நாகர்கோவில் வரை பெருங்கடல் பரப்பிற்கு அணித்தாக உள்ள 32 கி. மீட்டர் மேற்பட்ட நிலபரப்புக்களை நாம் இராணுவத்தினரிடம் இருந்து அடித்தெடுத்துள்ளதாகவும் நாகர்கோயில் பகுதியே எஞ்சியுள்ளதாகவும் அறிவித்தது. ஆனாலும், மறுநாள் காலை இப்பிரதேசங்களிற்குத் தென்மேற்காக அமைந்துள்ள பதிராயன் இராணுவ முகாம் மீது புலிகள் தமது தாக்குதல்களை அதனைக் கைப்பற்றும் நோக்குடன் தொடர்ந்தனர். ஆனாலும் விமானப் படையினரின் கிபிர் குண்டு வீச்சுத் தாழ விமானங்களும், கன்ஷிப் உலங்கு வானூர்திகளும் புலிகளின் நிலைகள் எனக் கருதப்பட்ட நிலைகள் மீது குண்டுமாரி பொழியக் கிளாலியில் இருந்த ஆட்டிலறி பீரங்கிகளும் ஏறிகணைகளை அவ்விடத்தை நோக்கிக் கக்கின.

இதனால் புலிகளின் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. இத்தாக்குதலின் காரணமாக இப்பகுதியில் இருந்த 5000ற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அண்மையிலுள்ள கோவில்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். அவர்களுக்கான சமைத்த உணவுகளை அவ்வப்பகுதி பிரதேசச் செயலாளர்கள் பொட்டலங்களாக விநியோகித்தனர்.

மறுமுனையில் பளைப் பகுதியில் பிரதான வழங்கல் ஏ09 பாதையில் அமைந்துள்ள இராணுவக் காவல் சுவர்கள் மீது ஊடறுப்புத் தாக்குதல் ஒன்றைப் புலி வீரர்கள் மேற்கொண்டனர். ஊடறுப்புத் தாக்குதலின் மூலம் அவர்கள் பளைக்கும், முகமாலைக்கும் இடையில் சுமார் நான்கரை கீ. மீ. நீளமான அதி தீவிர இராணுவப் பாதுகாப்பு அரண்களையும், வேலிகளையும், கைப்பற்றி அங்கு நிலை கொண்டனர். இதற்கு முன்னர் அங்கு ஊடுருவிய சிறுத்தைப் புலி அணியினரின் வீரர்கள் பளை பிரதான இராணுவத் தளத்தில் அமைந்திருந்த ஆட்டிலறி பீரங்கித் தளங்கள் வரை பதுங்கிச் சென்று அவற்றைக் குண்டு வைத்துத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். புலிகளின் தரப்புச் செய்திகளின்படி அவர்கள் அங்கிருந்த 11 இராணுவ நீண்ட தூர ஆட்டிலறி பீரங்கிகளை அழித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், உயர்இராணுவ அதிகாரிகளின் தகவல்களின்படி 152 மி. மி. ஆட்டிலறி ஒன்றும், 130 மி. மி. ஆட்டிலறி ஒன்றும் 122 மி. மி. ஆட்டிலறி ஒன்றுமே புலிகளால் அழிக்கப்பட்டதாக உறுதி செய்யப்பட்டது.

புலிகள் இவ்வாறு பளைப் பகுதியில் ஊடறுப்பை நிகழ்த்தியதைத் தொடர்ந்து படைத் தரப்பு தனது ஏ 09 ஊடாக ஆனையிறவுடனான தரை வழங்கற் தொடர்பை இழந்தது. ஏ 09 பிரதான பாதையை ஊடறுத்த புலிகள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகள் வடமுனையிலும், தென்முனையிலும் தாக்குதல்களை மேற்கொண்டு நமது நிலைகளை இரு பக்கங்களிலும் நீட்ட முயன்றனர்.

யாழ்ப்பாணப் படைத் தரப்பு உயர் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் "புலிகள் ஏ 09 பிரதான கண்டி - யாழ் வழங்கல் பாதையில் பளையருகே பாதுகாப்பு நிலைகள் சிலவற்றைத் தாக்கி அவற்றைக் கைப்பற்றி நிலை கொண்டுள்ளனர் என்ற செய்தி உண்மையானதே. ஆனால், ஆனையிறவிலும், இயக்கச்சியிலும் பளையிலும் உள்ள படையினர்களைப் பிரதான வழங்கலை இத்தாக்குதல் ஒருபோதும் தடை செய்யப் போவதில்லை. ஏனெனில், நாம் இதற்கான மாற்றுப் பாதையொன்றை ஏற்கெனவே திறந்து தற்காலிக பாவனையில் வைத்திருந்தோம். 70 - 80 புலிகள் பளைப் பகுதியில் நிலை கொண்டுள்ளனர். அவர்களை முற்றாக அப்பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் கடந்த திங்கட்கிழமை மாலையில் இவற்றை நாம் மீளவும் இதைப்பற்றி விடுவோம்" என்று உறுதிபடக் கூறினார். ஆனாலும்

## குடாநாடு கைமாறுமா?

யாழ்பாணத்திலிருந்து கிடைக்கும் தகவல் இவற்றிற்கு முற்றிலும் மாறான ஒரு நிலைமையையே படம் பிடித்துக் காட்டுகிறது. அதாவது பெரும் எண்ணிக்கையிலான புலிகள் அப்பகுதிகளில் நிலை கொண்டிருப்பதாகவும், கனரக ஆயுதங்கள் சகிதம் அவர்கள் இராணுவத்தினர் விட்டுச் சென்ற பாதுகாப்பு அரண்களுக்குள் இருந்து சண்டையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரிற்கு மாற்று வழங்கல் பாதையொன்று இருப்பது மறுக்க முடியாத உண்மைதான். ஆனால், இம்மாற்றுக் கிறவல் பாதை படையினரின் கனரக வாகனங்களை உபயோகப்படுத்துவதற்கே உகந்ததா என்பது கேள்விக்குறியே. எப்படியிருப்பினும் அது கண்டி - யாழ் வீதிக்கு ஒரு போதும் பிரதியீடாக இருக்கப்போவதில்லை என்பது மட்டுமே உண்மை. களமத்திற்கு மத்தியில் ஏ 09 பாதையில் ஆரைப்பிள்ளை ஏற்றத்திற்கும் எழுதுமட்டு-



வாளிற்கும் இடையே அமைந்திருந்த ஆனைவிழுந்தான் பாலத்தையும் புலிகள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளதாக அறியப்படுகிறது. இது புலிகள் கட்டுப்பாட்டில் மேலும் சில கிராமங்கள் அடங்கியிருப்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

இதற்கிடையில் 27.03.2000 திங்கட்கிழமை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிறிலால் வீரசூரியவின் நேரடி வழிநடத்தலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட "வெலிசக்கர" இராணுவ நடவடிக்கை பாரிய இழப்புக்களுக்கு மத்தியிலும் இதுவரை எதிர்பார்த்திருந்த இலக்கை அடையவில்லை என்றே தெரிகிறது. தென்மராட்சி முகாமலை பகுதிகளில் நிலைகொண்ட புலிகளை விரட்ட பாரிய தென்னாபிரிக்க மற்றும் சீனத் தயாரிப்பு இராணுவ டாங்கிகள் ஆர்.பி.ஜி. மற்றும் தாக்குதல் படைகள் சகிதம் முன்னேறிய படையினர் மீது புலிகள் நேரடியாக வழிமறித்து கடும் தாக்குதலை நடத்தினார். புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு யுத்த டாங்கிகள் அந்த இடத்திலேயே சின்னாபின்னமாக்கப்பட்டது. மற்றுமொரு சேதமடைந்த டாங்கி புலிகளின் கைகளில் சென்றுவிடாமல் இருக்க படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இராணுவ தரப்பு தகவலின்படி 75ற்கு மேற்பட்ட புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலில் 25ற்கு மேற்பட்டோர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. இதேவேளை இச்சண்டையில் நான்கு படை உயரதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும், இரண்டு அதிகாரிகள் உட்பட 37 இராணுவ வீரர்கள் கடுங்காயங்களுக்கு உள்ளாகியனர். இதேவேளை இப்பகுதியினுள் சிக்குண்ட பொதுமக்களில் 1000 பேர் தவிர்ந்த ஏனையயோரை வெளியேற இராணுவம் அனுமதிக்கவில்லை. இதற்காக ஐ.சி.ஆர்.சி. மற்றும் யாழ் கிறிஸ்தவ மதகுருமார் மேற்கொண்ட முயற்சிகள் இச்செய்தி எழுதப்படும் வரை பயனளிக்கவில்லை.

இவ்வாறான ஒரு பாரிய தாக்குதலுக்காக தம்மை தயார் செய்து கொண்டிருப்பதற்கான விபரங்களை இராணுவ புலனாய்வுத் துறையினர் ஏற்கெனவே இராணுவத்தினர் சகல தரப்பினரிற்கும் தெரியப்படுத்தியிருந்தனர். இதனால் இத்தாக்குதலுக்கு முகம்கொடுக்க இராணுவத்தினர் தயாராகவே வைக்கப்பட்டிருந்தனர். இதை தெரிந்து கொண்டும்கூட புலிகள் தாம் திட்டமிட்டபடி ஏற்கெனவே திட்டமிட்ட இடத்தில் கடல் மூலம் தரையிறங்கி அவர்களை பின்வாங்க வைத்திருப்பது புலிகள் தம்மிடத்தே பாரிய சுடு சக்தியையும், ஆளணிப் பலத்தையும் (fire power and man power) கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைப்பாட்டைத் துல்லியமாகக் காட்டுகிறது. பளையில் அவர்கள் கவனம் செலுத்தியதன் முதல் நோக்கம் படைத்தரப்பிலிருந்து தமக்கு அழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஆட்டிலறி நிலைகளை அழிப்பதேயாகும். அதேபோன்று வடமராட்சி கிழக்குவரை கடல்பகுதிகளில் தாக்குதல் நடாத்தியதற்கான 1991இல் ஜெனரல் கொப்பேகடுவேவின் தலைமையில் நடந்ததுபோன்ற ஒரு கடல்மார்க்கமான தரையிறக்க நடவடிக்கை சாத்தியப்பாட்டை இல்லாமல் செய்யவும், வட கடல் பகுதிகளில் தமது ஆதிக்கத்தை செலுத்தி குடாநாட்டில் ஊடுருவியிருக்கும் புலிகளுக்கு தடையற்ற வழங்கலை மேற்கொள்வதற்குமேயாகும் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். எப்படியிருப்பினும் தற்போதைய யுத்த நிலைமைகளைக் கருத்திற் கொள்ளும்போது அடுத்த சில வாரங்களிற்கு யுத்தம் வடபகுதியில் மேலும் மேலும் கொதிப்படையக்கூடிய சமிக்ஞைகளே காணப்படுகின்றன. இவ்வாறு புலிகள் தமது யுத்த ஆண்டை கருப்பொருள் வெளிப்பட கொண்டாடி வருவது ஆனையிறவின் பாதுகாப்பு மட்டுமல்ல யாழ் குடாநாட்டின் முழுப் பாதுகாப்புமே கைமாறுமா என்ற கேள்வியை மக்கள் மனங்களில் எழுப்பியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

– வசிட்டன்

நன்றி - நூலகத்திட்டம்



# அகதி முஸ்லிம்களின் இன்றைய நிலை: நான்கு அம்சங்கள்

கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லா (புத்தளம் அகதி ஆய்வுக்குழு சார்பாக)

வடமாகாண முஸ்லிம்கள் கடந்த பத்து வருடங்களாக தமது சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றார்கள். அகதிகளாக இம்மக்கள் படும் துன்பங்கள் ஏராளம். முஸ்லிம் அகதிகள் செறிந்து வாழும் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளின் இன்றைய நிலை பற்றி கடந்த ஒரு வருட காலமாக செய்யப்பட்ட ஆழமான ஆய்வுகள் மேற்குறித்த உண்மையை மிகத் தெட்டத் தெளிவாக காட்டுகின்றது. இவ்வாய்வின் மூலமாக அகதி முஸ்லிம்களின் இன்றைய நிலையானது நான்கு அடிப்படைப் பிரச்சினைகளுக்குள் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வடிப்படை அம்சங்கள் புத்தளம் அகதிகள் மத்தியில் அறியப்பட்ட, உணரப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகளாகும். இனப்பிரச்சினையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடமாகாண முஸ்லிம்களுக்கும் நீதி கிடைக்க கூடியதான சமாதானம் ஒன்றுக்காக அகதி முஸ்லிம்களின் இன்றைய நிலை பற்றிய நான்கு அம்சங்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

### நான்கு அம்சங்கள்

1. வடமாகாண முஸ்லிம்கள் இன்றுவரை அகதிகளே.
2. பத்து வருடகால புனர்வாழ்வு நடவடிக்கைகள் இம்மக்களை அகதி நிலையிலிருந்து விடுவிக்க வில்லை.
3. அகதி முஸ்லிம்கள் இன்று உணவு, குடியிருப்பு, தொழில், கல்வி, மருத்துவ ரீதியாக பற்றாக் குறைகளுடனும், பாரிய பிரச்சினைகளுடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இப்பிரச்சினைகளைக் குறைக்க உடனடி நிவாரண நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டியுள்ளன.
4. வடமாகாண முஸ்லிம்களின் அகதிப் பிரச்சினை தேசிய மட்டத்தில் கலந்துரையாடி நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டியதொன்றாகும்.



### அகதி முஸ்லிம்களின் இன்றைய நிலை: விளக்கமும் வேண்டுகோளும்

இலங்கையின் மொத்த உள்நாட்டு அகதிகளில் எட்டிலொரு பகுதியினர் முஸ்லிம்கள் ஆவர். முஸ்லிம் அகதிகளில் 95 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் வடமாகாண முஸ்லிம்கள் ஆவர். வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினர் தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து பலவந்தமாக ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டார்கள். இப்பலவந்த வெளியேற்றத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் இப்பிரதேச பெரும்பான்மை மக்களைச் சேர்ந்த ஓர் ஆயுதக் குழுவினராவர். இப்பலவந்த வெளியேற்றம் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3ஆம் வாரம் நடைபெற்றது. கடந்த பத்து வருடங்களாக வடமாகாண முஸ்லிம்கள் அகதிகளாக தென் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள். இன்று ஏறக்குறைய 65000 முஸ்லிம் அகதிகள் புத்தளம் மாவட்டத்தின் வடமேல் கரையோரப் பகுதியில் வாழ்கின்றார்கள். முஸ்லிம் அகதிகளுக்கு நிரந்தரத் தீர்வொன்று காணும் ஆக்கபூர்வமான முயற்சி இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. பத்து வருட கால புனர்வாழ்வு நடவடிக்கைகள் இம்மக்களை அகதி நிலையிலிருந்து விடுவிக்கவில்லை. ஆய்வுகள் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவ்வாறான ஆய்வொன்றில் (புத்தளம் அகதி ஆய்வு) அகதி முஸ்லிம்களின் இன்றைய நிலைபற்றி அடையாளப்படுத்தப்பட்ட நான்கு அம்சங்கள் பின்வருமாறு:

1. மோசமான வாழ்விட வசதிகள், பொருளாதார ரீதியாக உணவு நிவாரணத்தில் தங்கிவாழும் தன்மை, பாதுகாப்பற்ற உணர்வு என்பன வடமாகாண முஸ்லிம்களின் தொடரும் அகதி நிலையை எடுத்துக்காட்டுகின்றன.
2. அகதிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக கடந்த பத்து ஆண்டுகளில் அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட நிவாரண, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற முயற்சிகள் இம்மக்களின் அகதி நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.
3. அகதி மக்கள் இன்று பாரிய வாழ்விட, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
4. முஸ்லிம் அகதிகளின் பிரச்சினை தேசிய ரீதியில் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டியதொன்றாகும். இனப்பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தைகளில் இம்மக்களின் அகதி நிலை பற்றிய பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு நிரந்தரத் தீர்வுகள் காணப்பட வேண்டும்.

### தொடரும் அகதி வாழ்க்கை

இன்று புத்தளத்தில் 80 வீதத்திற்கும் அதிகமான அகதிகள் ஓலைக்குடிசைகளில் வாழ்கின்றார்கள். இவ்வோலைக் குடிசை வாழ்க்கை அகதிகள் வாழும் முகாம்களிலும், (Refugee Camp) மீள்அமைவு முகாம்களிலும் (Relocated Camp), 'மீள்குடியேற்ற குடியிருப்புகள்' என்று அழைக்கப்படுகின்ற சொந்தக் காணிகளிலும் காணப்படுகின்றது. ஏறக்குறைய 15 வீதமான அகதிகள் வசதி குறைந்த, பூரணப்படுத்தப்படாத சிறு கல்வீடுகளில் வாழ்கின்றார்கள். மேலே குறிப்பிட்ட குடிசைகள், கல்வீடுகளில் 75 வீதத்திற்கு அதிகமானவை வெள்ளப் பெருக்கெடுக்கக் கூடிய நிலம், உப்புத் தரவை, மணல் மேடுகள், சீமெந்து தொழில்சாலையின் துகள்கள் தொடர்ச்சியாக படியும் நிலம் போன்ற வாழப் பொருத்தமற்ற இடங்களில் அமைந்துள்ளன.

90 சதவீதத்திற்கும் அதிகமான அகதிகள் அரசாலும், உலக உணவுத் திட்டத்தினாலும் வழங்கப்படுகின்ற உணவு நிவாரணத்தை நம்பி வாழ்கின்றார்கள். அகதிகள் சுயமாக வாழக்கூடிய பொருளாதார அடிப்படைகள் புத்தளத்தில் இல்லை. மருத்துவ, பிரயாண தேவைகளுக்கு பண வருமானம் அகதிகளுக்கு அத்தியாவசியமாக இருக்கின்றது. அதனால், கிடைக்கும் கூலி வேலைகளில் ஈடுபட அகதிகள் தூண்டப்படுகின்றனர். அவ்வாறான கூலி வேலைகள் கல்பிட்டி குடா நாட்டின் வெங்காயத் தோட்டங்களில் பகுதி நேர அடிப்படையில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. சொற்ப தொகையான அகதிப் பெண்களும், சிறுமிகளும் இக்கூலிவேலையில் ஈடுபடுகின்றனர். இக்கூலித் தொழிலும் கூட கிடைப்புத்தன்மை, போட்டி, பருவகாலம், குறைவான கூலி என்பவற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றது. புத்தளத்தில் அகதிகள் வாழும் ஏனைய பிரதேசங்களின் தொழில் கிடைப்புத் தன்மை கல்பிட்டியை விட மோசமாக உள்ளது.

சமூக, உளவியல் ரீதியாக இன்று புத்தளத்தில் வாழ்கின்ற மிகப் பெரும்பான்மையான அகதிகள் தாம் பலவீனமானவர்கள், பாதுகாப்பற்றவர்கள் என்ற உணர்வுகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். சுருக்கமாக, தொடரும் அகதி வாழ்க்கை வடமாகாண முஸ்லிம்களை நிதமும் பாதிப்பதோடு நிச்சயமற்ற எதிர்காலத்தையும் தோற்றுவித்துள்ளது.

### அகதி நிவாரண நடவடிக்கைகளின் தாக்கம்

1990-95ஆம் ஆண்டு காலத்தில் அகதிகள் முகாம்களில் வைத்து பராமரிக்கப்பட்டார்கள். இக்காலகட்டத்தில் உணவு நிவாரணமும், தற்காலிக அடிப்படை வசதிகளும் இம்மக்களுக்கு வழங்கப்பட்டன. 1995ஆம் ஆண்டில் மீள்குடியேற்றத் திட்டம் ஒன்று புத்தளத்தில் அகதிகளை நிரந்தரமாகக் குடியேற்றுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. நிரந்தர வீடு கட்டுவதற்காக 35,000 ரூபாய் நிவாரணம் வழங்குவது இம்மீள்குடியேற்றத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

புத்தளம் வாழ் அகதிகளில் பெரும் பாலானவர்கள் மீள்குடியேற்றக் கொடுப்பனவுகளைப்பெற விருப்பம் தெரிவித்திருப்பதாக புள்ளிவிபரம் தெரிவித்தாலும், அவர்களில் 80 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஐந்து வருடங்களாக 10,000 ரூபாய் பெறுமதியான முதற் கட்ட மீள்குடியேற்றக் கொடுப்பனவுக்கு மேல் பெற ஆர்வம் காட்டவில்லை. இதற்கு முக்கிய காரணம் தமது நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் உலர் உணவு நிவாரணத்தை இழக்க நேரிடும் என்ற அச்சமேயாகும். துரதிஸ்டவசமாக, வடமாகாண முஸ்லிம்கள் இன்று புத்தளத்தில் 'பத்து பேர்ச் சமூகமாகி', மறக்கப்பட்ட அகதிகளாக மாறிக்கொண்டு செல்கின்றனர்.

### உடனடித் தேவை

குடியிருக்கும் பிரதேசங்களில் அகதிகள் வாழ்விட வசதி ரீதியாக சில பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவற்றுள் வெள்ளம், சதுப்பு நிலத் தன்மை, நுளம்பு, குடிநீர் இன்மை, மணற்றிடல், சீமெந்துத்தூசு, பெரும்பான்மை இன அச்சுறுத்தல் ஆகியவை குறிப்பிடத்தக்க பிரச்சினைகளாகும். அகதிகள் பணவசதி இன்மையினால் வாழ்க்கைக்கு பொருத்தமற்ற மேற்குறிப்பிட்ட காணிகளைக் குடியிருப்பிற்கு வாங்க வேண்டியிருந்தது.



இது போலவே அகதிகளின் வாழ்நிலை முகாம்களிலும் மீளஅமைவு முகாம்களிலும் நாளாந்தம் மோசமடைந்து சென்று கொண்டிருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் அரசாங்கம் மீள்குடியேற்றத்தில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக முகாம்களுக்கு வழங்கும் வசதிகளைப் புறக்கணித்தமையாகும். புத்தளத்தில் அகதிகளின் கல்வி, மருத்துவ தேவைகளும் கூட பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றன. அதனால், அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் புத்தளத்தில் வாழ்கின்ற அகதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமானதாகும்.

### நிரந்தரத் தீர்வு

முஸ்லிம் அகதிகள் மாத்திரம் சொந்த இடம் செல்ல முடியாதிருப்பது ஒரு தேசியப் பிரச்சினையாகும். வளம் குறைந்த, சமூக, இனப்போட்டி நிலவும் புத்தளம் மாவட்டத்தின் வடமேற்கு கரையோரப் பிரதேசத்தில் 65000 அகதி முஸ்லிம்களையும் நிரந்தரமாகக் குடியேற்ற முயற்சிப்பதை பொருத்தமான தீர்வாகக் கருத முடியாது. அதனால் தேசிய மட்டத்திலான கலந்துரையாடல்கள் மூலமாக முஸ்லிம் அகதிகளின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முற்படுவது மிகப் பொருத்தமானதாகும். இக்கலந்துரையாடல்களில் அகதி மக்கள், விடுதலைப் புலிகள், அரசாங்கம், சர்வதேச சமூகம் பங்குபற்றி அரசியல் ரீதியாகவும் எண்ணிக்கை ரீதியாகவும் பலவீனமான முஸ்லிம் அகதிகளுக்கு பொருத்தமான, நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது அவசியமானதாகும்.

### முடிவுரை

'நான்கு அம்சங்கள்' முஸ்லிம் அகதிகளின் இன்றைய யதார்த்தமாகும். உணவு, குடியிருப்பு, ஏனைய அடிப்படைத் தேவைகளில் அகதிகள் எதிர்நோக்குகின்ற அவசரப்பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும். அதே நேரத்தில் ஒவ்வொரு முஸ்லிம் அகதியும் நிரந்தரத் தீர்வொன்றுக்காக கடந்த பத்து வருடங்களாகக் காத்திருக்கின்றனர். இத்தீர்வு தேசிய மட்ட கலந்துரையாடல்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டியவையாகும். இவற்றைச் செய்வதன் மூலமாக இனப் பிரச்சினையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடமாகாண முஸ்லிம்களுக்கும் நீதி கிடைக்கக் கூடியதான சமாதனத்திற்கு வழிவகுக்க எல்லா சமாதான விரும்பிகளும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமானதாகும்.

### இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட அகதி முஸ்லிம்கள் நீதியான தீர்வைப்பெற

1. இம்மக்களின் பிரச்சினைகள் அறிவு பூர்வமாக அணுகப்பட வேண்டும்.
2. கூட்டு முயற்சி மூலமாக உரிமைகள் வெல்லப்படவேண்டும்.
3. எண்ணிக்கையில் குறைவான, அரசியல் ரீதியில் பலவீனமான, பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அகதி முஸ்லிம்கள் தேசிய, சர்வதேச சமூகத்திடம் தமது நியாயமான அபிலாசைகளை ஒற்றுமையாக முன்வைத்து நீதிபெறவேண்டும்.
4. அகதி முஸ்லிம்களின் விடிவிற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டியது இலங்கை மக்கள் அனைவரதும், சர்வதேச சமூகத்தினதும் தார்மீகக் கடமையாகும்.

### வேண்டுகோள்:

முஸ்லிம் அகதிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகளை வென்றெடுக்க அகதிகள் வாழ்கின்ற பிரதேச உள்ளூர் மக்களும், இலங்கை வாழ் முஸ்லிம் தமிழ் சிங்கள மக்களும், வெளிநாடுகளில் வாழும் இலங்கை மக்களும், சர்வதேச சமூகமும் உதவ வேண்டும். இவ்வகதி மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்க வேண்டியது மேற்குறித்த சமூகங்களின் தார்மீக கடமையாகும். அதேவேளை, வடமாகாண முஸ்லிம் அகதிகள் தங்கள் நிலை பற்றிய தெளிவுடன் தமது உரிமைகளையும், சமூகநீதியையும் வென்றெடுக்க ஒற்றுமையாக முயற்சிக்க வேண்டியது அவசியமாகும்.

இவ்வேண்டுகோளை, அகதி முஸ்லிம்களின் மறக்கடிக்கப்பட்டுச் செல்லும் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அகதிகளின் இன்றைய நிலையை அறிவு பூர்வமாக அணுகி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் புத்தளம் அகதி ஆய்வுக் குழுவினர் வேண்டிக் கொள்கின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



இரண்டாயிரமாம் ஆண்டில் இனப்பிரச்சினை:

# மூன்றாம் தரப்பும் சந்தேகங்களும்

1999ஆம் ஆண்டு பூராவும் அரசியல் தீர்வொன்றின் தேவை பற்றிய நம்நாட்டு அரசியல் கலந்துரையாடல் கூடிக் குறைந்த மட்டத்திலேயே நிலவிற்று. அதேபோலவே, அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான கலந்துரையாடல் வழிமுறைகளிற்கு வரும் தேவையும் எப்பொழுதும் எழுந்தபடியே இருந்தது. ஆனாலும், அரசியல் தீர்வொன்று பற்றிய தீர்மானகரமான கருத்துக்கள் எதுவும் இன்றியே அந்த வருடமும் கழிந்து சென்றது. சமாதானத்தை உண்டுபண்ணுவதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் தருணங்கள் வருட முடிவடையும் வேளையின்போது, மிகுந்த தொலைவிலேயே இருந்தன. இந்த விடயம் தொடர்பாக அரசியல் கட்சிகள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் மற்றும் வருட முடிவில் அந்த நிலைப்பாடுகளில் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகள் சுருக்கமான குறிப்பின் ஒரு பகுதி சென்ற அதழில்வெளியாகி இருந்தது. அதன் மறுபகுதி கீழே:

### பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம்

பொதுவாகவே 1999ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித்- தேர்தல் ஆகிய இரண்டின் மீதே ஆளும் கட்சியின் கவனம் இருந்தது. 1999 ஜனவரி 25ஆம் திகதி நடைபெற்ற வட - மேல் மாகாண (வயம்ப) சபைத் தேர்தல் தொடக்கம், 1999 டிசெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரையான பொ. ஐ. மு. அரசியல் பிரச்சார இயக்கத்தின் அதிக கவனம், யுத்தம் மூலமான வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலைக் காட்டுவதனூடாகத் தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்வதிலேயே இருந்தது.

யுத்தத்தை ஒரு வருடத்தினுள் முடிவுக்குக் கொண்டு வருவதாக வழங்கப்பட்டிருந்த உறுதி மொழியானது, திரும்பத் திரும்ப அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது. பிரபாகரனையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒரு புறமாகவும், தமிழ் மக்களை மறுபுறமாகவும் பிரித்து வேறாக்கி வைக்கும் அரசியல் பிரயத்தனமானது, பொ. ஐ. முவின் அரசியல் தீர்வுத் திட்டத்தின் இலக்காகச் சிங்கள மக்களுக்குக் காண்பிக்கப்பட்டது. பிரபாகரனைத் தனிப்பட்ட முறையிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமைப்பு ரீதியிலும் தீர்மானகரமான தோல்வி ஒன்றை நோக்கித் தள்ளாது, அரசியல் தீர்வொன்றை வெற்றி பெறச் செய்ய முடியாது என்பது அந்த உபாயத்தின் அடிப்படையாக இருந்தது. ஏனவே, பொ. ஐ. முவின் தர்க்கத்திற்கு இணங்க யுத்த மூலமான வெற்றி ஒன்றினால் அன்றி, அரசியல் தீர்வை முன்வைப்பதினால் பயன் இல்லை என்பதாகும்.

அதற்குச் சமாதானத்திற்காக யுத்தம் அவசியமானதாகும். 1999ஆம் ஆண்டு பூராவும் அரசியல் தீர்வுத் திட்டம் அடங்கிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததற்கான பிரதான காரணமானது, மேற்கூறப்பட்ட அரசியல் நம்பிக்கையே ஆகும். அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பொ. ஐ. முயானது, சமாதானத்திற்கான நம்பகரமான செயல் நடவடிக்கை ஒன்றாகக் கருதுவது என்பதைவிடத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தனிமைப்படுத்தும், மற்றும் தோல்வியடையச் செய்யும் ஒரு உபாயமாகவே கருதியது. பொதுத் தேர்தல் ஒன்றின் பின்பு பாராளுமன்றத்தினூடாகவோ அல்லது புறம்பாகவோ நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தோடு அன்றி, அரசியல் தீர்வுத் திட்டம் அடங்கிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைச் சமர்ப்பிப்பதில் பலன் ஏதும் இல்லை என அரசியலமைப்புத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் வருடத்தின் நடுப் பகுதியில் கூறியிருந்தார். பொ. ஐ. முயின் கூட்டுக் கட்சியான லங்கா சம சமாஜக் கட்சியின் மத்திய குழு 1999 ஒகஸ்ற் மாதத்துக்கு முன்பதாக, மேற்கூறப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் கோரியிருந்தது. அவ்வாறு செய்யாவிடின் தாம் ஆளும் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்யப்போவதாக ல. ச. ச. க. விடுத்த எச்சரிக்கை பின்பு, மௌனம் காத்தல் ஊடாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அரசியல் தீர்வுத் திட்டம் தாமதமாவதற்குத் தீர்வாக, இந்த நாட்டுத் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட சம வாய்ப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான அக்கறையையோ, அன்றி ஆற்றலையோ பொ. ஐ. மு. அரசாங்கம் காண்பிக்கவில்லை. 1999 செப்ரெம்பர். மாதத்தில் சமர்ப்பிக்கப்பட எனத் தயாரிக்கப்பட்ட அந்தச் சட்டம் அமைச்சரவையின் பிரபலமானவர்கள் சிலரின் எதிர்ப்புக்கு உள்ளாகியது. தீவிரவாத சக்திகளின் எதிர்ப்பின் மத்தியில் அரசாங்கத்தினால் அந்தச் சட்ட மூலம் மீளப் பெறப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முகமாக வெளியார் மத்தியஸ்தர்களான இருவரது உதவியைப் பெற்றுக் கொண்டதாக 1999 டிசெம்பர் இறுதிப் பகுதியில் பீ. பீ. சீ. தொலைக் காட்சிச் சேவைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க கூறியிருந்தார். அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இலங்கை அரசாங்கம் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்த வெளியார் மத்தியஸ்தர்கள் ஊடாக மூன்று முறை ஆலோசனை தெரிவித்திருந்தாலும், அதனைத் தாம் விரும்பவில்லையெனவும், தமிழீழ



விடுதலைப் புலிகள் இயக்கம் கூறியிருந்தது. ஜனாதிபதியினால் குறிப்பிடப்பட்ட வெளியார் மத்தியஸ்தர்கள், பொது நலவாய அரசுகளின் செயலாளரும், நோர்வே அரசாங்கமுமாகும். ஆனாலும், 1999 செப்ரெம்பர் 28ம் திகதி நியூ யோர்க்கில் பகிரங்க அறிக்கையொன்றை வெளியிட்ட இலங்கை வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இலங்கையின் யுத்த மோதல், வெறுமனே உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றே என்பதால், அதில் வெளியார் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தர்கள் தேவையில்லை எனக் கூறியிருந்தார். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்த பட்சமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தனிநாடு கோருவதைக் கைவிடுவதும், குறிப்பிட்ட காலப் பகுதியினுள் உடன்படுவது என்பன பொ. ஐ. மு. அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாக இருந்தது.

1999ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருந்ததால், இனப் பிரச்சினை தொடர்பாக இரு தரப்பு உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளப் பொ. ஐ. மு. - ஐ. தே. க. ஆகியவற்றுக்கிடையில் நிரூபனமான பேச்சுவார்த்தை ஒன்று ஏற்படவில்லை. அதேபோலவே வருடம் பூராவும் மாகாண சபைத் தேர்தல் களங்களில் காணக் கூடியதாக இருந்த அரசியல் வன்முறைகளால் அவ்வாறான இரு தரப்பு நுழைவு ஒன்றிற்கான வாய்ப்புக்கள் மேலும் அள்ளிச் செல்லப்பட்டது.

பொ. ஐ. மு. - ஐ. தே. க. ஆகியனவற்றிற்கு இடையில் இரு தரப்புப் பிரவேசம் தொடர்பாக 1999 ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகிய இருவருக்கும் இடையில் கடிதப் பரிமாற்றம் ஒன்று ஏற்பட்டது. இரு தரப்பு நுழைவு ஒன்று, அதாவது, 1997 லியம் பொக்ஸ் உடன்பாட்டை முன் கொண்டு செல்வதாயின் ஐ. தே. க.,

01. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கும் உறுதியான யோசனைகள்.
02. அரசாங்கத்தினால் இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் தொடர்பாக ஐ. தே. கவின் உறுதியான கருத்துக்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென அவர் (ஜனாதிபதி) யோசனை தெரிவித்தார்.

இதற்குப் புறம்பாக, மூன்றாவது விஷயமாக, இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நாளொன்றைத் ஒதுக்கித் தருமாறும், ஐ. தே. கவின் காலத்தைக் கடத்துவது ஏமாற்று வேலை என்பதால், இந்தப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றை வழங்கும் முகமாகத் தாம் மேலும் காத்துக் கொண்டிருக்க மாட்டேன் என்றும் அவர் வெளிப்படுத்தி இருந்தார்.

இதற்குப் பதில் கடிதத்தில் ஐ. தே. கத் தலைவர் ரணில் விக்ரமசிங்க, தனது மறு யோசனைகள் இப்போது வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனால் ஒன்றில் நடைமுறைச் சாத்தியமற்ற அல்லது நீண்ட கால ரீதியில் மோதலொன்றுக்கும், துரதிர்ஷ்டமயத்துக்கும் வழி சமைக்கும் தீர்வுத் திட்டமொன்றுக்கு ஆதரவு அளிக்கத் தாம் தயாரில்லை எனக் கூறியிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் எனின், அதனைப் பகிரங்கப்படுத்துமாறு கோரிக்கை விடுத்த அவர், தீர்வொன்றைக் காணும் நோக்கத்துடன் செய்யப்படும் அவ்வாறான பேச்சுவார்த்தைகளுக்கு உடனடியாகவும், நிரூபனமாகவும் பிரதிபலிப்பைக் காட்டுவதற்கு ஐ. தே. க. தயார் எனக் கூறியிருந்தார். இந்தக் கடிதப் பரிமாற்றம் இதற்கு ஒரு மாதத்தின் பின்பு டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் துருப்புச் சீட்டாக்கப்பட்டதற்கு அப்பால் செல்லவில்லை.

அதனூடாக, 1999ஆம் வருடம் பூராவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பவர்களில் மறைந்து காணப்பட்ட ஜனரஞ்சகமான சொல்லான 'இரு தரப்பு உடன்பாட்டை' ஏற்படுத்திக் கொள்ளக் கூட, அதற்கான அடிப்படையை நிறைவேற்றக் கூட முடிந்ததா என்பது கேள்விக்குறியே. ஒரு புறம், 1997இல் எற்படுத்தப்பட்ட லியம் பொக்ஸ் உடன்பாடும், மறுபுறம், அரசியல் களத்தில் பிரதான பாத்திரம் வகிக்கும் பொ. ஐ. முவின் அரசியல் தீர்வுத் திட்டமும், அந்த உட்புகுதல்களைத் தொடர்ந்தும் பிரதான அரசியல் கட்சி- களினாலேயே கவனத்திலெடுக்காது விடப்பட்டு வெறுமனே சொற் பரிமாற்றமொன்றுக்காக மட்டும் பயன்படுத்தப்படும் சொற்களாக உட்பட்டு இருந்ததைக் கடந்த வருடம் பூராவும் நன்கு காணக் கிடைத்தது.

இந்த நிலைமைகளின் கீழ், பொ. ஐ. மு. அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தில் கீழ் குறிப்பிட்ட உறுப்புரைகள் தொடர்பாக, தெரிவுக் குழுவிலோ, அதன் பின்பு பொ. ஐ. மு. அரசு, ஐ. தே. க. ஆகிய இரண்டுக்கும் இடையில் உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியாது போய் இருப்பதாக அரசியலமைப்பு சீர்திருத்தத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

01. அரசின் சுயரூபமும், ஒருமைப்பாட்டு அரசியலமைப்பும்.
02. அரச காணிகளை வலயங்களுக்கு அளிப்பது.
03. பொலிஸ் அதிகாரங்கள்.
04 பல்வேறு வலயங்களினுள் வெளிநாட்டு முதலீடு.
05. வெளிநாட்டு வங்கி மற்றும் வேறு நிறுவனங்கள் ஊடாகக் கடன் பெற்றுக் கொள்வது.
06. தேசிய நீதிச் சேவை ஆணைக் குழுவின் அதிகாரங்கள், பணிகள் ஆகினவற்றுக்- கிடையில் சமநிலைத் தன்மை ஒன்றை எற்படுத்திக் கொள்வது.
7. அதிகாரத்தைப் பகிர்ந்து அளிக்கும் அலகு, அதன் வரைவிலக்கணம்.

பொ. ஐ. மு. - ஐ. தே. க. ஆகியனவற்றுக்கு இடையில் இரு தரப்பு உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் இறுதித் தினமாக நாள் குறிக்கப்பட்ட செப்ரெம்பர் 30ஆம் திகதி கடந்து செல்வதைக் காரணமாகக் கொண்டு, இந்த முயற்சியின் மத்தியஸ்தராக வர்த்தக சமூகத்தின் சமாதானப் பிரயத்தனத்தின் முன்னோடியான லலித் கொத்தலாவல மேற்கூறிய உடன்பாடுகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தை இழந்தது போலவே, இறுதித் தீர்வொன்றை நோக்கிக் கொண்டு செல்லும் சந்தர்ப்பமும் இழக்கப்பட்டது.

அரசியல் தீர்வுத்திட்டம் அடங்கிய புதிய அரசிலமைப்புத் திருத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான இரு தரப்புப் பிரவேசம் மற்றும் மூன்றாம் தரப்பு உபசரணையாளர்களின் தலைமை ஆகிய விஷயங்கள் தொடர்பாக உறுதிப்பாடற்ற ஒழுங்குமுறை ஒன்றில் இருந்தாலும், பொ. ஐ. மு. யுத்த வெற்றியினதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிக்கும் தேவைப்பாடு, ஆற்றல் தொடர்பான அரசியல் பிரச்சாரங்கள் ஆகிய பக்கங்களில் மிகவும் உயர்ந்த செயல் திறமையைக் காட்டியது.

விஷேடமாக, வருட இறுதியில் அமைந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொ. ஐ. மு. யுத்தவாத, சிங்களத் தேசியவாத அரசியல் நிலைப்பாடொன்றை நோக்கிப் பயணம் செய்தது. சிங்கள - பௌத்த - தேசியவாத சக்திகளின் உத்தேச ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான சுசில் முனசிங்க தொடக்கம், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஊடாகச் சிங்கள - பௌத்த - தீவிரவாதத்தின் சமகால முன்னோடிக் கோட்பாட்டாசிரியரான பேராசிரியர் நளின் த சில்வா வரையான நபர்கள், அந்தக் கூட்டிற்கு உரியவர்களாயினர். ஜனாதிபதி- யாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டமைக்குச் சந்திரிகா குமாரணதுங்கவுக்குத் தீர்மானகரமான ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதில் மேற்கூறிய சக்திகள் வெற்றி பெற்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை, யுத்தத்தில் தோல்வி ஒன்றை நோக்கித் தள்ளி விடக் கூடிய ஒரே தேசியத் தலைவராக இந்த அணியினர் சந்திரிகா குமாரணதுங்கவை வரைவிலக்கணப்படுத்தினர். இந்த வரைவிலக்கணப் படுத்தலுக்கு ஏற்ற விதத்- தில், தமது ஜனாதிபதித் தேர்தல் (பிரச்சார) இயக்- கத்தைச் சிங்களப் போர்க் குணாம்சம் மீது வைத்தி- ருந்தபடி, பிரபாகரன் - தமிழீழ விடுதலைப் புலி- கள் இயக்கம் ஆகிய- வற்றுக்கு விரோதமான தானைத் தலைவரொ- ருவராகத் தோற்ற- மளிப்பதற்காக அவர் செயற்பட்டார். தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர் இவ்வாறு கூறியிருந்தார், 'புதிய நூற்றாண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதற்குத் தயாராகும் எமக்கு, இன்று உள்ள பிரதான சவாலானது நாட்டைப் பிரித்துத் துண்டாட எடுக்கப்படும் முயற்சியைத் தடுப்பது தான்.'

1999 டிசெம்பர் 18ஆம் திகதி, இறுதி ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சந்திரிகா குமாரணதுங்கவைக் கொலை செய்வதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மனிதக் குண்டுதாரி ஒருவரை ஈடுபடுத்தியது. அவரின் (ஜனாதிபதி) கண் ஒன்றைக் குருடாக்கி, மனித உயிர்கள் பலவற்றைப் பலியெடுத்த அந்தத் தாக்குதலின் பின்பு, யுத்த வெற்றியொன்றின் அவசியம் பற்றிப் பொ. ஐ. முவின் நிலைப்பாடானது மேலும் உக்கிரமடைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோல்வியடையச் செய்வதாகவும், அதற்கு(த. ஈ. வி. பு. இ.) ஆதரவு வழங்கும் வட பகுதி, தென் பகுதிகளைச் சேர்ந்த அனைவருக்கும் நிச்சயமாகத் தண்டனை வழங்கப்படும் எனவும், ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்ததன் பின்பு பகிரங்கமாகச் சபதம் செய்த அவர், இந்த நாட்டுத் தமிழ் மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தொடர்ந்தும் ஆதரவு அளிப்பதா? இல்லையா? என்பதை இப்போது தீர்மானிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும், போக்கும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

*தமிழில் : சி. செ. ராஜா.*

நன்றி - நூலகத்திட்டம்



# பொட்டு வைக்கும் இந்து தர்மம் பொட்டும் கட்டும்!

"எங்கள்கங்கா மையாவை (தாயை) வெறும் 'வாட்டர்' என்பதா? என்ன கொடுமை?"

வாட்டர் படத்தை முன் வைத்துத் தனது புனிதப் போரைத் துவக்கியுள்ளது காவிப்படை.

போய் இறங்கியவருக்கெல்லாம் 'கதி மோட்சம்' தந்த கங்கைத் தாயை வெறும் தண்ணீர் என்றால் தகுமா?

தண்ணீர் வெறும் $H_2O$ கலவை. கங்கையின் மூலக் கூறே வேறு. பார்ப்பனியம் ஒரு பங்கு, பஞ்சமா பாதகங்கள் இரண்டு பங்கு - $ப_2பா$.

மூச்சைப் பிடித்துக் கொண்டு சிரார்த்தப் பிரமாணம் செய்யும் காசிப் பார்ப்பனர்களைக் கேட்டுப் பாருங்கள்.

முழுக்குப் போட வருபவர்களை மொத்தமாகச் 'சொர்க்கத்திற்கு' அனுப்ப மூச்சடக்கி கங்கையில் நீருக்குக் கீழே காத்திருக்கும் அந்தத் தடி இராமர்களைக் கேட்டுப் பாருங்கள்.[1]

அது வெறும் தண்ணீரல்ல. தமக்கு மெய் வருத்தக் கூலி தரும் 'மையா' (மாதா) என்பார்கள்.

"துளசிதாசர் இராமாயணம் எழுதிய துளசிகாட் புண்ணிய ஸ்தலத்திலேயே அந்தண குல விதவைப் பெண் தலித் ஒருவனோடு தொடர்பு கொள்வது என்று வக்கிரமாகப் படம் எடுப்பதை நாங்கள் எப்படி அனுமதிக்க முடியும்?" - விசுவ இந்து பரிசத்தின் உக்கிரமான கேள்வி இது.

"புத்திர காமேஷ்டி யாகம்" என்று தனது பத்தினிகளைக் குதிரைகளோடு சேர்த்து வைத்த காலத்திலும் கூட பஞ்சம சாதியர் பக்கம் பார்த்து விடாத தூரத்தில் வைத்திருந்த 'இந்து நாகரிகத்தால்',

எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும் - மனிதர்களோடு மனிதர்கள் சேரும் 'வக்கிரத்தை'?

"கனடாவில் இருப்பவர்களுக்குக் காசியைப் பற்றியும், அதன் புனிதத்தைப் பற்றியும் என்ன தெரியும்?" - கேட்பது சங்பரிவார் மட்டுமல்ல. தனது குலக்கொழுந்துகளை மேற்படிப்புக்கு வெளிநாட்டுக்கு அனுப்ப விசா எடுக்கும் அவசரத்தில் இருக்கும் சில 'தேசபக்த' பரிவாரங்களும் தான்.

சபாஷ் சரியான வாதம். பாரதத்தில் பிறந்து இந்தியாவில் வளர்ந்து இந்தியாவிலேயே குடி-கொண்டவர்களைக் கேட்கலாம் காசியைப் பற்றி.

சுவாமிஜி சிவானந்த சரஸ்வதியின் [2] திருவாயால் கேட்போமா?

"காசி பஞ்சமா பாதகங்களின் பஜார்".

அடடா! இதற்கு அசலூரே பரவாயில்லைப் போலிருக்கிறதே. காசியைக் கண்டறிய கருவெட்டலுக்கு [3] வாருங்கள்.

இதோ கருவெட்டலின் அந்தப்



பாழடைந்த நிலவறைக்குள் லிங்கத்திடம் போய் விளக்கேற்றினால் பார்வதி சமேதராய் பரமசிவன் காட்சி தருவார் என்று நம்பிப் போய் மேலிருந்து பார்ப்பனர்களால் இறக்கி விடப்பட்ட இரும்புச் சக்கரத்தால் 'காசி முக்தி' அடைந்த 'பரிசுத்த ஆவிகளுக்கல்லவா' காசியைப் பற்றித் தெரியும்?

கங்கையை வெறும் வாட்டர் என்பதை ஏற்க மாட்டார்கள் அவர்கள்.

தண்ணீர் என்பது அதன் பாவனை,
தீர்த்தம் என்பது அதன் ஒப்பனை,
அது மரணத்தின் எச்சில்.

"தேசத்தையே 'பாரத மாதா' என்று பெண்ணாகப் பெருமைப் படுத்துகிற இந்துக்களின் மனதைப் புண்படுத்துகிற மாதிரிப் படமெடுப்பதா?"

சினம் கொள்பவர்களின் குரலுக்குச் செவிசாய்த்து நாமும் பாரத மாதாவை வலம் வந்து பார்த்தால்,

அவள் முதுகில்
பழங்காலத்தின் படர் தாமரைகள்.

அதோ ஒரு பத்து வயது பாரத மாதா:
பூக்களின் வாசத்தை நுகரவே
தெம்பில்லாத ஒருவன்
பொசுக்கென்று மூச்சைவிட
அவள் மயிரை மழித்திருக்கிறது
மனுதர்மம்.

மொட்டையடித்து மூளியாக்கிய இந்துக்
கலாசாரத்தின்
'மயிரார்ந்த' மாண்பினை
அசைக்க முடியாது யாரும்

'இது எமது ஆயிரம் காலத்து மயிர்
என்று மார் தட்டுகிறது இந்து தர்மம்.

கவலை வேண்டாம்
மறு மணத்தைத் தான்
மறுக்கிறது இந்து தர்மம்
மற்றபடி
புத்திர பாக்கியம் இல்லாது
கணவனை இழந்த பெண்
தன் கொழுந்தனோடு கூடி
பிள்ளை பெற
'இந்திரிய கலாசாரத்தை'
அனுமதிப்பதால்
இந்துத்துவக் கொழுந்தனார்கள்
கொதித்தெழ ஒன்றுமில்லை.

இந்தப் பாபத்தைப் போக்க
'விபச்சார தோஷம்' என்று பரிகாரச்
சூத்திரங்களையும்
சொல்லிக் கொடுத்துள்ளார்
பாரத மாதாவின் தவப்புதல்வர்
யாக்ஞவல்கியர்.

மேற்கத்திய கலாசாரம்
மேயும்கலாசாரம்:
இந்தியக் கலாசாரம்
'கற்புக் கலாசாரம்' என்று
வேதம் ஓதும் சாத்தான்களே
ஒழுக்கக் கேடுகளையே
ஒழுகும் விதியாகத் தொகுத்திருக்கும்
யாக்ஞவல்கியர் எந்த நாட்டுப் பிரஜை?

ஒரு வேளை
பாரதப் பண்பாட்டைச் சீர்குலைக்க
பாகிஸ்தான் அனுப்பிய
ஐ.எஸ்.ஐ. உளவாளியா?

"இந்த அமைப்பில் இரண்டு விபச்சாரங்கள் ஒரு திருணம் என்ற பெயரில் தீர்த்து வைக்கப்படுகிறது" என்று தனியுடமை, ஆணாதிக்க சமுதாய அமைப்பை அம்பலப்படுத்தினார் மார்க்சிய ஆசான் ஏங்கெல்ஸ்.

அந்தக் கண்ராவியெல்லாம் இந்து சமுதாயத்தில் கிடையாது. அதுவும் பாடல் பெற்ற தலமான காசியில் ஏது விபச்சாரம்? எங்கே விலைமாது? அபச்சாரம்! என்று அலறியவர்கள், "1930 - ல் காந்தியடிகளே காசிக்கு வந்து விதவை விலைமாதர்களை மீட்டுச் சென்றாரே". என்று எதிர்த்தரப்பு மடக்க "இங்கேயே (காசி) தால் மண்டி (சிவப்பு விளக்குப் பகுதி) இருக்கும் போது எதற்கு விதவைகள் விபச்சாரம் செய்ய வேண்டும்" என்று சனாதனக் கோட்டையின் பாதித்தாழ்ப்பாளைத்-திறந்து விட்டனர் பங்காளிகள். இந்து மதத்திலேயே மிதவாதிகள், தீவிரவாதிகள் குழாயடிச் சண்டையில் மிதமாக வெளிவரத் துவங்கியிருக்கிறது உண்மை.

டெல்லி சிவப்பு விளக்குப் பகுதி பெண்களின் நலன் காக்கும் 'பாரதிய படிதா உத்ஹர்சபா' நிலையத்திற்கு விஜயம் செய்து எழுந்தளிய பிரயாக் மடத்தின் ஜகத்குரு சங்கராச்சாரி விலைமாதர்களின் குழந்தைகளை ஆசீர்வதித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வாரணாசியில் இரண்டு, அலுவலகங்கள் திறந்து உதவப் போவதாக அருளாசி வழங்கி "எங்கப்பன் குதிருக்குள்ளே இல்ல" என்று தலைநகரில் இருந்தே இந்து வெறிக்கும்பலின் தலையில் குண்டைத்-தூக்கிப் போட்டுள்ளார்.[4]

புண்ணிய க்ஷேத்திரத்தின் முழுக்கதவும் திறந்துவிட்டபடியால் இனி மறைப்பதற்கு மனுவந்தாலும் முடியாது.

"ஆமாம் இப்ப என்னங்கறே?"

"ஆயிரம் உண்டிங்கு விபச்சாரம்: இதை அன்னியர் வந்து புகல்வது அபச்சாரம்" என்று அலறத் தொடங்கி விட்டனர்.

"இந்திய கலாசாரம் பற்றி இவாளுக்கு என்ன தெரியும்", "தீபா மேத்தா ஒரு கிறிஸ்த்துவ கைக்கூலி"

இப்படி "பழம்பெருமைகளைக் கேள்வி கேட்பவர்களையே நான் கெடுக்க வேண்டும் திருவுளமே" என்று ஞானசம்பந்தர் பாணியில் பார்ப்பனியம் களம் இறங்க ஆரம்பித்து விட்டது.

"பார்ப்பனர் மனம் நோகும்படி செய்தால் அவர்களுக்கு ஆயிரம் பொன் அபராதம் விதிக்க வேண்டும்" - இது மனுதர்மம். தீபா மேத்தா படப்பிடிப்புக்குழுவினரின் நட்டக்கணக்கு ஆயிரம் பொன்னை தாண்டிவிட்டதாக பத்திரிகைச் செய்தி.

"நானே ஒரு இந்துவாக இருந்து கொண்டு இந்துப் பெண்மையை இழிவு படுத்துவேனா? விலைமாது வாக்கப்-பட்ட ஒரு கிருஷ்ணபக்தை மீண்டு-வருவது தான் எனது கதையே. இது பெண்விடுதலை பற்றியது, இன்னும் சொல்லப் போனால் காந்தி தான் என் படத்தின் ஹீரோ" என்று மொட்டைத் தலையில் போய் ஒரு முடிச்சுப் போட்டு விட்டார் தீபா மேத்தா.

தமக்கென ஏதோ ஒரு தத்துவக் கோட்பாடு இருப்பது போல நடிக்கும் இந்து வெறியர்களே,

"கள், இறைச்சி, மீன், முத்திரை (ஸ்திரியின் யோனி) மைதுனம் (சுய இன்பம்) இவை யாவும் மோட்சத்துக்-குச் சாதனங்களாகும். பெண்களைப் புணர்வதே காசி யாத்திரைக்கும், கங்கா ஸ்நானத்திற்கும் மேலானது" எனும் கணிகா தந்திரத்தைக் கொண்ட வாம மார்க்கத்தையும் இந்து சனாதனம் மோட்சம் செல்லும் வழியாக வைத்துப் போற்றும் போது,

இவற்றால் பாதிக்கப்பட்ட இந்தியப் பெண்களை உலகத்திற்குக் காட்டி 'இழிவு படுத்துவதை' அனுமதிக்க முடியாது என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

தீபா மேத்தாவின் நோக்கத்தையும் ஆக்கத்தையும் பற்றி நாம் விமர்சிப்பது வேறு. இந்து மதத்தை, அதன் கட்டுக்கோப்பான கயவாளித்தனங்களை யார் விமர்சித்தாலும் 'நீங்கள் யார்? என்ன தகுதியிருக்கிறது' என்று கேள்விகள் எழுப்பப்படுவதால் அந்தத் 'தகுதியை ஆராய நாமும் தயாராக வேண்டியுள்ளது.

இதோ 'இந்தியன் பிராமின் கோடால்' (இந்தியப் பிராமணர்களின் நீதிமன்றம்) அங்கீகரிக்கப்பட்டவர்களின் தகுதியான பேச்சுக்கள் இவை:

"மத்திய பிரதேசம் என்ன, எங்கு போய் வாட்டர் படப்பிடிப்பு நடத்தினாலும் கல்லால் அடிப்பேன்" இது சன்னி-யாசினி உமாபாரதியின் அருள்வாக்கு.

"மக்களுடைய சென்டிமென்டை யாரும் மீற முடியாது" இது பாரதீய ஜனதாவின் பொதுச் செயலாளர் கோவிந்தாச்சாரியாவின் பதில்.

முதலில் இந்து சமுதாயத்திற்காக வாதாட வரும் நபர்களின் தகுதியை நாமும் கொஞ்சம் உரசிப் பார்க்கலாமா?

இந்தியப் பெண்களை, மரபுகளை, கேவலப்படுத்தி படம் எடுத்தாலே கல்லால் அடிப்பேன் என்று ஓலமிடும் உமாபாரதி



சந்நியாசி என்ற மரபில் இருந்து கொண்டே கோவிந்தாச்சார்யாவோடு கும்மாளம் அடித்ததாக அவர்களுடைய கட்சி வட்டாரமே காறித் துப்பியதே! தன்னையே கல்லால் அடித்துக் கொள்ளத் தயாரா சந்நியாசி?

தனது அற்ப உணர்ச்சியையே (சென்டிமென்ட்) மீற முடியாமல் சந்நியாசினி பக்கம் சாய்ந்து போன கோவிந்தாச்சார்யா மக்களின் சென்டி-மென்ட் பற்றிப் பேசுவதை 'அனுபவம் பேசுகிறது' என்று எடுத்துக் கொள்ள-லாமா?

கணவனைத் தாசி வீட்டிற்குக் கூடையில் வைத்துத் தூக்கிச் சென்றாள் நளாயினி - அது இல்லத்தரசியின் கற்பு.

"கோயில் பூசாரிக்கும், மன்னனுக்-கும் இணங்கி நடப்பது" தேவதாசியின் கற்பு.

இப்படி ஏகப்பட்ட 'கற்பு' எந்த நாட்டில் உண்டு? பொட்டு வைப்பதும், இந்து தர்மம், பொட்டு கட்டுவதும் இந்து தர்மம்.

எந்த ஒரு ஒழுங்கையும் கட்டுப்-பாட்டையும் கடைப்பிடிக்காமல் அப்படி இருப்பதாய் நடிப்பதே இந்து தர்மம்.

"விதவைகள் தரிசு நிலம், வேலைக்கு போகும் பெண்கள் மனம் சுத்தமாக இருக்காது. வீடே கோயில்" என்று விளக்கவுரை பேசிய நடுசங்ராச்-சாரியின் கால்கள் மடமே கதி என்று இருக்க முடியவில்லையே! நேபாளத்-திற்கு சுத்தமான பெண்ணைக் கூட்டிக்-கொண்டு இல்லறத்திற்கு ஓடிவிட்டு பின் துறவறத்திற்கு வந்த ஜகத்குருவின் சமார்த்தியம் எத்தனை பேருக்கு வரும்?

மண் தின்னும் உடலுக்கு மாளிகை எதற்கு? என்று பட்டினத்தாரை கோவணம் கட்டி தெருவுக்கே இழுத்து வந்த "இந்து தர்மம்" பிர்லாவை ஏவிவிட்டு ஏ.சி. பங்களாவில் எம்.டி.வி வசதியோடு அவாளை ஜதக்குருக்க-ளாகக் கிடத்தி வைத்திருப்பதை யார் கேள்வி கேட்க முடியும்? கேட்க முடியாது. கேள்வி கேட்ட சமணர்களுக்கு கழு வாயால் பதில் சொன்னது பார்ப்பனியம்.

கேள்வி கேட்ட புத்தபிக்குகளை அனல்வாதம் புனல் வாதம் என்று நெருப்பிலும்,நீரிலும் நிறுத்தி விடை கொடுத்தது வேதங்களின் நாடு.

பார்ப்பனர்கள் பொய் சொன்னால் அதைப் பொய் என்ற சொல்லால் சொல்லக் கூடாது. 'அர்த்தவாதம்' என்று கௌரவமாக அழைக்க வேண்டும் என்று பரிபாஷை எழுதி வைத்த வேதப் பரம்பரையாயிற்றே!

அவர்களின் ஆணாதிக்க ஒழுக்கக் கேடுகளை உத்தரவாதப்படுத்தும் வழிமுகைளுக்கு அவர்கள் வைத்த பெயர் தான் கற்பு. இனி யாரும் விபச்சாரம் என்று பேசாதீர்கள். 'பரத்தையர் ஒழுக்கம், என்று பேசுங்கள் என்கிறார்கள் வேத விற்பனர்கள்.

"காசியின் விபச்சார கூடாரங்-களுக்குள் யாரையும் கால் வைக்க விட மாட்டோம். எங்கள் கங்கா மையாவின் மரபுகளை எந்த நபரும் சீண்ட அனும-திக்க முடியாது" என்று வாயாடும், இந்து ஒழுக்கத்தின் மறுபக்கம் நம்பிணி?

காசி - கங்கை மட்டுமல்ல ஒட்டு மொத்த உத்தர பிரதேச மாநிலமே தனியார் மயத்திற்கு தாரமாக்கப்-படுகிறது.

உத்தர பிரதேச மின்சார வாரி-யத்தை தனியார் மயமாக்குவதை எதிர்த்து, அரசின் சோரம்போகும் கொள்கையை எதிர்த்து ஆயிரக்கணக்-கான தொழிலாளர்கள் ஆர்ப்பரித்து எழுந்த போது இந்த கற்பின் புதல்வர்-கள் காணாமல் போனதென்ன?

கங்கை, மையா (தாய்) என்றால் அதில் இருந்து தயாரிக்கப்படும் மையாவின் மின்சாரப் புதல்விகளை மட்டும் தனியாருக்குப் பொட்டுக் கட்டிவிடுமோ இந்து தர்மம்?

ஆலைகளை, சாலைகளை
இரயிலை, விமானத்தை - இப்படி
பாரதமாதாவைப் பகுதிவாரியாக
விலைபேசும்
பங்குச் சந்தையின் கற்புக்குத்தானே
பாரதப்பண்பாடு கிடந்து தவிக்கிறது.

விதேசிக் கம்பெனிகளுக்கு
முந்தி விரித்துக் கொண்டே
சுதேசி தர்மம் பேச-

சோரம் போன சுக்கிலத்தை எடுத்தே
கற்பைப் பற்றிக் கதை எழுத
அவர்களால், அவாளால் மட்டுமே
முடியும்.

இதோ...
அம்பத்தூர் தொழிற்பேட்டைகளிலும்
பெரம்பலூர் கழனிகளிலும் இருந்து
விரட்டப்பட்ட நம் சகோதரர்கள்
தெருவில்,

கைத்தொழில் முறிக்கப்பட்ட
நமது சகோதரிகள்
கோயம்பேடு சந்தையின்
கூடைகளில் நசுங்கியும்
'காலம் தள்ள முடியாமல்'

சித்தூர் ரோடு
உளுந்தூர் பேட்டை சாலை
இன்னும் தேசிய
நெடுஞ்சாலையெங்கும்...

தேசமே வந்து தெருவில் நிற்கிறது
விபச்சாரத்திற்காக.

பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு
சமிக்ஞை காட்ட
பாராளுமன்றத்தின் மேலே
ஏற்றப்பட்டு விட்டது
சிவப்பு விளக்கு.

'ஓம் தனியார் மயமாய
ஓம் தாராளமயமாக
ஓம் லோகமயமாக'

அதோ.. கங்கைக் கரையிலிருந்து
அவாளின் சிரார்த்த பிரமாணமும்
சேர்ந்து ஒலிக்கிறது:

"என் தாய் ஒழுக்கங்கெட்டவள். அந்த ரேதஸை (வீரியத்தை) உமதாக நினைத்துக் கொண்டு விபச்சாரத்தில் பிறந்தவனாகிய நான் கொடுக்கிற இந்தப் பிண்டத்தை தன் மகனால் கொடுக்கப்படுகிறது என்று நினைத்து பெற்றுக் கொள்வாயாக.[5]

**துரை. சண்முகம்**

குறிப்புகள்:

1. காசியில் "சங்கல்ப ஸ்நானம்" என்று புண்ணியம் தேடி முழுகப் போகிறவர்களை காலைப்பிடித்து இழுத்துச் சென்று கொல்லுவது சமீப காலம் வரை நடந்த நிகழ்ச்சி.

2. பார்ப்பன சனாதன தர்மங்களை அம்பலப்படுத்தும் "ஞான சூரியன்" என்ற நூலின் ஆசிரியர்.

3. கருவெட்டல் - காசியில் மோட்சத்துக்குப் போகும் இடம் என்று பக்தர்களை நம்ப வைத்துக் கொலை செய்யும் இடம்.

4. பெப்ரவரி - 2000 மாதத்தில் கதிரவன் மற்றும் சில நாளேடுகளில் வந்த பத்திரிகைச் செய்தி.

5. இன்றும் கூட காசியில் பிண்டம் கொடுக்கச் சொல்லப்படும் திவசமந்திரம்.

நன்றி: புதிய கலாசாரம்

# சமாதானம்

மாபெரும் பேரணிக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. மக்கள் வசிக்கும் ஊர்களில் இருந்து அவர்களை அழைத்துவர நம்பர் பிளேட் உள்ள வாகனங்கள் நம்பர்பிளேட் இல்லாத வானங்கள் எல்லாம் தயார்.

போக்குவரத்து சபை பஸ்கள் பேரணிக்கான ஆட்களை சத்தமில்லாமல் இழுத்து வரவும் மிச்சசொச்சங்களை திணைக்கள, கூட்டுத்தாபன வாகனங்கள் கொண்டு போய்ச்சேர்க்கவும் தடைகள் இல்லை.

மாவட்ட எல்லைகளை, மண் மூட்டை அரண்களைத் தாண்டுவது தமது ஆதரவாளர்கள் தான் என்பதை உறுதி செய்து காவலர்களின் காருண்யமான சோதனைத்தடைகள்அனைத்தையும் கடந்து வந்து சேர சகல ஏற்பாடுகளும் ரெடி.

தொடர்ந்து எழுபத்தி இரண்டு மணித்தியாலங்களாக வானொலி தொலைக்காட்சியின் அலைவரிசைகள் அலையலையாக பேரணி தொடர்பான புனித பேரொலிகளை ஓசைகளை வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றன.

வானரத்து தேவர்களும் அகிலத்து பெருமானார்களும் நேரில் வந்து இனமத மொழிவேறுபாடு இன்றி முத்தி வழங்கப் போவதாக அவை அடித்துச் சொன்ன காட்சிகளை வெளிப்படுத்தின.

பத்திரிகைகள் பக்கம் பக்கமாய் அனுபந்தங்கள் வெளியிட்டன. கிராமத்து மக்கள் சகல வசதிகளும் பெற்று குறைவில்லாத வாழ்க்கை வாழ இந்தப் பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் போலவும் சுதந்திரம் பெற்ற ஐம்பது ஆண்டுகளை கழித்து விட்ட இந்த நீண்ட வரலாற்றில் ஒரு புதிய எழுச்சி ஏற்படப் போவதாகவும் அவை கதை பரப்பின.

பேரணியில் பங்குபற்றும் ஆளும் கட்சியும் அதன் அன்புசால் அமைப்பாளர்களும் இணைப்பாளர்களும் ஆதரவாளர்களும் எல்லோரும் சிரத்தை எடுத்து தமது சாயங்களை வெளுக்கப் பண்ணி வெண்மையாகி வெள்ளை வெளேர் ஆகிவிட்டனர்.

நடத்தி முடித்தால் அந்த மாதிரி இருக்கும் என்று பெரும்பான்மை அரசியல் தலைவர்களும் அவர்களை அடிதொழும் சிறுபான்மைத் தலைவர்களும் நெஞ்சை நிமித்திய போது தான் பேரணியை ஒழுங்கு செய்த ஆளும் கட்சியின் மெத்தப் படித்த தலைமை கேட்டது.

"எங்கே அது...."

"..." ஏற்பாடுகள் எல்லாம் பொதி செய்தது போல பூர்த்தியான பின்னர் தலைமை கேட்டது எதனை,

"எது...?"

"அது தான் இந்தப் பேரணிக்கே பிரதானமானது. அது இல்லாமல் என்ன பேரணி" தலைமை சிடு சிடுத்தது.

தலைமை எதைக் குறிப்பிடுகின்றது என்பதைக் கலங்கித் தெளிய முடியாது திண்டாடியவர்கள்.

"நீங்கள் எதனைக் கூறுகிறியள்.." தயங்கித் தயங்கிக் கேட்க,

தலைமை கோபத்தின் உச்சிக்குப் போனது. உயர்ந்து நீண்டு விரியும் எதிர்கால அரசியல் நலன்களைப் பெற்றுக் கொள்ள இந்த முட்டாள்களை வைத்தா செயல்பட வேண்டும் என்று நினைத்ததாலோ என்னவோ காதடைக்கச் சத்தம் போட்டது. தேர்தல் காலத்து வாக்குறுதிகள் போல அவை நாற்திசையும் பாய்ந்து சென்றன.

"நாங்கள் எதற்காக இந்தப் பேரணியை நடாத்துகின்றோம்"

"இன ஒற்றுமையைக் கட்டிக் காக்க"

"வெட்டிச் சாய்க்க, மூளை கெட்டவர்களே இன ஒற்றுமையைப் பாதுகாப்பதாகக் காட்டிக்கொள்ள..."

பெருந்தலைகளும் இடைமட்டத்து முடிகளும் துடிதுடித்துப் போனார்கள். சுதந்திரமான பத்திரிகையாளர்கள் யாராவது நிற்கிறார்களா? என அக்கம் பக்கம் பார்த்தனர்.

"அப்படிக் காட்டிக் கொள்ள எது முக்கியம்"

மீண்டும் தலைமை கேள்வி கேட்டது?

பதில்கள் தடம் புரண்டபடி தான் இருந்தன. சரியானதைத் தான் காணவில்லை.

"இன ஒற்றுமை இருப்பதாகக் காட்டிக் கொள்ள என்ன வேண்டும் சொல்லுங்கள்... ம்... சொல்லுங்கள்"

"....."

"தெரியாதா நான் சொல்லுகின்றேன் கொண்டு வாருங்கள் அதனை"...

சிறிது காலமாய் அதனைக் காணவில்லை தொண்ணூற்றி நாலாம் ஆண்டில் எங்கள் தத்துப்பிள்ளையாக இருந்து எங்களுக்கு நன்கு உதவியது.

நன்றாகத் தின்று கொழுத்திருந்தது. பிறகு எப்போதாவது தான் அதனைப் பார்த்ததாக ஞாபகம். அதனைக் கொண்டு வாருங்கள்"

தலைமயிரைப் பியத்துக் கொள்ளலாம் போல இருந்தது. கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு தலைமை சொல்லும் அதனை மறந்து கனகாலமாயிற்று அதன் உருவத்தை முக அடையாளத்தையே மறந்தாயிற்று. எப்படிக் கண்டுபிடிப்பது எங்கே போவது..."

"அது எங்கே இருக்கும்."

"இது என்ன முட்டாள் தனமான கேள்வி. உடனே கண்டுபிடியுங்கள். வழக்கம் போல சகல வழிமுறைகளையும் கையாளுங்கள். சுற்றி வளைப்புக்கள் தேடல்கள் எல்லாம் நடக்கட்டும். உயிரோடோ. பிணமாகவோ கொண்டு வாருங்கள்.." என்று கர்ஜித்தது தலைமை.

"அடடே முழுப்பிணமாக்கினால் காரியம் கெட்டுவிடும். எனவே எழும்பி நடக்கக்கூடிய மாதிரியான நிலையிலாவது கொண்டு வாருங்கள்... ம்... விரைந்து செல்லுங்கள். திரும்பி வாருங்கள். இருபத்தி நான்கு மணித்தியாலம் தான் காலக்கெடு..."

அதனைத் தேடி தொண்டர்கள், குண்டர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் என எல்லோரும் புறப்பட்டனர். நால்வகைப் படைகளுடன் துணை, இணைப் படைகளும் இணைந்து கொண்டன.

தேர்தல் இடாப்புகளில் அதன் பெயர் இல்லை. உயர் மட்ட பிரமுகர் பட்டியலில் -

விருந்தினர் பட்டியலில் சந்தேக நபர்கள் எதிராளிகள் என்று எந்தப் பட்டியலிலும் காணவே காணோம்.

பிரயாணத்திற்கான பாஸ் தங்குமிடப்பாஸ் போக்குவரத்துப் பாஸ், அது இது என்று எதிலுமே அதன் பெயர் இல்லை.

எதிர்க்கட்சிப் பிரமுகர்கள். நடுநிலையாளர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்து விட்டதா?

சுழியோடிப் பார்த்தும் பிரயோசனப்படவில்லை.

கடைசியில் அந்த அற்புதம் நடந்தது. ஆள் அரவம் அற்ற காட்டுப் பகுதியில் தோல்வியுடைந்த கவிஞனைப் போல அது குப்புறக் கிடந்தது.

தேடிக்கொண்டு போனவர்களுக்கு அது விட்ட மூச்சுத் தான் கேட்டது. "சர் புர்" என்ற அந்தச் சத்தம் எந்த விதமான பின்னணி இசையும் இல்லாமல் தெளிவாகக் கேட்டது.



பதுங்கிப் பதுங்கிப் போனவர்கள் ஆளை ஆள்தள்ளி அதன் கிட்டப் போனார்கள் செத்தது போலவும் சாகாதது போலவும் கோமா நிலையில் இருந்த அது சுற்றிவர நடந்த அமளிகளை உணராமலே கிடந்தது.

கடல் தாண்டி இந்தியாவுக்கு கேட்குமாப் போல் ஒருவன் "நீ தானா அது" என்று கதறினான்.

அது சிறிதாகத் தான் அசைந்தது. ஆனால் கண்களைத் திறக்கவில்லை.

"இது தலைமை சொன்னது தானே..." என்றார் ஒரு தலைவர்.

பல பேர் அதனை உறுதி செய்ய முடியாமல் உதடுகளை கடிக்க சற்றே வயதோடிய ஒரு குருவானவர்.

"எனக்கு முன்பு பார்த்த ஞாபகம் இருக்கிறது. இது அதுதான் ஆனால், முந்தி இது என்ன மாதிரி இருந்தது. எல்லாம் வடிவாய் புஷ்டியாய்.." மலரும் நினைவுகளில் மூழ்கினார் அவர்.

இப்போது முண்டியத்துக்கொண்டு எல்லோரும் அதனைப் பார்த்தனர். சோமாலியா சிறுவர்களைப் போல அது வதங்கியிருந்தது. மண்டை பெருத்து கனத்து எலும்பெல்லாம் துருத்திக் கொண்டு உதடுகள் வெடித்து ஒளிமாறிய விழிகள் படைபடையாய் அழுக்கு மோசமான துர்வாடை.

மூக்கைப் பொத்திக் கொண்டு நின்று என்ன செய்வது இதனைக் கிளப்பிக் கொண்டு போய் பேரணியை நடாத்த கடைசி அது வரையாவது இது தாக்குப் பிடிக்குமா? என்ற பிரச்சினையும் சேர அவர்கள் கவலைப்பட ஆரம்பித்தனர்.

அது எழுந்து உட்கார்ந்து கண்களை இடுக்கிக்கொண்டு சுற்றி நின்றவர்களை விநோதமாகப் பார்த்தது. பிறகு சுயத்திற்கு வந்தது. எதுவுமே புதினமாக இல்லை. அதுக்கு.

எல்லோருமே பழையவர்கள் அல்லது அவர்கள் வழித்தோன்றியவர்கள் உடைகளும் முகங்களும் தான் வித்தியாசம். கோல உடை அணிந்தவர்களின் உடைகளும் புதியவைகள் தான் அவர்கள் கைகளில் இருந்த இரும்புத் தளபாடங்களும் வேறு தான்.

இத்தனை பெருங்கூட்டம் வந்திருப்பது ஏதோ பெரிய அலுவலாகத் தான் இருக்க வேண்டும் என்று அதற்கு புரிந்தது. நாற்பத்தியெட்டாம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பின்னர் தன்னை எப்போதாவது தான் தேடிவருகின்றார்கள். என்பது அதற்குப் புரியாத தொன்றல்ல.

எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தால் என்ன யார் அரசோச்சிய போதும் தேவைப்படும் நேரங்களில் மாத்திரம் தன்னிடம் வந்து கொஞ்சிக் குலாவி கன்னத்தில் கள்ளமுத்தமிட்டு சுகித்து விட்டுப் போவதும் இயல்பானதே.

ஆரம்ப காலங்களில் அடிக்கடி இந்த உறவுகள் புதுப்பிக்கப்படும் ஆனால், சமீபகாலங்களில் இடைவெளி நீண்டு கொண்டு போய் விட்டது. நீண்ட இந்தக் காலப்பகுதியில் போர் என்றால் போர் என்று சொல்லிக் கொண்டிருந்த பெரும்பான்மைத் தலைமை

நன்றி - நூலகத்திட்டம்



அவ்வப் போது அதனைப் பாவித்து வந்தது. அதற்குப் பிறகு வந்தவரும் ஒன்றும் குறைவில்லை. எத்தனை வாஞ்சையாக வெள்ளைப் புறா, வெண்தாமரை என்றெல்லாம் பளபளாக் காட்டினார்கள். எல்லாமே வெற்றி நிச்சயத்தில் கதைத்த பணமாயிற்று.

"நீங்கள் வரவேண்டும்" வெகு விநயமாகக் கேட்டார்கள். வந்தவர்கள்.

"எங்கே..." இத்துப் போன குரலில் அது கேட்டது.

"நாட்டின் எதிர்காலம் கருதி நீங்கள் வர வேண்டும்.." முன்வரிசை அங்கத்தவர் ஒருவர் பவ்வியமாகக் கேட்டார்.

அது சிரித்தது. ஆனால், பார்க்க அது சிரிப்பது போல இருக்கவில்லை. மிதந்து கிளம்பிய அதன் பற்கள்.

ஆட்களை பயம் கொள்ளச் செய்தன.

"நாடு ஒரு கஸ்டமான நிலையில் உள்ளது. நாட்டைக் காப்பாற்ற வேண்டும். பெரும்பான்மை, சிறுபான்மை பிரச்சினை எல்லை மீறிப் போய் விட்டது. நாட்டை அழிவின் விளிம்பில் இருந்து காப்பாற்ற வேண்டும்"

"அப்படியா... அவ்வளவு மோசமாகி விட்டதா பிரச்சினை"

"ஆமாம், பிரச்சினை முத்திப் போய் விட்டது. நாங்கள் மேற்கொண்ட எந்த நடவடிக்கைகளும் இதுவரை பயன்தரவில்லை"

"பயன் தரவில்லை என்றால்,"

"சிறுபான்மைப் பிரச்சினை முழுமையாக முடியவில்லை.

"ஆமாம், சிறுபான்மையை முழுமையாக முடிக்கும் வரை பிரச்சினை முடியாது தான்" என்றது அது.

கூட நின்றவர்களின் முகங்களில் சந்தோஷம் பீறிட்டது. தங்கள் தரப்பு நிலையினை அது உணர்ந்து கொண்டு விட்டதாக ஆனந்தம் கொண்டனர்.

"நாங்கள் பெரும்பான்மையாக இருக்கின்றபடியால் இந்த நாடு எங்களுக்கானது, நாங்கள் தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும். அதுக்கு முதல் சிறுபான்மை பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்"

அது சற்றே கண்களை அகட்டி சுற்றி நின்றவர்களைப் பார்த்தது. சிறுபான்மைப் பிரச்சினையைத் தீர்க்கும் அதீத ஆர்வம் அவர்களின் அகத்தில் இருப்பதை அது புரிந்து கொண்டது.

"சிறுபான்மையினரின் மிச்சப்பிரச்சினையைத் தீர்க்கும் வரை அவ்வப் போது நான் உங்களுக்கு உதவ வேண்டும். அப்படித்தானே..."

சூழ நின்றவர்களை தன் கண்களால் சுழற்றி சுழற்றிப் பார்த்தபடி அது சொன்னது.

"ஆமாம் எங்கள் செயற்பாடுகளுக்கும் வேகம் கொடுக்க வேண்டியுள்ளது. பெரும்பான்மை மக்கள் மத்தியிலே ஒரு எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். எங்களை சந்தேகக் கண்ணுடன் பார்ப்பவர்களைத் திசைதிருப்பவும் வேண்டும். அதோடு.."

மூச்சு வாங்கிய முன்னணித் தலைவர் சற்று இளைப்பாறினார்.

"அதோடு வாக்குகள் கேட்டுப் போகும் திருவிழா வரப் போகின்றது அப்படித்தானே" என்றது அது.

"ஆமாம் நீங்கள் கட்டாயம் வரவேண்டும்." கூட்டத்தில் உச்சக்குரலில் வேண்டுகோள் விடுத்தனர்.

"நான் அதிக நாள் வாழ்வேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. மூப்பு வரவில்லையாயினும் என் நிலை மோசமாகி விட்டது. சரியான பராமரிப்பு இல்லாதபடியால் என் உயிர் போகப் போகிறது. இன்றோ நாளையோ அது நடக்கலாம்."

சோகக் குரலில் அது சொல்ல, "அதனால் என்ன பரவாயில்லை. இப்போது வாருங்கள்..."

கையுறை அணிந்த கைகள் அதனைத் தூக்கின. அது எழுந்து நின்றது.

"வாழ்க... வாழ்க..." என்று எல்லோரும் சத்தம் போட அமைதியான காட்டுப் பகுதி அதிர்ந்தது. காட்டில் இருந்த மிருகங்கள் அதிர்ந்து சிதறின. பறவைகள் துடித்துத் துடித்து விழுந்தன.

ஒரு கிளாஸ் பழரசத்தினை அதனிடம் நீட்ட அதனை வாங்கிய அது மூக்கைப் பொத்திக் கொண்டு சுவைத்துப் பார்த்து விட்டு மிகுதியை தரையில் ஊற்றியது.

பேரணி புறப்பட்ட போது புத்தாடைபூண்ட அது முன்னணியில் நிறுத்தப்பட்டிருந்தது.

தங்க முலாம் பூசப்பட்ட கண்ணாடி போட்டு அதன் முகக் கொடுமையை மறைத்திருந்தனர். காந்திக் குல்லாய் வைத்து தலையின் அசிங்கத்தை முக்காடு இட்டிருந்தனர். காந்திக் குல்லாய் போட்ட காந்தியத் தலைவர் நன்றாய் கழுவிய கைகளுடன் அதற்கு அருகில் வந்து கொண்டிருந்தார்.

எங்கும் வெண்மை... எதிலும் வெண்மை துாய வெண்மை. உடல் பொருள் ஆவி அத்தனையுமே இன ஒற்றுமைக்காக ஒப்படைத்தவர்கள் போல முதல்தர - நடுத்தர - கீழ்மட்ட தலைவர்கள் எல்லோரும் நடந்தனர்.

வழக்கமாக கோல உடைகளில் திரிபவர்களும் கூட தம்மை வெறுத்து வெள்ளை பர்தா அணிந்து பொது இயல்பு காட்டினர்.

சப்பிளாக்கட்டை, உடுக்கு, மேளம், தாளம் என்று ஒரு சிறு கோஷ்டி ஆடிக் கொண்டும் பஜனை பாடிக் கொண்டும் வந்தது. ஒத்து ஊதிக் கொண்டும் சில பேர் வந்தனர். அவர்கள் பெரும்பான்மையோடு இணைந்துள்ள சிறுபான்மையின் சிறுபான்மை என்பதை அது கண்டு கொண்டு கவலை கொண்டது.

"நாடு வாழ்க.."

"இன ஒற்றுமை வாழ்க..."

"சிறுபான்மை பெரும்பான்மை பேதமை ஒழிக.."

"சிறுபான்மை மக்களின் உரிமைகளை அளிப்போம்/ அழிப்போம்"

"மக்கள் ஒன்றிணைந்து நாட்டை வாழவைப்போம்"

"நாட்டை மேம்படுத்துவோம்"

பேரணி தலைநகரினை விழுங்கியபடி பாம்பாக வளைந்து சென்றது.

அது நடக்க முடியாமல் கஷ்டப்பட்டது. மூச்சுவிடக்கூட இயலாமல் இருந்தது. பெரு வேதனையில் துடித்தது.

பேரணி இன்னும் அதன் இலக்கை அடைய வெகுதூரம் இருந்தது. அதுவரை எப்படித் தாக்குப் பிடிக்கப் போகின்றேன் என அது கண்ணீர் விட்டது.

நிலைமையினை புரிந்து கொள்ள முடியாதவர்கள் காட்டுக்கத்தலுடன் சோர்ந்து வரும் அதனை இழுத்துக் கொண்டு நடந்தார்கள் பேரணியை பார்வையிட்டவர்களுக்கு அதனைக் காட்டி மகிழ்ந்தார்கள்.

நடந்து களைத்தவர்கள் வாகனத்திற்குப் போக - புதியவர்கள் வந்தார்கள். களைக்காமல் நடந்தார்கள். ஆனால், அது களைத்து தள்ளாடத் தொடங்கியது.

"ஏன் இது பேசாமல் இருக்கிறது" என்றார் முன்னணித்தலைவர்களில் ஒருவர்.

"இன ஒற்றுமை வாழ்க என்று சத்தம் போட்டால் எவ்வளவு நல்லாய் இருக்கும்"

"இது குரல் கொடுக்கும் ஒப்பற்ற ஆட்சியைக் கொண்டு நடாத்தும் கட்சி என்ற பெயரல்லவா கிடைக்கும்"

ஆளுக்கு ஒவ்வொரு கருத்தினைச் சொல்ல அது தலைகுனிந்தது. கோபம் கொண்ட பேரணி சகபாடிகள் அதன் தலையை உலுக்கினர்.

"நாடு வாழ்க.." என்று சொல்லும்படி நெருக்கினர்.

உயிருக்காகப் போராடும் வேதனையில் சோர்ந்திருந்த அதன் உதடுகளை அசைத்தாலும் சத்தம் வரவில்லை.

தெண்டித்து தெண்டித்து தம் முயற்சி பயன் அளிக்க முடியாமல் போகவே அதனை வேறு விதமாகக் கவனிக்கத் தலைப்பட்டனர்.

கைக்கடக்கமான ஆயுதங்கள்



தான். நீளம் அதிகம் இல்லை. சிறுகத்தி, சிறிய ஊசிகள், ஆரவாரம் இல்லாமல் அதன் உடலில் இறங்கின.

"சொல்லு..."

"கத்து... ம்.. கெதியாய் க்த்து..."

அது பரிதாபகரமாக மூச்சுத் திணறத் தொடங்கியது.

பேரணி முடிந்து கூட்டம் ஆரம்பிக்கும் இடத்தை அடைந்தபோது பேரணியில் வந்தவர்கள் உச்ச லாகிரியில் திளைத்திருந்தனர்.

மேடையிலே முக்கிய தலைகள் முதன்மை பெற்றிருக்க... கனவுக் காட்சிகளாக மேடையும் சூழலும் வனப்புக் கொண்டன.

தங்க பிரேம் கண்ணாடியும் புதிய உடைகளும் பிடுங்கப்பட்ட நிலையில் ரத்தம் பெருக்கெடுத்தோட அப்பாவித் தமிழ்சனம் போல அது அணுங்கிக் கொண்டிருந்தது. "இதனை எப்படியாவது காப்பாற்ற வேணும். அடுத்த மாதம் நாம் நடாத்தப் போகும் மகா நாட்டுக்கு இது தேவை" என்றபடி வேறு சிலர் வந்து கொண்டிருந்தனர்.

## பிரகடனம்

பரிவாரமில்லை, பிரபுக்களுமில்லை
பீரங்கி வேட்டுக்களிடை இலச்சினைக் கொடி
காற்றிலாடிப் பரவ கீதமும் இசைத்திலர்
எனினும் எமக்குரிய தேசம் கிடைத்திற்று

முப்படையும் விறைத்து நிற்க
விம்மிப் புடைத்த அவர் முகம் நோக்கி
மரியாமையேற்கும் தலைவருமில்லை
எனினும் எமக்கவர் ஒரு தேசத்தை ஈந்தனர்

தமிழ் மொழியில் பேசுவதும்
எழுதுவதும் யாப்பென்றவர்
சிங்களத்தீவின் காற்றை நுகர
உயிருக்கு நிகராய் 'துண்டொ'ன்றை
எடுத்து வரல் விதியென்றனர் இப்போது

இருள் வழிப் பயணத்தில்
சுடர் விடும் தீப்பொறியென
அந்தப் 'பாஸ்' இனியெம்
சட்டைப்பையுள் திணறும்

இப்போது ஒரே தேசமுமில்லை
ஒரே மக்களுமில்லை
வரட்சிமிகு அங்காடிகளில்
கூத்தாடிகளின் வருகையும் நின்றிற்று

இனி வேற்றுலகிலிருந்தெம் தலைவர்கள் வருவார்கள்
அவர்களிட்ட பிச்சையில்
நமதின் கிழக்கு வெளுத்ததென்றும்,
அச்சம் கரைந்து
சுதந்திரமுயிர்க்க யாமே காரணம்
என்றெல்லாம் புளுகுவர்,
என்றெல்லாம் நமக்கினி
அவர் வேற்றுலகவாசிகள் தாம்

அறபாத்

2000.02.02

எல்லாக் கனவுகளும் சிதறியுடைய
என்னில் கவிந்த இரவின் சாயலில்
சிறு புள்ளியுமற்றுப் போனேன் நான்
உனக்காக ஒருவரியைத் தானும் எழுதமுடியாத
இப்பிரளயப் பொழுதில்
கரையும் மெழுகுதிரியின் மீது தொங்கிக் கொண்டிருக்கிறது
உனது முகம்.
இன்னும் மறையாதிருக்கும் வெறுமைகுறித்து
துயருறுகின்றது கடல்
சுவரின் எஞ்சிய வெளிச்சம் முழுவதையும்
தின்று தொலைக்கிறது பல்லி
வெளிநிரம்பிய துயரில்
வாழ்வழியக் காத்திருக்கிறேன் நான்.
எதிர்பார்க்கையின் தருணம் விழுங்கிய கடைசிச் சொல்லில்
யாருக்குச் சொல்ல முடியும்
மனச்சுழி இழுத்துச் செல்லும்
உனதுகுரல் பற்றி இரகசியத்தை:
யாரோ பிடுங்கி நதியில் கரைத்த
சுவடுகளில்
மழை தனது துயரை நட்டுவைத்திருக்கிற து இன்னும்.

நீ இருந்த போதில்லாத மனிதர்களெல்லாம்
பாசியாய் ஒட்டிக் கிடக்கிறார்கள் வீடு முழுக்க:
நூறு மனிதர்களிடையேயும் வீடு வெறிச்சிட்டுக் கிடக்கிறது,
உள்ளடங்கித் துயருறும் கடலோ
மணலாய் குவிகிறது மனதில்:
யுகப் பிரளயங்களின் எல்லாக் காலத்திலும்
அடிக்கடி என்னுள் தொலைந்து போகிறது கடல் இப்படி
நீயே போல.

போஸ் நிஹாலே

1999.10.20

நன்றி - நூலகத்திட்டம்



சமீபத்தில் இணையத்தில் சலனம் ஏற்படுத்திய நிகழ்வுகள் இரண்டு. இரண்டும் அடிப்படையில் வெவ்வேறு வகையானவை. ஒன்று பரவலாக எல்லா இடங்களிலும் தெரிந்தது, அதனால் அமெரிக்க உயர் தொழில் நுட்பப்பங்குச் சந்தையில் வணிகம் வீழ்ச்சியடைந்தது, இன்னொன்று அதிகம் வெளியில் தெரியாமல் போயிற்று.

முதலாவது பலநாட்களாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டது. பின்னது தற்செயலாக நடந்தது.

கடந்த இருவாரங்களுக்கு முன் இணையத்தில் வருகை எண்ணிக்கையில் முதலிட-

வேண்டிய மாணவன் உங்கள் கவனம் கிடைக்காமல் தவிக்கின்றான். நீங்கள் நிலை குலைந்து போகின்றீர்கள். உங்கள் சேவை நல்ல மாணவர்களுக்கு மறுக்கப் படுகின்றது. - இது தான் நடந்தது. ஒரு சிறிய வித்தியாசம் - உங்களிடம் கேள்வி கேட்டுக் கூச்சலிட்ட குரல்களுக்கு முகங்கள் கிடையாது (இது இணையத்தின் எல்லா செயல்பாடுகளுக்கும் பொருந்தும், எழுத்தாளர் கோகுலக் கண்ணன் கூறுவது போல் இது குரல்களின் உல கம், முகங்களுக்கு இங்கே வேலையில்லை).

இதில் ஆறு பேருக்கும் அதிகமானவர்கள் ஈடுபட்டதாகவும், கலிபோர்னயா பல்கலைக்கழகத்தின் (சான்டா பார்பரா) சில கணினிகள் வழியாகக் கடத்தியிருப்பதாக மட்டுமே அறிய முடிகின்றது. சிலநாட்களுக்குப் பின் இன்னொரு வேடிக்கை இணையத்தில் நடந்தது. இது பெரிதும் வெளியில் விளம்பரப் படுத்தப் படவில்லை. சி.என்.என் நிறுவனம், "குடியரசுத் தலைவரைக் கேளுங்கள்" - என்று ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. வழக்கமாகத்

என்ன நடந்தது? முதல் நிகழ்வு போல் இல்லாமல், இம்முறை இதைச் செய்தவர், ஒரு அதிபுத்திசாலியான கொந்தர், நாம் சொன்ன பிறவிக்கடன் வகை. இவர்களுக்கு என்று சில ஊடுருவல் நெறிமுறைகள் உண்டு. இவர் அடுத்த நாளே நடந்தது என்ன என எழுதி ஒரு வலைப் புலத்தில் வெளியிட்டார். உண்மையில் ஊடுருவல்



மேல் எழுதத் தொடங்கினார்களேயானால் செயலி உயிரிழந்து விடும். இது நிகழ்ச்சியில் பலமுறை நடந்தது. இதில் வெறுப்படைந்த நமது நண்பருக்கு அந்த சமயத்தில் மூளையில் ஒரு பொறி தட்டியது ஒருமுறை செயலிழந்து மறு உயிர் பெறும் பொழுது அவர் தலைவர்_கிளின்டன் இன்னும் வராததைக் கண்டார். உடனே அந்தப் பெயரை அவரே அபகரித்துக் கொண்டு தன் செல்லப் பெயராக்கினார். பாதுகாப்பில்லாத செயலி, அந்தப் பெயருக்கென்று எதுவும் மேல் கேள்வி கேட்காமல், அவருக்கே தானமாக அளித்து விட்டது. அந்த சமயத்தில் தான் வந்தது. இந்தக் கேள்வி, "இணையத்தில் தற்பொழுது பாலியல் வக்கிரங்கள் மலிந்துவருகின்றதே, இது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" என்ன ஒரு அருமையான நேரம், உடனே மனதில் தோன்றியதை எழுதி வரலாறு படைத்தார்.

# யாகூவும் கிளின்டனும்

த்தில் இருக்கும் யாகூ எனும் தளத்திற்கு வந்தோர்கள் கண்டது வெள்ளைத் திரையைத் தான். இது தொடர்ந்து அடுத்த நாள் மதியத்திற்குள் மற்ற புகழ் பெற்ற தளங்களாகிய அமேசன் (புத்தகம், இசை நாடா மற்றும் விளையாட்டுப் பொருள்கள் விற்பனை), ஈபே (ஏல நிறுவனம்), ஸி.டி. நெட் (கணினி குறித்த தகவல் மற்றும் வியாபாரத் தளம்), ஈடிரேட் (மின்வணிகத் தளம்), சி.என்.என் (செய்தி நிறுவனம்), எக்ஸைட் (தேடல் இயந்திரம்) இவையெல்லாம் வேகங்குறைந்தோ, செயலிழந்தோ போகத் தொடங்கின. இதற்குள் இந்தத் தளங்களின் பாதுகாப்பு அரண்கள் வலுப்படுத்தப்பட்டு ஊடுருவல் தடுக்கப்பட்டது. செயல்பாடு ஒழுங்கு பெற்றது.

இது எதனால் ஏற்பட்டது என ஆராயுமுன் இதன் விளைவுகள் என்னவாயிருந்தன என்பதைக் காணலாம். அந்த இரண்டு நாட்களும், அதைத் தொடர்ந்த சில நாட்களும் அமெரிக்க உயர் தொழில்நுட்ப பங்குச் சந்தையான நாஸ்டாக்கில் இவற்றின் பங்குகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. இந்த ஊடுருவலினால் பாதிக்கப்படாத பிற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்குகளும் வீழ்ந்தன. ஒரு கனம் வணிகவியலார் இணையம் மற்றும் கணினி தொடர்பான பங்குகளுக்கு உயர்விலை தருவது அறிவுபூர்வமானதா எனச் சிந்திக்கத் தொடங்கினர். ஏனெனில், இந்த சுழியவெளி வன்செயலைச் செய்ய அதிக அறிவு தேவையானதாக இருக்கவில்லை. இது போன்ற நடவடிக்கைகளில் சில தடவை அதிபுத்திசாலி பள்ளிச் சிறுவர்கள் முன்னரே ஈடுபட்டுள்ளனர். இதற்குத் தேவையான கணினி நிரல்கள் இணையத்தில் பரவலாக, இலவசமாகக் கிடைக்கிறன. இன்று யாகூவிற்கு ஏற்பட்ட நிலைமை நாளை யாருக்கும் ஏற்படலாம். இந்த ஊடுருவலைத் தடுப்பது எப்படி? முதலில் இந்த வன்செயலை ஊடுருவல் என்றழைப்பது தவறு. இதில் சம்பந்தப்பட்ட எந்தத் தளத்தின் கணினியிலும் யாரும் உள்ளே நுழையவில்லை. எந்த கடவுச் சொல்லும் தகர்க்கப்படவில்லை. பின் இது எப்படி நடந்தது?

இதனால் கூச்சலிடுவோரை அடையாளங்கண்டு தவிர்க்க முடியாத நிலைமை உங்களுக்கு. இதற்கு இணைய மொழியில் "சேவை மறுக்கும் தாக்குதல்" என்று பெயர். உங்களுக்கு ஏற்கனவே விளங்கியிருக்கும், இப்படிக் காட்டுக் கூச்சலிட எத்தகைய அறிவும் தேவையில்லை. பொதுவில் இது போன்ற சுழியவெளிக் குற்றங்களில் ஈடுபடுபவர், அந்த அறிவாளிகளாய் இருப்பார்கள். மிகச் சிறந்த கணினி வலைப் பாதுகாப்பு நிபுணர்களால் கட்டப்படும் அரண்களில் பெருச்சாளிகளைப் போலத் துளையிட்டு உள்ளே புகுதல் இவர்களுக்குப் பொழுதுபோக்கு. இதற்குக் கொந்துதல் எனப்பெயர். இதில் பேரறிவு பெற்ற சிலருக்குத் துளையிடுதல் தங்களின் பிறவிக் கடனாகத் தோன்றுகின்றது. சாப்பாடு, தண்ணீரின்றி எங்கோ மூலையிலிருக்கும் ஒரு இராணுவக் கணினியையோ, மின்வணிக நிறுவனக் கணினியையோ துளை யிடுவது இவர்-



தொலைக்காட்சிகளில் நடப்பது போலத் தான் இதுவும், இதற்கு ஒருபடி மேலே போய் இந்நிகழ்ச்சி இணையத்திலும் நேரடி அரட்டையாக வலை பரப்பப்பட்டது.

இதில் நேயர்களும் தங்கள் கணினி வழியாகக் கேள்வி கேட்கலாம், அவர்கள் சார்பாகக் கேள்விகள் கிளின்டனிடம் கேட்கப்பட்டன. இக்கேள்விகளையும், அதற்குத் தலைவரின் விடைகளையும், உடனடியாக இணையத்தின் வழியாக அரக்கோணத்தில் கூட அறிய முடிந்தது. ஒரு நேயர் "இணையத்தில் தற்பொழுது பாலியல் வக்கிரங்கள் மலிந்து வருகின்றதே, இது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" -எனக் கேட்டார்.

மிகவும் நல்ல கேள்வி. இணையப் புரட்சியை முன்னின்று நடத்திவரும் நாடு என்ற வகையில் அமெரிக்காவின்

இங்கும் நடக்கவில்லை,

இவர் அந்த அரட்டை நிகழ்ச்சிக்காக சி.என்.என். பயன்படுத்திய ஆணை நிரலில் இருந்த ஒரு சிறிய பிழையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கொண்டார். இதுபோன்ற அரட்டை அரங்குகள் இணையத்தில் மிகவும் சாதாரணம். இதில் முகம் தெரியாத வேறொரு நபரிடம் நாள் முழுவதும் வெட்டி விவாதத்தில் ஈடுபடுபவர்களும், வலைப்புணர்ச்சியில் ஈடுபடுவோரும் நிறைய உள்ளனர், இது ஒருவித போதை, இதற்கு அடிமையாவதும் ஒருவித நோயே. இத்தகைய அரட்டைகளில் இரண்டு வகையுண்டு, நெறிப்படுத்தப் படும் அரட்டைகள், நெறிபடுத்தப் படாத அரட்டைகள். இதில் பின்னது ஒழுங்கின்மையின் உச்சகட்டம். சி.என்.என். நிர்வாகித்தது முதல் வகையைச் சார்ந்தது. இதில் யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம், கிளின்டனுக்கும், நேர்காணல் நிகழ்த்து பவருக்குமான உரையாடலைப் படிக்கலாம். கேள்விகள் நிர்வாகக் குழுவிற்குச் செல்லும், அவர்கள் வடிகட்டிய தகுந்த கேள்விகள் நேர்காண்பவருக்கு முன்னுள்ள விழியத்தில் அளிக்கப்படும், அவர் அதை கிளின்டனிடம் கேட்பார். கேள்வியும், பதிலும், சி.என்.என்-னின் இரண்டு தட்டச்சர்கள் மூலமாக அடிக்கப்பட்டு அரட்டையரங்களில் வலை பரப்பப்படும். இவர்கள் இருவருக்குமே வலைபரப்பும் உரிமையுண்டு (அதாவது, இவர்கள் தருவதை மட்டுமே, உலகம் முழுவதும் காணமுடியும், பிற நேயர்களின் கேள்விகள் நேரடியாக நிர்வாகிகளுக்கு மட்டுமே தான் தெரியும்). அரட்டையில் பங்குபெற உங்களுக்கான செல்லப் பெயரை நீங்களே

முப்பது நொடிக்குள் கண்டு கொண்ட நிர்வாகிகள் அவரைச் செயலிழக்கச் செய்தனர். அவர் மீண்டும் அதே பெயரைக் கேட்டார், - கிடைத்தது. இந்த முறை நேர்காணுபவருக்கு எதிர்கேள்வி கேட்டார். மீண்டும் வெளியேற்றப் பட்டார். மீண்டும் உள்ளே - இம்முறை அவரின் செய்கை அவருக்கே சிரிப்பைத்தர - "சரிங்க, நான் பண்ணியது கொஞ்சம் அதிகம் தான், மன்னியுங்கள்" என்று எழுதி விட்டு அவரே வெளியே வந்து விட்டார். அதற்குள் நிர்வாகிகள் அந்தப் பெயருக்கு நிரந்தரமான அனுமதி மறுப்புக்கு ஏற்பாடு செய்து விட்டனர். இது தான் நடந்தது. இதில் யாரைக்குறை சொல்ல, கட்டாயம் இந்த முறை கொந்தர் மேல் பிழையில்லை (இந்த சம்பவத்தில் அவர் கொந்தவில்லை, அவர் கேட்டார், கிடைத்தது அவ்வளவு தான், என்ன கவுன்டமணி என்று கேட்காமல் கிளின்டன் என்ற பெயருக்கு ஆசைப்பட்டார்). குறை சொல்ல வேண்டியது சி.என்.என் நிறுவனத்தைத் தான், அவர்கள் தேர்ந்தெடுத்த இயக்கு தளமும், செயலியும் மோசமானவை. தரமானவை கிடைக்காமலில்லை. (சொல்லப் போனால், லினக்ஸ் இயக்கு தளமும் அதற்கான செயலியும் இலவசமாகக் கிடைக்கின்றன), அவர்கள் செயல் எளிமை கருதி ஒன்றைத் தேர்ந்தெடுக்கப் போகப் பாடம் கற்றுக்கொண்டார்கள். இன்னும் சொல்லப் போனால், வெள்ளை-மாளிகை அந்த

# பாலுணர்வுப் படங்களும்

நீங்கள் ஆசிரியர் எனக் கொள்ளுவோம். பொதுவில் உங்களுக்கு நல்ல ஆசிரியர் எனப் பெயர், உங்களிடம் எது குறித்து சந்தேகம் கேட்டாலும் நீங்கள் அதற்கு விளக்கமோ, அல்லது வேறு யாரிடம் விளக்கம் பெறலாம் என்பது பற்றிய தகவலோ அளிக்கக் கூடியவர் (யாகூ தளம் கிட்டத்தட்ட இதுபோலத்தான், ஒரு நம்பகமான வழிகாட்டி). ஒரு நாள் வகுப்பில் பாடம் நடத்துகின்றீர்கள். ஒழுங்காகப் பாடம் சென்று கொண்டி ருக்கிறது. திடீரென்று இரண்டு மூன்று மாணவர்கள் உரக்கக் கத்துகின்றார்கள், "எனக்கு ஒரு விஷயம் குறித்த சந்தேகம், தயவு செய்து உடனே பதிலளியுங்கள்". நீங்கள் மூவரில் ஒருவரின் கேள்வி என்னவென்று அறிவதற்குள் இன்னும் பத்துபேர் சந்தேகம் கேட்கிறார்கள். இந்த பத்து, இருபதாகின்றது, நாற்பதாகின்றது, இதில் உண்மையாகக் கேள்வி கேட்க

களின் தினசரி நடவடிக்கை (இது ஒன்றும் பெரிய குற்றமில்லை, நீங்கள் உங்கள் நிறுவனத்தின் வேறொருவரின் கணினியை வின்டோஸின் வலையண்மை மூலமாக என்றாவது நோண்டியிருந்தீர்களானால், நீங்களும் ஒரு கொந்தர் தான், (நான் கொஞ்சம் ஆர்வக்கோளாறு காரணமாக அவ்வப்பொழுது வலைப் பக்கங்களைக் கோப்புக்கடத்தல் மூலம் தருவிக்க முயலுவதுண்டு. குஷ்பூ என்னும் கடவுச்சொல்லை ஊகித்து ஒருமுறை என் நண்பனொருவன் கணினியில் படம் வரைந்ததும் உண்டு). ஒருவழியில் சொல்லப் போனால் யாகூவைத் தாக்கியவர்கள் அப்படியொன்றும் சிறுவர்களல்ல. அவர்களை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், இவர்கள் இதுபோலத் தேடல் வேண்டும் ஆணை நிரல்களைப் பல வலைக்கணினிகள் மூலமாகக் கடத்தி, ஏதுமறியா இல்லக் கணினிகளில் பதுக்கி வைத்திருந்தனர். அவற்றை ஒரே சமயத்தில் இயக்கி கலவரத்தை உண்டு பண்ணியிருக்கின்றார்கள்.

இதுவரை கிடைத்த தகவல்களின்படி,

தலைவர் இதற்குப் பதிலளிப்பதற்குக் கடமைப் பட்டிருக்கிறார். இதற்குக் கிளின்டன், "என்னைக் கேட்கப் போனால், இவை இன்னும் அதிகமாவதையே விரும்புகின்றேன்" என்று பதில் கூறியதாக அரட்டை அரங்கில் வெளிவந்தது, சில நேரங்கழித்து, "உல்ப் அவர்களே, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கிளின்டன் தன்னை நேர்கண்டவரையே திருப்பக் கேட்டதாகவும் வெளிவந்தது. எல்லோருக்கும் அதிர்ச்சி. கிளின்டனின் சமீபத்திய நடவடிக்கைகளின் உச்சமாக இது தோன்றியது. ஆனால், இது யாரோ ஒரு கொந்தரின் கைவண்ணம் என்று அறிய பலருக்கும் நேரம் பிடிக்கவில்லை. அங்கே கைவைத்து, இங்கே கைவைத்து, கடைசியாக அமெரிக்கத் தலைவரின் தலையிலேயே வைத்து விட்டார்கள். தவறு சில நொடிகளில் உடனே வலை நிர்வாகிகளால் சரி செய்யப்பட்டது.

இதில் சி.என்.என் கணினிகள் கொந்தப் பட்டதாக சில போட்டி செய்தி நிறுவனங்கள், உடனே செய்தி வெளியிட்டன. சி.என்.என்னும், வெள்ளை மாளிகையும் இதனை மறுத்தன. இங்கும்

தெரிவு செய்ய வேண்டும். உதாரணமாக, நீங்கள் மாசாத்துவான் என்றால், அதேபெயரில் வேறுயாரும் உள்ளே நுழைய முடியாது. இரண்டு தட்டச்சர்களுக்கும் சிறப்புப்பெயர் உண்டு, அப்பெயரில் உள்ளிடுவது மட்டும் அரங்கத்தில் வலைபரப்பப்படும். கிளின்டனின் பதில்களை அடித்த தட்டச்சரின் செல்லப் பெயர் தலைவர்_கிளின்டன். இத்தகைய அரட்டை நிர்வாகத்திற்கான செயலிகள் பல இருக்கின்றன. இதில் யுனிக்ஸ் மற்றும் லினக்ஸ் இயக்கு தளங்களுக்குப் பல தரமான ஹைபிரிட் என்பன போன்ற செயலிகள் உண்டு, இவற்றில் பெரும்பாலானவை இலவசமாகக் கிடைக்கின்றன.

சி.என்.என் பயன்படுத்தியது கான்ப்ரன்ஸ் ரூம் என்னும் செயலி, இது மைக்ரோசாப்ட் இயக்குதளத்தில் இயங்குகின்றது. மைக்ரோசாப்டின் இயக்குதளத்தின் வலைப் பாதுகாப்புகள் அவ்வளவு வலுவானவை அல்ல. மேலும் இயல்பில் தனிநபர் பயன்பாட்டிற்காகச் செய்யப்பட்ட இவை பலர் பங்குபெறும் அரட்டை போன்ற நிகழ்ச்சிகளை அவ்வளவு திறமையாகக் கையாளுவதில்லை. 150 நேயர்களுக்கு

நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்படும் மென்கலன்களை ஆராய்ந்து, பாதுகாப்புக்கு உறுதியளிக்கத் தவறிவிட்டது. இந்த இரண்டு நிகழ்வுகளும் நல்ல பாடமாக அமைகின்றன. மின்வனிகத்திலும் இணையச் சேவைகளிலும் பணத்தைக் கொட்டு முன் அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம். இணையப் பாதுகாப்பு இன்னும் வலுப்பட வேண்டும். இதில் மாபெரும் நிறுவனங்களுக்கு என்ன பங்கிருக்கிறதோ, கொந்தர்களுக்கும் அதே அளவு பங்கிருக்கின்றது.

*- வெங்கடரமணன்,*

தொடர்புள்ள கலைச் சொற்கள்

e-commerce - மின்வணிகம்
cybersapce - சுழியவெளி
hacker, hacking - கொந்தர், கொந்துதல்
network neighborhood - வலையண்மை
file transfer, FTP - கோப்புக்கடத்தல்
monitor - விழியம்
password - கடவுச்சொல்
webcasting - வலைபரப்பல்
chat show, IRC - அரட்டையரங்கம்
cybersex - வலைப்புணர்ச்சி
operating system, OS - இயக்குதளம்

*நன்றி: திண்ணை*

நன்றி - நூலகத்திட்டம்



# 'நஞ்சினில் விளையவோ'

## ஒரு வீதி நாடகமும், சில குறிப்புகளும்

அப்போது தான் மழைவிட்டிருந்தது. ஆனால், மழை இன்னும் பத்து நிமிடங்களில் கொட்டோ கொட்டுமென்றும் தெரிந்தது. கிழக்குப் பக்கத்திலிருந்த இடுப்பளவு உயரமுள்ள திப்பிலிப் புற்கள் வளர்ந்த, சிறிய குளத்திற்கு அருகிலிருந்த பாதையின் வழியே ஒரு பாடுனர், குழாமும், மேற்குப் புறமிருந்து இன்னொரு பாடுனர் குழாமும், அளிக்கைக்கு தெரிவு செய்யப்பட்ட இடத்தை நோக்கி வந்து வட்டமாகி விரிகையில், மீண்டும் மழைகொட்டத் தொடங்க, பார்வையாளர்கள் குடைக்குள் சுருங்கத் தொடங்கினர். மழையைப் பற்றி கிஞ்சித்தும் அலட்டாமல் அளிக்கை தொடர்ந்தது. பின் நிறைவாக முடிந்தது. இறுதியில் மகிழ்ச்சிப் பிரவாகம், அந்த மழையின் வெள்ளம் போல் பார்வையாளர்களின் மனதிலும், அளிக்கையாளர்கள் மனதிலும் ஓடத் தொடங்கியது.

மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிபர் சங்கம் 02.02.00 முதல் 06.02.00 வரை ஒழுங்கு செய்திருந்த வீதி நாடக வதிவிடக் களப் பயற்சிக்காக சி. ஜெயசங்கரினால் எழுதி, இயக்கி மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களைக் கொண்டு சத்துருக்கொண்டானில் ஆறு தடவைகள் அளிக்கை செய்யப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டு, 02.03.2000 ஞாயிறு, பி.ப. 4.30 மணியளவில் வை.எம்.சீ.ஏ சிறுவர் பூங்காவில் மேடையேற்றப்பட்ட "நஞ்சினில் விளையவோ" என்ற வீதி நாடகத்தின் முடிவில் தான் மழை வெள்ளம் போல் மகிழ்ச்சிப் பிரவாகம் ஓடியது.

வீதி நாடகம் (Street Theatre) என்பது ஒரு குறுகிய கால நேர அறிவித்தலில், குறுகியகால நேரத்தில் வீதி ஓரங்களிலோ அல்லது வீதி மூலைகளிலோ சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தி, பிரச்சினைகளுக்குரிய தீர்வுக்கான செயற்பாடுகளை பார்வையாளர்களே எடுக்க வைக்கச் செய்யும், கதை ரூபமாக அல்லது உருவகமாக உண்மை வரலாற்றைக் கூறும் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு நாடக வடிவமாகும். இதன் பிறப்பு Folk theatre இலிருந்து என்பர் அறிஞர்கள். திறந்த வெளியில் மக்கள் கூடிப் பார்க்கும் போது இதன் இயற்கை வடிவம் வட்டமாகும். இந்நிலைமையில் அளிக்கையாளர்களும், பார்வையாளர்களும் ஒருவரிலிருந்து மற்றொருவர் வித்தியாசப்படாமல், வீதி நாடகம் உணர்த்த வந்த உண்மையை இரு சாராரும் சமவீச்சில் உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ள அல்லது உணர்ந்து கொள்ள வழிவகுக்கின்றது. வீதி நாடகங்களில் காணப்படுகின்ற விழுமியங்களின் நேரடியான பிரதிபலிப்புகளும், சமூக பொருத்தப்பாடுகளும், சமூகங்களுக்கிடையேயான தொடர்பாடலுக்கு உதவுகின்றன. நன்றாக கற்பனை செய்யப்பட்டு, உணரப்பட்டு, திறமையாக அளிக்கை செய்யப்படும் போது வீதி நாடகங்கள், பார்வையாளர்களின் உணரும் திறனையும் மனச்சாட்சியையும் செம்மைப்படுத்தி, விரிக்கச் செய்து அவர்களின் சிறப்பான வாழ்வுக்கு பங்களிப்புச் செய்கின்றன. வீதி நாடகங்கள் சமூக - அரசியல் - பொருளாதார பிரச்சாரங்களுக்கு ஒரு சக்திவாய்ந்த சாதனமாகும். காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகம் வீதி நாடகத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். இப்போது தேர்தலுக்கு முன்னும், பின்னும் நடப்பதும் வீதி நாடகங்களின் மருவல்களே. (இதனால் அரசியல்வாதிகளெல்லாம் நல்ல நடிகர்கள் என்ற முடிவுக்கு நீங்கள் வந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.)

"நஞ்சினில் விளையவோ" விஞ்ஞானப் பரப்பலில் மற்றொரு காத்திரமான முயற்சி ஏனெனில் கலை இலக்கிய வடிவங்களூடாக விஞ்ஞானப் பரப்பல் அரிதான ஒரு காலகட்டத்தில் அதுவும் வீதி நாடக வடிவத்தில் "பிள்ளை அழுத கண்ணீர்", "நவீன பஸ்மாசுரன்" ஐத் தொடர்ந்து மீண்டும் விஞ்ஞானம் பரப்பல் நடந்திருக்கின்றது. விஞ்ஞானம் மட்டுமல்ல சமூக - பொருளாதார மேம்பாட்டிலும் பரப்பப்பட்டிருக்கின்றது.

இரு பக்கமும் இருந்து வந்த பாடுனர் குழாங்கள் பாடலைப் பாடியபடி அளிக்கைக்கு தெரிவு செய்யப்பட்ட இடத்தை நோக்கி வேறு வேறு இடங்களில் இருந்து வருகின்றார்கள். திட்டமிட்டப்பட்ட நாடகச் செயல்களில் ஈடுபடத் தொடங்குகின்றனர். கடதாசி விளையாடுதல், குண்டு விளையாடுதல், குடிகாரர், கல்லுடைக்கும் பெண்கள், சமைக்கும் பெண் என செயல்கள் நிகழ்கின்றன. ஒவ்வொருவராக தொழிலும் இல்லை, சம்பளமும் பத்தல்லை, சந்தோசம், நிராவணம், படிப்பு,பாதுகாப்பு இல்லை, அடுப்பில் நெருப்பு, உலையில் அரிசி, உப்பு இல்லை என்று ஏதோ ஏதோ ஒன்றை இழந்தவர்களாக புலம்பிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது எனச் சிந்திக்கும் போது, ஓரிடத்திலிருந்து பறையொலி கேட்டு நஞ்சுண்டார்" செத்து செத்து வாழ்வதாமோ, புத்திகெட்டு போமோ,



வெட்டிப் பேச்சுத் தானோ" என்று பாடிக் கொண்டு ஆடுகளத்தை அடைந்து பாடி முடிய பேசத் தொடங்குகின்றார். தனது நிலையையும், தனது உடல் நஞ்சூறி, பலவீனமாய் நொந்துபோய், நோய்கள் பீடித்துக்கிடப்பதையும் சொல்கிறார்.

இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று பார்வையாளர்களை சிந்திக்க வைக்கிறார். "மற்றவர்களும்" ஏன் என்று "உரைஞரிடம்" காரணம் கேட்கின்றனர். அதற்கு "உரைஞர்" உரம் திண்டு, நஞ்சு குடிச்ச அரிசி திண்டு, மரக்கறி திண்டு, மீன் திண்டு, மாமிசம் மற்றும் பலபல திண்டு நஞ்சூறிக் கிடக்கிறோம் என்று சொல்கின்றார். பின் அதற்கான தீர்வை அவர்களிடம் புத்தியை பாவித்து யோசிக்கச் சொல்கிறார்.

பின்னர் சமூகம் வெளிநோக்கியபடி உள்வட்டமாகவும் ஏனையோர் பக்கமாக நோக்கியபடி வெளிவட்டமாகவும் மாறி அசைவுகளுடன் கேள்வி பதிலாக பாடத் தொடங்குகின்றனர். சமூகம் கேட்கும் கேள்விகளுக்கு, "பாடுனர்" அனுபவம், புத்தி, அறிவு இவைகளைக் கொண்டு துண்டு நிலமெடுத்து பயிர்பச்சை நட்டு, இயற்கையெருவிட்டு, இயற்கையாய் வளர்த்தெடுத்தால் நோயற்ற வாழ்வு வரும், வளமான சூழல் வரும் எனப் பதிலை பாட்டு வடிவாக சொல்கிறார். அப்போது அனைவரும் நின்றபடி வெளியில் உள்ளவர்களைப் பார்த்து வீட்டுத் தோட்டம் வைக்கலாம், நாட்டுக் கோழி வளர்க்கலாம், வீட்டுத் தேவைக்கு எடுக்கலாம், நல்ல உணவும் சமைக்கலாம், எமக்கும் நல்லது. எவர்க்கும் நல்லது கொள்வோம், கொடுப்போம், எமக்கும் இனியது, எவர்க்கும் இனியது, வாழ்வோம், வாழ்வோம் என அனைவரும் கூறுகின்றனர்.

பின்னர் "உரைஞர்" எல்லாம் செய்யலாம், அதற்கு மக்கள் தேவைகளை நாங்கள் தீர்மானிப்பதா? மக்களது தேவைகளை அவர்களிடமிருந்தே அறிவதா எனக் கேட்கிறார். அதற்கு எல்லோரும் மக்களிடமிருந்தே அறிவோம் எனக்கூறி அடுத்த பத்து நிமிடங்களுக்கு பார்வையாளர்களுடன் அளிக்கையாளர்களின் கலந்துரையாடல் நடக்கிறது. பின் அளிக்கைக்காரர்கள் மீண்டும் மைதானம் போய், எல்லோரும் சேர்ந்து எழுந்து வருவோம், எங்கள் பலத்தில், எங்கள் நிலத்தில், எழுந்து நாம் வருவோம். ஏந்தும் கரங்கள் வேண்டாம் எமக்கு, விளைவிப்போம் நாங்கள் எங்களில் நாங்கள் தங்கி நிற்போமென உறுதி கொள்கின்றோம் எனப் பாடி முடிய அந்தக் கொட்டும் மழையில் அளிக்கை நிறைவு பெறுகின்றது.

இங்கே இவர்கள் உணர்த்த வந்தது, பிரிந்தறிய முடியா உயிர் இரசாயனப் பொருட்கள் உயிர்களில் குவிக்கப்படுதலும் (Biomagnification) பேண்தகு விவசாயம் (Sustainable Aqrimttere) சுய தொழில் வாய்ப்பு, போன்றவற்றையேயாகும். மிகையாக இராசாயனங்கள் பாவிக்கப்படும் போது அதன் பிரிந்தறிய முடியாத கூறுகள், நீர் நிலைகளை அடைந்து, பின் மீன்களை அடைந்து, பின் நீரிலிருந்து புல்லை அடைந்து, அதனை மேயும் கால்நடைகளை அடைந்து ஈற்றில் மனிதனை அடைந்து, அவனை நோய்வாய்ப்படுத்தி, நோயாளியாக்கி ஈற்றில் அவனது உயிருக்கே உலை வைக்கின்றது. மனிதருக்கு மட்டுமல்ல, எல்லா உயிரிகளுக்கும் பாரிய சேதத்தை இந்த இரசாயனக் கூறுகள் விளைவிக்கின்றது. கூட்டெரு, இயற்கையுரம் பயன்படுத்தப்படுவதினால் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்று சொல்கிறார்கள். பல்வேறு சுய தொழில்கள் பற்றியும் சொல்கிறார்கள்.

நாடகத்தில் நடித்தவர்கள் எல்லோரும் இளமஞ்சள் நிற மேற்சட்டையையும், (பூமியைக் குறிக்க) பச்சை நிற காற்சட்டைய்யும் (பயிர்களைக் குறிக்க) இடுப்பிலே எல்லோரும் மஞ்சள் நிற பட்டிகள் அணிந்திருந்தனர். நஞ்சுண்டார் மட்டும் நீலத்தில் (விசத்தைக் குறிக்க) பட்டி கட்டியிருந்தார். இந்த உடைகளே Let's serve the Globe என்பதன் குறியீட்டு வடிவமாக இருந்தது. பின்புல குள நீரியற்களைக் காட்சிகளுடன் பாட்டு, இசை, நடனம், வசனம், அதன் இன்ன பிற அழகியல் அம்சங்களும் மிகவும் நன்றாகவே இருந்தன.

ஒருவகையில் பார்த்தால் பொருளாதார, தொழிநுட்ப ரீதியான தங்கிநிற்கும் தன்மையை ஏற்படுத்தி அதன் மூலம் எதிர்கால சந்ததிக்கு வளமாய்க் கட்டிக்கொடுக்க வேண்டிய சூழலை மாசாக்கி, உயிரிகளின் நீண்டநாள் உலவுகையை கேள்விக்குறியாக்கும், நவகாலனித்துவத்தினதும், பல்தேசியக் கம்பனிகளினதும் சுரண்டல்களுக்கெதிரான உள்ளார்ந்த எதிர்ப்புணர்வு தான் "நஞ்சினில் விளையவோ" எனலாம். அதாவது கலிவர்களுக்கெதிரான லில்லிபுட்டன்களின் உள்ளார்ந்த எதிர்ப்புணர்வு எனலாம்.

நாடகம் கட்புல, செவிப்புல தாக்கத்தை கொடுக்கக்கூடிய ஒரு ஊடகமாகும். அதிலும் வீதி நாடகம் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். அளிக்கைக்காரர்களின் வட்டத்திற்கும், பார்வையாளர்களுக்கும் இடையிலுள்ள இடைவெளி கூடி கொஞ்சம் மேடை நாடகத் தன்மை தோன்றப் பார்த்தது. இதற்கு கொட்டும் மழை காரணமாக இருந்திருக்கலாம். நாடகத்தில் சில இடங்களில் பிரதேச பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். இன்னும் கொஞ்சம் உணர்வு பூர்வமாக நடித்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். இவ் வீதி நாடகக் குழுவிற்கு ஒரு பெயரும் வைக்கப்படல் வேண்டும்.

வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு நாடகக் குழுக்கள் மட்டக்களப்பில் தோன்றினாலும் அதிலும் இவ்வீதி நாடகக்குழு ஒரு தாக்கமான இயக்கமாக முன்னெடுத்துச் செல்லப்படக்கூடிய வாய்ப்பின் தன்மை அதிகமாக இருப்பதாலும் "நஞ்சினில் விளையவோ" மட்டக்களப்பு வீதி நாடக வரலாற்றில் ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது. இறுதியாக கொட்டும் மழையையும் சிறுவெயிலென நினைத்த அர்ப்பணிப்பு மனப்பான்மையுள்ள கிறிஸ்தவ வாலிப சங்க இளைஞர்களுடன் மட்டக்களப்பின் வீதி நாடக வரலாற்றில் புது அத்தியாயம் சி.ஜெயசங்கர் அவர்களினால் தொடக்கப்பட்டு விட்டது எனலாம்.



7ம் பக்க தொடர்ச்சி........

பாரபட்சம் காட்டாது நீதி, நியாயம் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் வழக்குகளை இழுத்தடிக்காது, நடத்துதல் அவசியமாக உள்ளது. குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படல் வேண்டும். பிணையில் விடுவிக்கப்படுவதால் பாதிக்கப்பட்டவர்களும், சாட்சி அளித்தவர்களும் மிகவும் அச்சம் கொள்கின்றனர்.

**✓ சட்டம் பற்றிய புரிதல் எவ்வளவு தூரம் சாதாரண மக்களிடம் உள்ளது என நினைக்கிறீர்கள்?**

சட்டம் குறித்த புரிதல் கிராம மக்களிடம் மிகவும் குறைவாகவே உள்ளது. உதாரணம் சட்ட முறைப்படி பதிவுத் திருமணம் முடித்த நபர், இண்டாவது முறையும் பதிவுத் திருமணம் முடிக்கின்றார். இந்தச் சம்பவங்களைப் போர்ச் சூழல் காரணமாக இவ்வாறான விடயங்களில் பொலிஸ் கவனம் எடுக்காது என்ற மனப்பாங்கும் உருவாகியுள்ளது.

**✓ நீதி கிடைப்பதில் கால தாமதம் அல்லது நடவடிக்கை எடுக்காமை என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை இன்மையை ஏற்படுத்தாதா?**

பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு நியாயமான நீதி கிடைக்கக் கூடிய சட்ட நடவடிக்கை, வழக்குகள் நடத்துகின்ற முறை, இழுத்தடிப்பு போன்ற காரணங்களால் சட்டத்தில் நம்பிக்கையற்ற தன்மை இருக்கின்றது.

**✓ பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை பற்றிய உங்களது அபிப்பிராயம்?**

ஆண்களைக் கண்டாலே எட்டித் தூர ஓடத் தோணுதே என்ற மன நிலை ஏற்பட்டுள்ளது. குடும்ப உறவினர்களில் வெறுப்புத் தன்மை. அதாவது அப்பா, தாத்தா, அண்ணா என்ற உறவு நிலை மாறி எதிரி என்ற மனநிலையுடன் நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகின்றது.

**✓ இவர்களுடைய எதிர்காலத்திற்கான நம்பிக்கையைப் பெண்கள் அமைப்பினர் என்ற வகையில் நீங்கள் (சூர்யா) எந்த வகையில் வழங்குகிறீர்கள்?**

இவர்களுடைய எதிர்காலத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய வகையில் எமது நிறுவனத்தின் செயற்பாடு உடனடி நடவடிக்கை வைத்திய உதவி, உள நல ஆலோசனை வழங்குதல், அவர்களுடன் தொடர்ந்து தொடர்புகளையும், உறவுகளையும் வைத்துக் கொள்ளல், அவர்களுடைய கதையைக் கேட்க ஆட்கள் இருக்கின்றனர் என்ற நம்பிக்கையை உருவாக்குதல்,

சட்ட நடவடிக்கையைத் துரிதப்படுத்தல், சட்ட ஆலோசனை வழிகாட்டல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அத்துடன் கலை ஊடகங்களின் ஊடாக கிராமங்களில் நாடகம், பாட்டு, தெருக் கூத்து போன்றவை செய்வதன் மூலம் சமூகங்களிற்கிடையில் கேள்வி எழுப்பச் செய்தல், விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள் நடாத்துதல், கிராமங்களில் பெண்கள் குழுக்கள் அமைத்தல், கூட்டங்கள் பரவலாக நடாத்துதல், சஞ்சிகைள் செய்தி மடல்கள் மூலம் விழிப்பை ஊட்டுதல் போன்றனவும் செய்யப்பட்டு வருகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்





## பலங்களையும்; பலவீனங்களையும் உணர்த்தி நிற்கும் அமரதாஸ் கவிதைகள்

"தேடல்களும், துயரங்களும், நெருக்கடிகளும் இந்த வாழ்க்கையும், இயற்கையும் எனக்கு நிறையக் கற்றுத் தருகின்றன. எனது அனுவங்களும், தரிசனங்களும் அவ்வப் போது படைப்புகளாகின்றன. ஒரு நீண்ட பயணத்தின் இடையில் நின்று திரும்பிப் பார்க்கும் போது எனது முக்கிய தடயங்களாக எனது படைப்புகள் இருப்பதைக் காண்கிறேன்."

"இயல்பினை அவாவுதல்" எனும் தனது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கும் ஈழக் கவிஞன் அமரதாஸின் அனுபவம் இது. இவர் இளந்திரையன் என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகள் ஏற்கெனவே பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அதையும் விட வெளிவராத தனது கவிதைகள் சிலவற்றையும் சேர்த்து தனது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார்.




**இயல்பினை அவாவுதல்**
*-அமரதாஸ்*
*கவிதைத் தொகுதி*
*வெளியீடு: தேடல்*
*இல: 257, ஸ்கந்தபுரம்,*
*கிளிநொச்சி*
*விலை: 70.00*

மரபுக் கவிதைகளுக்கும் புதுக் கவிதைகளுக்குமான இடைவெளியில் தனது வாழ்வனுபவங்களை அழகிய மொழியில் கவிதையாக்குவதில் இந்த இளம் கவிஞர் தனக்கான தனித்துவத்தைக் கொண்டுள்ளார்.

வாழ்வின் காலத்தையும் சூழலையும் உள்ளடக்கி தனது அக வெளிப்பாட்டின் பகிர்தலை இந்தக் கவிஞனின் கவிதைகள் பிரதிபலிக்கின்ற அதேவேளை, அவரது வாழ்விற்கான சூழலும், யுத்தமும், அதன் தாக்கங்களும், என்று அதனோடு மௌனமாய் இணைந்து போகாமல் கேள்விகளாய் முளைத்து அவர் தனது சூழலை நோக்கி நீட்டும் விரலில் சமூகத்தின் மௌனத்தை அழகாக எழுதிச் செல்கின்றது அவரது பேனா முனை.

வாழ்தல், வாழ்தலை மறுதலித்து யார் யாருக்காகவோ வாழ்தல், செத்துப் போதல் என்பவற்றுக்கு அப்பால் ஒரு கவிஞனாக நின்று முரண்படும் இவரின் கவிதைகள் இச்சூழலில் ஒரு மனிதனின் வாழ்வுரிமைக்கானவை. அவரது கவிதை மொழியின் வெற்றி அவரது கவிதைகள் பன்முகத் தன்மை கொண்டிருப்பது ஆகும்.

இத் தொகுதியின் முன்னுரையில் கருணாகரன் கூறுகிறார், "அமரதாஸின் கவிதைகள் அமைதியும், தீவிரமும் உடையவை. நிதானமானவை. மொழிச் செம்மையை உணர்த்துபவை. ஒரு முகத் தன்மையை நிராகரித்து கவிதைக்குரிய பன்முகப்பண்புடனும், பரிமாண இயல்போடும் பொருள் உணர்த்துபவை. எதனிலும் கட்டுண்டு போகாமலும், எதனையும் சாராமலும், தனித்திருப்பவை. சுயாதீனத்தைக் கோருபவை. இத்தகைய பண்புகளைக் கொண்ட கவிதை முறைமையை ஈழத்தின் இன்றைய கவிஞர் கடைப்பிடிப்பது அபூர்வமானது"

அது உண்மை தான். அவரது கவிதைகளின் மொழியின் எளிமையும் பன்முகப்பாடும் அவரது கவிதைகளின் வாசிப்பில் மீண்டும் மீண்டும் பல் வகைப் பொருளை உணர்த்துபவையாகவே உள்ளன.

பரிமாணங்களைக் கொண்ட கவிதைகளைப் படைப்பதற்கு மொழியின் லாவகம் கையாளத் தெரிந்திருத்தல் அவசியம். அமரதாஸ் மொழியில் லாகவத்தை நன்றாகவே கையாண்டிருக்கின்றார். அவரின் விசாரணை என்ற கவிதையில்,

கதவடைத்து இருட்டறையுள்
இருந்தென்ன செய்கிறாய்?

இறுக்கிப் பூட்டிய அறையினுள் சஞ்சரிக்கும்
உருமறைவுச் சீவியமே
வலிதாய் வாய்த்த
காப்பெனக் கருதித் துயில்கிறாயா?

அல்லது
இருட்டறையில் உழல நேர்ந்த
அவலத்தை நினைந்து
புளுங்கித் தவிக்கிறாயா?

வெளியேறின்
மெய்ரூபத்தை உலகறிந்து தாக்கும்
எனத் தயங்கி
உள்ளே முடங்கி ஒளித்திருக்கிறாயா?

அல்லது
வெளியே விளைந்துள்ள
விழிகளறியாப் பொறிகளை எண்ணி
வெருள்கிறாயா?

யாரேனும்
வலிமை பொருந்திய மீட்பராய்
இரங்கி வந்துன்னை
இரட்சித்து மகிமை சேர்ப்பார்
என்றெண்ணிப் பொறுத்திருக்கறாயா?

அன்றிக் கதவுடைத்து வெளியேறி
அம்பலத்திலாடி வெல்ல
ஆயத்தம் செய்கிறாயா?

என்று மௌனத்தை விசாரணை செய்யும் அதேவேளை, போரின் வாழ்வியலின் அவலத்தை அவர் தனது "அவஸ்தைகள்" என்ற கவிதையில்,

அருமையறியாக்கரம் தீண்டிப் பிய்த்துதறி
வெய்யிலில் வதங்கும்
அன்றலர்ந்த மென்பூவின் இதழ்களென
திக்கொன்றாய் விசறுண்டு
அவஸ்தையுற்றோம்.

பசிப்பின் புசித்து
மனஞ்சுரக்கும் பொழுதுகளிற் புணர்ந்து
கூடிக்களித்து
குலவிக்குலவி உலாத்தலிடப் பறக்கும்
பட்சிகளாயாயினும் பிறந்தோமில்லை

இருதயம் வறண்டு சுருங்கிய
பாதகரின் அண்டையிலே
அரிய உயர் பிறப்பெடுத்தும்
கண்டதென்ன?

என்று அங்கலாய்கிறார் கவிஞர். இது அவரது அவலம் மட்டுமில்லை. இன்று வாழும் ஒவ்வொரு மனிதரின் அவலமும் அதுவாகவே உள்ளது.

யுத்தம் மனிதர்களைக் கட்டிப் போட்டு, பசிப்பின் புசித்து? மனஞ்சுரக்கும் பொழுதுகளிற் புணர்ந்து கூடிக்கழித்து, பட்சிகளாயாயினும் பிறப்பெடுத்தோமில்லை என்று ஏங்கும் நிலையில் கொடூரப் பிடியில் கட்டி வைத்திருக்கிறது.

அதேபோல் காணாமல் போகும் மனிதர்கள் தொடர்பாக புண்கள் என்ற கவிதையில்,

தெருவொன்றிற் பயணித்த போதோ
தூங்கும் போதோ
கனிந்து பொழியும் கனவுகளில்
முழுகும் போதோ
காணாமற் போனீர்கள்.
உறவுகளின் இழைகள் ஈய்ந்து
அறுபட்ட புண்களிடை
துயரொழுகத் துயரொழுக
சிறகுகள் கிழியுற்ற வலுவீனராய்
கொலைக்கருவி முனைகளாற் கொழுவுண்டு
கடத்தப்பட்டீர்கள்.

உங்களுடைய ஆண்குறிகள்
பிதுங்கிச் சிதைக்கப்பட்டிருக்கலாம்
திறக்க மறுத்த பெண்குறிகள்
மழுங்கத் திரண்ட முனைகளின்
மூர்க்கத் துளாவல்களால்
பிளக்கப்பட்டிருக்கலாம்

விதவித வதைகளால் விகாரித்து
சிறறையிருளில் நெரியுண்டு
மரித்திருக்கலாம் நீங்கள்

பெருவெட்டையொன்றின் ஆழமோ
மலக்குழிகளோ
பாழடைந்த கிணறுகளோ
இன்னும் என்னென்னவோ
உங்களை விழுங்கி மௌனித்திருக்கலாம்

உங்கள் வீடுகளின் வெற்றிடங்கள்
இனி யாரால் நிரப்பப்பட முடியும்?

அந்நியக் கொடூரர்களின் பிடுங்குதலில்
உங்களை இழந்தோரின் புண்களை
ஆற்றும் தகைமை யாருக்குண்டு?

என்று அவாவி நிற்பது துப்பாக்கிகளின் நிழலில் வாழும் மனிதனின் துயரங்களை நெஞ்சோடு சுமக்க வைக்கின்றது.

யுத்தத்தின் அவலங்களை மட்டுமல்ல அவர் தன் காதல் உணர்வையும் அழகாகச் சொல்கிறார்.

மாயச் சிரிப்பு என்ற கவிதையில்

..............
.........
.........
மொட்டெனக்குவிந்த வாயிதழ்கள்
முகையவிழ்ந்து
வசீகரப் பூவாய் விரிந்தசைய ஒலிரும்
நின் மாயச் சிரிப்பின் மெல்லிசையில்
நெடுகவுந்தான்
மோனத்தவம் கலைய
நெகிழ்ந்து கரைகிறேன் நான்.

என்கிறார்.

மொத்தத்தில் அவர் கூறியது போவவே

அவரது படைப்புகளினுடாக அவரது பரிமாணங்களையும் , பலங்களையும், பலவீனங்களையும் உணர முடிகின்றது. அவரது வாழ்க்கைப் பயணத்தின் தேடலின் தடயங்களாகவும் சகல தளைகளிலிருந்தும் விடுபட்டு மேன்மையுற விழையும் ஒரு சாதாரண மனித மனத்தின் சாட்சியங்களாகவும் மனிதப் பொது அனுபவ உணர்வுகளின் அழகியல் வெளிப்பாடுகளாகவும் அவரது படைப்புகள் உள்ளன. அவை சக மனிதர் தம்மைத் தாமே தரிசிப்பதற்கான வாசல்களாகவும் இயங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் ஒரு கவிதையின் பரிமாணத் தன்மை என்பது அக்கவிதை பல்வேறு கோணங்களில் வியாபிக்கக்கூடியதாக இருந்தாலும், அதுவே அக்கவிதையின் நேர் வெளிப்படான உணர்வினையும் மழுங்கடிக்கின்றது என்பதும் உண்மையே. ஏனெனில் எவ்வளவு தான் கவிதைகள் வாழ்வியலின் துயரத்தைச் சொல்லிச் சென்றாலும், ஒரு யுத்தச் சூழலின் பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்துவதில் அவரின் மொழிகளே அவருக்கு தடையாக உள்ளதுடன், அந்த வெளிப்பாட்டுத் தன்மையால் அது மலினப்படுத்தப்பட்டும் போகின்றது என்பது உண்மையே.

அவரின் கவிதைகள் அவருடைய தடயங்கள் என்ற கவிதையில் வருவதைப் போல்,

..........................
காலக் காற்றடிப்பில்
மங்கித் தேய்வுறாது தப்பி
என் பயணத்தின் தடயங்களாய்
சிறிது காலமேனும் துலங்கும்
நான் அழுத்திப் பதிக்கின்ற
என் சுவடுகள் சிலவாயினும்

என்று நம்பிக்கை கொள்ளலாம்.

– ரதி



**ஒரு பிடி மண்**
*-சாந்தன்*
*சிறுகதைத் தொகுதி*

*வெளியீடு: நர்மதா மதிப்பகம்*
*16/7, ராஜாபாதர் தெரு,*
*பாண்டிபஜார்*
*தியாகராய நகர்*
*சென்னை*




**சங்கடங்கள்**
-இ. முருகையன்
ஐந்து நாடகங்களின் தொகுதி

*வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை.*

*விலை: 100.00*




**மதமும் கவிதையும்**
*-கார்த்திகேசு சிவத்தம்பி*
*கட்டுரைத் தொகுதி*

*வெளியீடு: கொழும்பு தமிழ்ச் சங்கம்*
*இல: 7, 57ம் ஒழுங்கை,*
*கொழும்பு - 6*

*விலை, 50.00*

நன்றி - நூலகத்திட்டம்






## கல்வித் திணைக்களத்திற்கு என்ன தயக்கம்?

15.09.99அன்று நான் பாடசாலையில் சக ஆசிரியரினால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டேன்.

இது ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நிகழ்ந்ததால் எனது தொழிலிற்கும், சுயகௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பாக, அதிபர் கொட்டாஞ்சேனைப் பொலிஸ், கல்வியமைச்சு போன்ற இடங்களுக்கு அறிவித்திருந்தேன்.

கல்வியமைச்சு இது தொடர்பாக ஒரு நீதியான விசாரணையைக்கூட நடாத்தவில்லை.

இறுதியில் நான் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன்.

03.03.2000 அன்று பி.ப.1.00 மணியளவில் வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி (திருநாவுக்கரசு) நடந்த விடயங்கள் உண்மையெனவும், பொலிஸ் முறைப்பாட்டின்படி காயம் எதுவும் இல்லாததால் இதற்கு நஷ்டஈடு பெற்றுத் தரலாம் என நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

நீதிபதி என்னிடம் இது தொடர்பாகக் கேட்ட போது நான் இவ்வழக்குத் தாக்கல் செய்தது ஒரு சரியான ஒழுக்காற்று நடவடிக்கை (Disciplinary action) ஐ எதிர்பார்த்தே எனக்கூறி இவ்வாறான நிகழ்வுகள் எமது அந்தஸ்தைப் பாதிக்கும் எனத்தெரிவித்தேன்.

பின்னர் நீதிபதி எதிரியை கைது செய்து 25,000ரூபா பிணையில் செல்ல அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

நான் இவ்விடயத்தை முன்னெடுத்ததன் காரணம் நஷ்டஈடு பெறுவதற்காகவல்ல. ஒரு முறையான (Disciplinary action)ஐ பெறுவதற்காகவே முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் கல்வி திணைக்களத்திற்கு என்ன தயக்கம்?

ஆர். தர்மராஜா

கொட்டாஞ்சேனை

## நேர்த்தியான பதில்கள்

191சரிநிகரில் முழக்கத்தில் இருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டிருந்த கவிஞர் சக்கரவர்த்தியின் நேர்காணல் வாசித்து மகிழ்ந்தேன்.

கேட்ட கேள்விகளுக்கு அளித்திருந்த பதில், அதில் அவர் கையாண்ட மொழி யாவும் மிக நேர்த்தியாக அமைந்திருந்தன. அவரது ஒவ்வொரு பதிலையும் நான் எனக்குள் இருந்து வருவதுபோலவே உணர்ந்தேன். எனது பாராட்டுக்கள்.

**மு. பொ.,**
**தெஹிவளை.**

## சந்திக்க அவாவுற்ற படைப்பாளி!

சரிநிகர் 191வது இதழ் குறித்து சில வார்த்தைகள் எழுத வேண்டும். கடந்த சில வாரங்களாக சரிநிகரில் ஏற்பட்டிருந்த மந்த நிலையை போக்குமாப் 'போல் இவ்விதழ் மிக மிக அவதானத்துடனும் கனதியுடனும் தொகுக்கப்பட்டிருகின்றது. குறிப்பாக சக்கரவர்த்தியின் நேர்காணலில் அவரை முழுமையாக தரிசிக்கும் வாய்ப்பை சரிநிகர் எமக்கு ஏற்படுத்தி தந்துள்ளதை பாராட்டவே வேண்டும். நான் நெடுநாளாய் சந்திக்கவும், கருத்துப்பறிமாறவும் அவாவுற்றிருந்த ஓர் தைரியமுள்ள படைப்பாளி என்ற வகையிலும் எதையும் மறுபரிசீலனைக்குட்படுத்துகின்ற நெஞ்சுறுதியும், தெளிவான சிந்தனையுமுள்ள மனித நேயமிக்கவர் என்ற வகையிலும் அவரின் நேர்காணல் அனேக விடயங்களை எனக்குத் தெளிவு படுத்திற்று.

"கல்வெட்டுக்களை" (சிறுகதை) படிக்கும் போது நெஞ்சில் மையங் கொண்டிருக்கும் எத்தனையோ வெட்டுக்கள் தன் காயங்களை தழுவிப்பார்த்தபடி வேதனித்துக் கொண்டது. ஒட்டுமொத்தமாக பழிவாங்கப்பட்ட முஸ்லிம் அப்பாவிகளின் கண்ணீருக்கும் சாவுக்கும் போராட்ட வடிவம் கொடுத்த தமிழ்ப்போராளிகளின் ஈனச்செயலுக்கான மனம் உறுந்துதலை, சில படைப்பாளிகள் வெளிக்கொணர்வது ஆறுதலாய் உள்ளது. தவறுகள் உணரப்படவும் திருத்தப்படவும் வேண்டும். விஷேடமாக சக்கரவர்த்தி, ஸ்டாலின் போன்றோரை இங்கு சுட்டிக்காட்ட விழைகின்றேன். புலம்பெயர் சஞ்சிகைகளில் எழுதி வரும் இன்னும் அனேகர் இருக்கலாம். அவர்களின் தூரநோக்கும், மனித நேயமும் தொடருமெனில், தூர்ந்து போய்க் கொண்டிருக்கும் உறவுகளுக்கு புத்துயிரூட்ட முடியுமென்பது என எண்ணம்.

சக்கரவர்த்தி போன்று அனேக துணிச்சல்கார எழுத்தாளர்கள் புலம்பெயர் சஞ்சிகைகளில் எழுதி வருகின்றனர். இவர்களின் கருத்துக்களையும் சரிநிகர் வாசகர்களுக்கு தெரியப்படுத்தினால் என்ன?

**அறபாத் ,ஓட்டமாவடி**

## இது எமது அபிப்பிராயம்

எமது இந்த விமர்சனம், இதழ் 192 சரிநிகரில் வெளியான சுந்தரியின் "திசை தெரியாக் காற்று" என்ற கதைக்கானது.

சுந்தரியின் "திசை தெரியாக் காற்று" படிக்கக் கிடைத்தது. எமக்கு மிகவும் பிடித்தது.

ஆதலால் இவர் மேலும் எழுத வேண்டும் என்று போர்மலாக கேட்கிற அதே சமயம், அவர் (சுந்தரி) கதையின் நடையில், வடிவத்தில் இன்னும் சோதனை முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதும் எமதவா.

உதாரணத்துக்கு கதையில் வரும் அவள் என்பது ஒரு குறிப்பிட்ட பெயர் (சாந்தி காந்தி. இத்யாதி) என்றால் சிலசமயம் சாந்தி சாப்பிட்டாள். சாந்தி படுத்தாள் என்று எழுதும் போது அது தேவையற்றதாகத் தோன்றுகிறது. இதுவே, அவள் படுத்தாள். அவள் சாப்பிட்டாள். என்று இருக்கும்போது (பெயர்களுக்குப் பதிலாக அவள் என்று போடும் பட்சத்தில்) பெரிதாக வித்யாசப்படாது என்று புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

கதையின் ஆரம்பம், அவள் நடந்தாள் என்று ஆரம்பித்தால், பிறகு 'சாந்தி சாந்தி' போல 'அவள் அவள்' என்பதைத் தவிர்த்து விடலாம்.

மற்றது, "(சு)றெபெக்கா வெஸ்ற் சொன்னதுபோல" என்று அவள் எண்ணுவது கதையோடு ஒட்டவில்லை. கதையோடு சேர்ந்து ஒன்றிப் போகும் போது அது பிறிம்பாக துருத்திக் கொண்டு நிற்கிறது. அவளின் குரலாய்ப் போய்க் கொண்டிருக்கும் கதை டப்பென்று இன்னொரு 'அவள்' சொன்னதை சொல்வது (சொன்னது யதார்த்தமே ஆயினும்), அதுவும் இரண்டு மூன்று கதாபாத்திரங்களே வரும் கதையில் அது அவளது நியாயமான உணர்ச்சிகளை குறைக்கிறது போல் இருக்கிறது. அவள் அவளாகவே கோபப்படுவதுதான் நெஞ்சை குத்தும்.

இந்தக் கதையில் வரும் சம்பந்தப்பட்ட பெண்ணின் காதலனது பக்கம், மற்றும் அவளது நண்பனினது பக்கம், அந்த கதைப் பெண்ணின் பார்வையிலேயே எமக்குள் (வாசகர்) விழுகிறது.

அதில் இருட்டடிப்பு செய்யப்பட்டது போல தோன்றாமல், ஒரு சாதாரண பெண், நியாயமான நேசம்- தரப்படாத அவளுக்கான மரியாதை- திருப்பித் பெறப்படாத அளவற்ற காதல் போன்றவற்றினால் அலைச்சற்குட்பட்டு நேசித்த இரண்டு முகங்களாலும் ஏமாற்றத்திற்குட்பட்டு, இறுதியில் சமூகத்தின் முன் இனி என் இருப்பு என எழுந்து நின்று அசாதாரணமான கதை.

சுந்திரியிடம் போர்மலாக மட்டுமல்ல படு சீரியஸாகவும் இதைத் தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 'இன்னும் நிறைய நிறைய உங்கள் மொழியில் நீங்கள் எழுதுங்கள்."

**பிரதீபா, தி. கனக நிர்மலா.**

## அரசின் சுயரூபம் இதிலுமா?

எமது நாட்டில் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்காக முன்னைய அரசினால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை பெறும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே கல்விக் கல்லூரி ஆகும். இதுவே வெற்றி பெற்ற ஓர் ஆசிரிய பயிற்சி வழங்கும் நிறுவனமாக இன்று கொள்ளப் படுகின்றது.

கல்விக் கல்லூரியில் பயிற்றப்பட்டவர்களை ஆசிரிய நியமனங்களை நிரப்பும் போது அவர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதே வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடைமுறையாகும்.

அவ்வாறு இருந்தபோதிலும் கல்விக் கல்லூரியில் பயிற்றப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்களின் பின்னர் ஆசிரிய நியமனம் வழங்கப்படுவது இதுகாலவரை நிலவிவந்த முறையாகும்.

கல்விக் கல்லூரிக்கு உள்வாங்கப்படும் ஆசிரிய பயிலுனர்களுக்கு பரீட்சைகள் கல்விக் கல்லூரியினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் நடாத்தப்படும்.

அவ்வாறு இருந்தபோதிலும் 1996ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் கல்விக் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்பட்ட பயிலுனர்களுக்கு 1ம் ஆண்டு, 2ம்ஆண்டு பரீட்சைகளை தேசிய கல்வி நிறுவகம் (NIE) நடாத்துவது என முடிவு செய்யப்பட்டது.

இதன்படி 3 பாடங்களில் சித்தியெய்தத் தவறுவோர் சித்தியடையாதோர் எனக்கருதப்பட்டு அப்பரீட்சையை முழுமைப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது.

சந்தர்ப்பவசமாக சில கல்விக் கல்லூரிகளில் குறிப்பிட்ட பாடங்களுக்கான விரிவுரையாளர்கள் இல்லாததன் காரணமாகவும், எங்களுக்கு தேசிய கல்வி நிறுவகம் பரீட்சை நடாத்தக் கூடாது எனக் கருதியும் மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, வவுனியா ஆகிய கல்விக் கல்லூரிகளுக்கு அறிவிக்காமல் ஏனைய கல்விக் கல்லூரிகளான சிங்கள மொழிக் கல்விக் கல்லூரிகளினதும், சிறிபாத, பஸ்துன்ரட்ட கல்விக் கல்லூரிகளினதும் பயிலுனர்கள் ஒன்றிணைந்து தேசிய கல்வி நிறுவகம் (NIE) பரீட்சையை பகிஷ்கரித்தனர். (1997ம் ஆண்டு (NIE) பரீட்சை வர்த்தமானி அறிவித்தலின்படி கட்டாயமாக்கப்பட்டது) அதனால் அக்கல்விக் கல்லூரிகள் மூடப்பட்டன.

பரீட்சையை பகிஷ்கரிக்காத வடகிழக்கு கல்விக் கல்லூரிகள், யுத்த சூழ்நிலையிலும், தனது செயற்பாட்டைத் தொடர்ந்தது பகிஷ்கரிப்பில் ஈடுபடாததற்கு வடகிழக்கு கல்விக் கல்லூரிகளின் பயிலுனர்கள் ஏனைய கல்லூரி பயிலுனர்களால் தூசிக்கப்பட்டனர்.

அரசுக்கு விசுவாசமாக தங்களது செயற்பாட்டை காட்டியமையால் அவர்களுக்கு ஏனையோரைவிட ஆசிரிய நியமனம் முன்னர் வழங்கப்படும் என அப்போது கூறப்பட்டது. பின்னர் கல்விக் கல்லூரி இறுதிப்பரீட்சையை நடாத்துவதற்கு தீர்மானிக்கும்போது கூட வடகிழக்கு கல்விக் கல்லூரிக்கான பரீட்சையை ஏனைய கல்விக் கல்லூரிகளுடன் ஒன்றிணைந்து நடாத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சிங்கள மொழிக் கல்லூரிகள் சிறிபாத, பஸ்துன்ரட்ட கல்லூரிகளிடையேயும் நிலவியது.

அவ்வாறு இருந்தபோதிலும் 1998 மே மாதம் பரீட்சை நடாத்தப்பட்டு ஜுன் 1ம் திகதி வடகிழக்கு கல்லூரிப் பயிலுனர்கள் ஒரு வருட வெளியகப் பயிற்சிக்காகப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

ஏனைய கல்விக் கல்லூரிகள் 1998 டிசெம்பர் மாதம் இறுதிப் பரீட்சையை நடாத்தியது.

1999ஜுன் 30ல் சகல பயிற்சிகளையும் முடித்துக்கொண்ட வடகிழக்கு கல்லூரி பயிலுனர்கள் வெளியேறினர்.

இதன்பின் இறுதிப் பெறுபேற்றை தீர்மானிப்பதற்காக தேசிய கல்வி நிறுவகத்திற்கு உரிய ஆவணங்கள் அனுப்பட்ட போதிலும் பெறுபேற்றை வெளியிடுவதிலும் இழுத்தடிப்புச் செய்யப்பட்டது.

இறுதிப் பெறுபேற்றை பதிவுசெய்வதற்கான ஆவணத்தைக்கூட 1999 டிசெம்பர் ஆரம்பப் பகுதியிலேயே தேசியக் கல்வி நிறுவகம் வட-கிழக்கு கல்விக் கல்லூரிகளுக்கு அனுப்பிவைத்தது. (இவ் ஆவணம் 1999 ஜுன் மாதத்திற்கு முன்னர் அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்) இவ்வாறான இழுத்தடிப்பு நிகழும் இந்நிலையில் நாட்டின் பரவலான பகுதிகளில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அந்நியமனங்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு இழுத்தடிக்கப்படும் ஆசிரிய நியமனம் அரசுக்கு விசுவாசம் காட்டிய சிறுபான்மையின வடகிழக்கு கல்விக் கல்லூரி பயிலுனர்களுக்கும், விசுவாச மற்றமுறையில் நடந்து கொண்ட பெரும்பான்மையின கல்விக் கல்லூரி பயிலுனர்களுக்கும் ஒன்றாகவே வழங்கப்படும் என தற்போது கூறப்படுகின்றது.

சிறுபான்மையிரை பெரும்பான்மையாகக் கொண்ட வடகிழக்கு கல்விக் கல்லூரிகளின் பயிலுனர்கள் விடயத்தில் அரசாங்கமானது தனது சுயரூபத்தை வெளிக்காட்டி விட்டது என்றே கூறவேண்டும்.

இந்நிலை தொடர்பாக வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் காத்திரமான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இவர்களின் மீது பயிலுனர்கள் விசனமடைந்த நிலையில் உள்ளனர். இனியாவது இவ்விடயத்தை சுட்டிக்காட்ட முன் வருவார்களா?

**- ஹஸன்**

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்:sarini@sltnet.lk

## கொலை வெறியர்கள்!

யாழ் கண்டிவீதியில் பளையை அண்டிய பகுதிக்குள் புலிகள் ஊடுருவியதைத் தொடர்ந்து அந்த ஊடுருவலுக்கு எதிரான தாக்குதலை "வலிச்சக்கர" என்ற பெயரில் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் அனுருத்தர் ஓரங்கட்டப்பட்டு, ஜனாதிபதியின் நேரடி மேற்பார்வையில் இந்த யுத்தம் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தை சென்றடைவது தான் புலிகளின் பிரதான நோக்கம் என்பது ஏற்கெனவே வெளிப்படையாக தெரிந்த விடயம். "தமிழ் தேசத்தின் கலாசார தலைநகரான யாழ்ப்பாணத்தை அடைவதற்காக யாழ் நகருக்கான வாசலை திறந்து விடுவதில் புலிகள் மிகவும் உறுதியான தீர்மானத்துடன் உள்ளனர்" என்று பாலசிங்கம் ஒஸ்லோவில் வைத்து கடந்த மாதமே தெரிவித்திருந்தார்.

அந்த முயற்சி ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டது போலும்.

யுத்தம் - ஓயாத அலைகள் - 3 தொடங்கி ஒருவாரத்துக்குள்ளாகவே புலிகள் கணிசமான பகுதிகளை மீட்டுள்ளதுடன் தாம் யாழ் நோக்கி நகர்வதற்கேற்ற விதத்தில் கண்டி வீதிக்கு தரை மார்க்கமாக முல்லைத்தீவில் இருந்து செல்லக்கூடிய ஒரு பாதையையும் உருவாக்கியுள்ளார்கள்.

இப்போது அதை உடைக்க அரச படைகள் எடுத்து வரும் முயற்சி இப்பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் வரை வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. இந்த முயற்சி ஒருகால் வெற்றி பெற்றாலும் அது ஒரு தற்காலிக முயற்சியாகவே இருக்க முடியும்.

ஆனால், அரச படைகளோ ஜனாதிபதியோ இதுபற்றி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவர்கள் புலிகளை விரட்டி விடலாம் என்று நம்பிக்கையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் புலிகளை விரட்டுகிறதோ, இல்லையோ இந்த நடவடிக்கை அப்பகுதி மக்களில் பலரை அகதிகளாக்கியுள்ளது. கிட்டதட்ட 20,000பேர் வரையானோர் அங்கு அகதிகளாகியுள்ளனர்.

யுத்தம் நடைபெறும் பகுதியிலிருந்து கிளாலிப்பக்கமாக நகர்ந்து வந்த 5000 பேர் அளவிலான இடம்பெயர்ந்தோரை கிளாலிக்கு அப்பால் போகவிடாது படையினர் தடுத்து வைத்துள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்க்கு ரூபா 2000 நிவாரணத் தொகையாகவும், உலர் உணவுப் பொருட்களை பங்கீட்டு முறையில் வழங்கவும் அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த இடம்பெயர்ந்தோர் நிலை பற்றி அரசாங்கத்துக்கு அறிவித்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க அதிகாரிகள் அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்க முயன்ற போதும் அவர்கள் அதை ஏற்க மறுத்து விட்டார்கள். "நாங்கள் காசையோ உணவுப் பொருட்களையோ எதிர்பார்த்து வரவில்லை. உயிரைப் பாதுகாக்கவே வந்தோம். எங்களைப் பாதுகாப்பான இடம் நோக்கிப் போக அனுமதியுங்கள்" என்று கோபத்துடன் பேசினார்கள்.

லொறிகள் உணவுப் பொருட்களுடன் திரும்பிச் சென்றன.

கிளாலிக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படாததால் பளையில் அவர்கள் அங்குள்ள ஒரு வீடமைப்புத் திட்டத்தில் தங்கியிருக்கின்றனர்.

இருபுறமும் எறிகணைகள் வீசப்படும் பலத்த யுத்தம் நடக்கும் இடத்தில் இருந்து தம்மை வெளியேற அனுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தம்மை மனிதக் கேடயங்களாக பாவிக்கும் ஒரு நடவடிக்கையே என்று கண்டிக்கிறார்கள் அங்குள்ள இடம்பெயர்ந்த மக்கள்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் ஒரு பிரதேசத்தில் யுத்தத்தில் சற்றும் சம்பந்தப்படாத பொது மக்களுக்கு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேற உள்ள உரிமை மறுக்கப்படுவது, உலகெங்கினும் காணமுடியாத மனிதாபிமான செயல். இனவெறி அரசியலின் உச்சக்கட்ட கொலை வெறி மனோபாவத்தின் வெளிப்பாடு இது.

யுத்தத்தில் மனிதர்கள் கேடயங்களாகப் பயன்படுத்தப்படுவது சர்வதேச சட்டத்துக்கு எதிரான ஒரு குற்றம். ஆயினும், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இடம்பெயர்ந்தோர்க்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் ஆகியோரிடம் முறையிட்டும் இதுவரையும் எந்த நடவடிக்கைகளும் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் புலிகளை முறியடிப்பதற்கு வசதியாக மக்களை தமக்கு கேடயமாக பயன்படுத்துகிறது என்பதை தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் அவர்களை தடுத்து வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது வெளிப்படை.

ஆனாலும் அரசாங்கம் அதைத் தான் செய்கிறது.

இந்த நடவடிக்கை ஒரு போர்க் குற்றம் மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மீறலும் ஆகும்.

இதை உடனடியாக அரசாங்கம் நிறுத்தியாக வேண்டும். வெளியேற விரும்புகிற மக்களை வெளியேற அனுமதிக்க வேண்டும். மக்களைக் கொல்லுவது மட்டுமல்ல கொல்லப்படக்கூடிய சூழலில் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வைத்திருப்பதும் கூட கொலைக் குற்றம் தான் என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்வது நல்லது.

ஏனென்றால், அங்குள்ள மக்கள் ஒவ்வொருவருடைய உயிருக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டிய பொறுப்பு யுத்தத்தை நடாத்துபவர் என்ற முறையில் அவரிடம்தான் இருக்கிறது. ஒருவேளை அவரிடமும் இனவாத கொலை வெறி என்ற பிசாசு குடிபுகுந்து விட்டதோ?

தமிழ் மக்களுக்கு அம்மையார் சொல்லும் பதில் தான் என்ன?

எப்பாவல:

## காற்றில் பறக்கும் அரசின் வாக்குறுதி!

கடந்த 30ம் திகதி கொழும்பில், எப்பாவலை பொஸ்பேட் கனிய வளத்தை அரசாங்கம் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பதனை எதிர்க்கும் முகமாக மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. பலதரப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள், மத அமைப்புகள், மகளிர் அமைப்புகள், பிரதேச மக்கள் அமைப்புகள் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த 1000க்கும் அதிகமானவர்கள் இந்நிகழ்வில் பல மணிநேரங்கள் கலந்து கொண்டனர்.

பொ.ஐ.மு அரசு ஆட்சியில் அமரும் முகமாக வழங்கிய போலி வாக்குறுதிகளில் பொஸ்பேட் கனிய வளத்தை பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கமாட்டோம் என்ற வாக்குறுதியும் பிரதான இடத்தை பெற்றிருந்தது

வடமத்திய மாகாணம் அனுராதபுரம் மாவட்டத்தின் எப்பாவலை பிரதேசத்தில் அமைந்துள்ள இக்கனிய வளப்பகுதி 1971ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், 1992 டிசம்பர் 15ம் திகதி வளத்தை மிகவும் பயன்பாடுடையதாக மாற்றும் முகமாக டெய்லி நியூஸ் பத்திரிகையில் விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சினால் விளம்பரம் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இவ்வளத்தை பெற்றுக் கொள்ளவும், கொள்வனவு செய்யவுமென பன்னாட்டு நிறுவனங்கள் பல முயற்சித்தமையும் பரபரப்பாக பேசப்பட்ட விடயங்களாகும்.

தற்போதைய சந்திரிக்கா அரசாங்கம் இதுநாள் வரை நீறு பூத்த நெருப்பாக இருந்த பிரச்சினையை ஊதிப் பெருப்பித்து விட்டது. எனலாம். பொ.ஐ.மு. செயலாளர் கூட்டத்தில் வளம் விற்கப்பட மாட்டாது என தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், ஐ.எம்.சி அக்றிக்கோ மற்றும் ஜப்பானின் டோமன் நிறுவனங்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றமையை அறியக் கூடியதாகவும் உள்ளது.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாதுளுவாவே சோபித தேரர், வண பிதா ஒஸ்கா அபேரத்ன ஆகிய மதத் தலைவர்கள், இந்த ஒப்பந்தங்களினால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் வீடு வாசல்களை இழக்க வேண்டிய நிலைமையையும், ஒரு அருந்தலான வளமொன்றின் துஷ்பிரயோகத்தையும் சுட்டிக் காட்டி கண்டனங்களையும் தெரிவித்திருந்தனர்.

உத்தேச இத்திட்டத்தின் பங்குதாரர்களில் முக்கியமான நிறுவனங்களில் 'பிறீபோட் மக்மோறன்' நிறுவனமும் ஒன்றாகும். இந்நிறுவனம் சூழலை மாசுபடுத்துவதில் மிகவும் பெயர் போன நிறுவனமாக கருதப்படுகின்மையும் குறிப்பிடத்தக்கது.

இந்த பொஸ்பேட் கனிய வளத்தின் உரிமையானது தற்போது இலங்கை அரசுக்குரித்தான லங்கா பொஸ்பேட் லிமிட்டெட் நிறுவனத்திற்குரியது. தற்போது அவர்கள் வருடத்திற்கு 40,000 மெ.தொன் வளத்தை பெறுவதுடன் இவற்றை பலவிதத்தில் இரசாயன வெளியீடுகளாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர்.



எவ்வாறாயினும் ஐ.எம்.சி. அக்றிக்கோ நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியான, நொவெல் இன்டர்நெஷனல் நிறுவன முகாமையாளர் உதய பொரலஸ்ஸ, இந்த செயற்திட்டத்தினால் இலங்கையின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு தொழிநுட்ப மற்றும் நிதி வளங்களை பயன்படுத்தி பாரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது என்று தெரிவித்த கருத்து எந்தவித ஆதாரமுமற்ற வெளிநாட்டு மதலீட்டாளர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டது என்று குற்றம் சாட்டுகிறார் சூழலியலில் தொடர்பாகப் பணி புரியும் ஆய்வாளர் ஒருவர்.

இவர் கருத்து இவ்வாறிருக்க, கடந்த மார்ச் 30ம் திகதியன்று நடைபெற்ற பாரிய மக்கள் ஆர்ப்பாட்டமானது பொஸ்பேட் வளம் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுவது பற்றி பொதுமக்கள் அதிகம் விசனமடைந்துள்ளனர் என்பதையே காட்டுகின்றது.

ஆய்வுப் பிரதேசம் எனக் குறிப்பிடப்படுள்ள 56 சதுர கி.மீ. நிலப்பரப்பிலுள்ள 28 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர நேரிடும். 2500 குடும்பங்களைச் சேர்ந்த 12,000 மக்கள் வீடுவாசல்களை இழக்க நேரிடும்..

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசாங்கம் தமது கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் இக்கனிய வளத்தை விற்க நடவடிக்கை எடுக்குமாயின் தாம் மிகவும் தீவிரமாக இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என கோஷமெழுப்பினர்.

இதற்கிடையில் ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தவென பெருமளவு பொலிசார் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் வழமை போல தனது வாக்குறுதிகளைப் பறக்க விட்டு விட்டு மக்களை நடுத்தெருவில் விடப்போகின்றதுஎன்பது தான் தெளிவாகின்றது.

## வெலிக்கடைப் பெண் கைதிகள் தாக்குதல் இதுவும் சமாதானப் பொதியில் ஒரு அங்கமோ?

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கைதிகளுக்கிடையிலான மோதல்கள் குறித்த செய்திகள் வாசகர்கட்குப் புதியவை அல்ல. பெருமளவு பெண் கைதிகளைக் கொண்ட இந்தச் சிறைச்சாலையில் இருந்த தமிழ்க் கைதிகள் சிங்களக் கைதிகளால் கடந்த ஜனவரியில் மிகவும் மோசமான முறையில் தாக்கப்பட்டது குறித்து எமக்கு கிடைத்த தகவல்கள், சிறைச்சாலை நிர்வாகமுட்பட அங்குள்ள சிறைச்சாலை ஊழியர்கள், கைதிகள் மத்தியில் இனவாதவெறி எவ்வளவுக்கு மோசமாக ஊட்டப்பட்டிருக்கின்றது என்பதற்கு நிறைய ஆதாரங்களைத் தருகின்றன.

எந்தக் காரணமும் இல்லாமல் சிறைக் கைதிகளை, அதுவும் தமிழ்க் கைதிகளை வாய்க்கு வந்தபடி திட்டுவதும், கண்டபடி உதைப்பதும் அங்கு மிகவும் சாதாரணமான விடயமாகி விட்டது. அண்மையில் நடந்த கைதிகட்கிடையிலான பெரும் மோதலுக்கு காரணமாக சம்பவம் மிகவும் சிறிய, ஆனால் சிறைக்காவலாளி ஒருவரது இனவெறியின் காரணமாக பெரிதாகிப் போன சம்பவத்தின் அடியாக உருவானது என்று நமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு தமிழ் (பெண்)கைதிக்கும் சிங்களக் கைதிக்கும் இடையில் இடம் பெற்ற சிறிய வாக்குவாதம் ஒன்றே பின்னர் பெரிய ஒரு கலவரம் உண்டாகவும், பெருமளவிலான தமிழ்க் கைதிகள் காயப்படவும் காரணமாக அமைந்தது என்று தெரிய வருகிறது.

பாலன்தேவகி என்ற 24 வயது இளம் பெண் கடந்த ஜனவரி மாதம் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவர்.

அவர் தண்ணீருடன் குழாயில் முகம் கழுவிக் கொண்டிருக்கும் போது தான் இந்தக் கலவரத்திற்கான முதற் சம்பவம் நடைபெற்றது. குழாயில் நேரடியாக முகம் கழுவ வேண்டாம் என்றும், வாளி ஒன்றில் தண்ணீரை எடுத்து வைத்து முகம் கழுவுமாறும் அவருக்கு இரு சிங்களக் கைதிகள் கூறியிருக்கிறார்கள். தன்னிடம் ஒரு வாளி இல்லாததால் தான் நேரடியாக கழுவவேண்டி இருக்கிறது என்று அவர்களுக்குப் பதிலளித்திருக்கிறார் தேவகி.

இந்த விடயம் சிறிது வாக்குவாதத்தை ஏற்படுத்தியது. அதன் பிறகு அக்கைதிகள் இருவரும் இவ்விடயத்தை அங்கு உள்ள ஒரு பெண் சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். அந்த உத்தியோகத்தர் அவ்விடத்திற்கு வந்து எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் தேவகியை கண்டபடி தாக்கியிருக்கிறார். தேவகி உணர்விழந்து போன பின்னும் கூட அவளை அவர் விடவில்லை. உணர்விழந்து தேவகியை திரும்பத் திரும்ப பல தடவை வெறியுடன் தாக்கியும் உதைத்தும் இருக்கிறார். இதைக் காணச் சகிக்காத இன்னொரு தமிழ்க் கைதி -அவரது பெயர் விமலா - உணர்விழந்த ஒருவரை இப்படித் தாக்குவது சரியா என்று நியாயம் கேட்டிருக்கிறார். வந்தது வினை திடீரென அங்கு குழுமிய சகல கைதிகள் இடையிலும் வாக்குவாதம் எனற் அடிப்படையில் இரு பிரிவாக நடைபெற்றது. இந்த வாக்குவாதம் எல்லாத் தமிழ்க் கைதிகளையும், எல்லாச் சிறைச்சாலை அதிகாரிகளுமாக சேர்ந்து நையப்புடைப்பதில் போய் முடிந்தது.

தேவகி ஐந்து நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது உடலில் இருந்த காயங்கள் தொடர்பான வைத்திய அறிக்கை ஒன்று சிறைச்சாலை வைத்தியரிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை அவர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளது.

நியாயம் கேட்ட விமலா சம்பவம் நடந்த பின்பும் சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டிருக்கிறார். சம்பவம் நடந்தபின் சகல தமிழ்க் கைதிகளும் அங்குள்ள தேவாலய கட்டிடம் ஒன்றுக்குள் விட்டு அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இரவு 7 மணி அளவில் விமலா வெளியே அழைக்கப்பட்டு எந்தக் காரணமும் கூறப்படாமல் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

அன்று தாக்கப்பட்டவர்களில் ஒருவரான மாணிக்கவாசகம் (19) இன்னமும் தான் மார்புவலியால் அவதிப்படுவதாக தெரிவிக்கின்றார். சுப்பிரமணியம் வசந்தி (24), லிங்க மூர்த்தி யோகராணி (23), பாக்கியமேரி சின்னப்பன் (50), ஈஸ்வரி (20) ஹேமகாந்தி (24) ஆகியோர் அன்றைய தினம் கடுமையான தாக்குதலுக்குள்ளான சிலர் ஆவர்.

அரச தரப்பினால் இக்கைதிகள் மீதான தாக்குதலை நடாத்தியவர்கள் தொடர்பாக எந்த விசாரணைகளும் நடாத்தப்பட்டதாக தெரியவில்லை. இவர்களில் முதலில் தாக்கப்பட்ட தேவகி, விமலா ஆகியோர் தம்மீது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய உத்தேசித்திருப்பதாக தெரியவருகிறது.

தமிழ்க்கைதிகள் பாதுகாப்பாக இருக்கும் விதத்தில் எத்தகைய ஒழுங்கு முறையையும் பல தடவை திரும்பத்திரும் இம்மாதிரியான சம்பவங்கள் நடந்த பின்பும் சிறைச்சாலை நிர்வாகமோ அரசாங்கமோ எடுக்க முயலவில்லை.

தமிழர்கள் தானே, அவர்கள் தாக்குப்படத் தான் என்பதுவும் அரசாங்கத்தின் 'சமாதானப் பொதியில்' ஒரு அம்சமோ என்னவோ?